3·4
93

# த.ச.பே.நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

தொகுதி-18 எண்-3

18மார்ச் 1992

(C)

V2H,31 r·72
N92-18-3

வெளியீடு 16-10-1992 Issued 16-10-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 18, 1992 - தொகுதி 18 எண். 3
Wednesday the 18th March, 1992 - Volume 18 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

304

உள்ளடக்கம்:

18-3-1992


| | பக்கங்கள் |
|---|---|
| 1. கவன ஈர்ப்பு :— | |
| (அ) விரகாலூர் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு மானியம் வழங்கப்பெறாதது குறித்து .. .. .. | 487—488 |
| (ஆ) தஞ்சை மாவட்டம், பழையாறு பகுதி ஆழ்கடலில் அமெரிக்க நிறுவனத்தை மீன் பிடிக்க அனுமதிப்பதால் மீனவர்கள் பாதிக்கப் பெறும் நிலை குறித்து .. .. | 489—491 |
| 2. அறிக்கை அளித்தல்— | |
| மனுக்கள் குழு. | 492 |
| 3. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | 492—583 |
| (அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—தொடர்ச்சி. | |
| (ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி. | |
| (இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி. | |
| திரு. இளம்வழுதி .. | 493—505 |
| திரு. எஸ். டேனியல் ராஜ் .. | 506—512 |
| *திரு. எஸ். திருநாவுக்கரசு .. | 513—529<br>525—539 |
| *திரு. ச. இராமச்சந்திரன் .. | 539—559 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் .. | 559—582 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 583—584 |


டி2 53-37—1

V211,31 N92
N92-18-3
182175

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## பங்குனி 5, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023
## 1992 மார்ச் 18, புதன் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார் ''

மது அருந்தக் கூடாது. ஒருவேளை சிலர் அருந்தினால் அவர்கள் சான்றோரால் மதிக்கப்படுவதை விரும்பாதவர்களாய் இருப்பர்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு.

#### (அ) விரகாலூர் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு மானியம் வழங்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள்—இருக்கையில் இல்லை. திரு. சிங்காரம் கேட்கிறீர்களா ? (குறுக்கீடு) சரி, கேளுங்கள். திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஒன்றியம், விரகாலூரிலுள்ள உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு மானியம் வழங்காதது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிக்கை.

11–9–1990 நாளிட்ட கல்வித்துறை, அரசாணை (நிலை) எண் 1276-ன்படி திருச்சி மாவட்டம், விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளி மற்றும் இருங்காலூர் செயின்ட் ஜான் உயர்நிலைப் பள்ளி ஆகிய இரு பள்ளிகளும் எதிர் காலத்தில் எப்போதும் மேல் நிலை வகுப்புக்கு நிதியுதவி கோரக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. 26–7–1990-க்குப் பிறகு மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும் எந்த ஒரு தனியார் உயர் நிலைப் பள்ளியும் அரசின் நிதியுதவியை ஒருபோதும் கோரக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் மேல் நிலைப் பள்ளி களாக உயர்த்தப்பட வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்துள்ளது.

2. சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. லோகாம்பாள், விரகாலூர் கிராமம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்றும், அங்கு பயிலக்கூடிய மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூல் செய்து பள்ளியை நடத்த இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்து, ஒரு போதும் மேல் நிலை வகுப்புகளுக்கு நிதியுதவி கோரக்கூடாது என்ற நிபந்தனையை விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் மேல்நிலைப் பள்ளிக்கு மட்டும் தளர்த்தி மூன்றாண்டு களுக்கு மட்டும் நிதியுதவி கோரக்கூடாது என்று மாற்றி ஆணை வழங்குமாறு அரசைக் கோரினார். ஆனால், 26–7–1990க்குப் பிறகு மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் எந்த ஒரு 'தனியார் உயர் நிலைப் பள்ளிகளும், நிரந்தரமாக அரசின் நிதியுதவி மேல் நிலை வகுப்புகளுக்கு வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனை யின் அடிப்படையிலேயே மேல் நிலைப் பள்ளி தகுதி வழங்கப்படு வதால் விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் மேல் நிலைப் பள்ளிக்கு மட்டும் இந்த நிபந்தனையை வழங்க இயலாது என்று ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்களுக்கு ஒரு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திருமதி லோகாம்பாள் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு மாறாக அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆரம்பிக்கின்ற எந்தக் கல்வி நிறுவனமானாலும் அவர்களுக்கு நிதியுதவி செய்ய லாமா வேண்டாமா என்பதைத்தான் இப்பொழுது அரசு பரிசீலித் துக் கொண்டிருக்கிறது.





(ஆ) தஞ்சை மாவட்டம் பழையாறு பகுதி ஆழ்கடலில் அமெரிக்க நிறுவனத்தை மீன்பிடிக்க அனுமதிப்பதால் மீனவர்கள் பாதிக்கப்பெறும் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர் மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பழையாறு கடற் பகுதியில் அமெரிக்க நிறுவனத்தை ஆழ்கடலில் மீன்பிடிக்க அனுமதிப் பதால் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை.

ஆழ்கடல் மீன்பிடித் திட்டம் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளதாகும். இத்திட்டத்தின்படி அதிக அளவில் மீன்கள் பிடிக்கப் பட்டு இவற்றின் மூலம் அன்னியச் செலாவணியும் கிடைக் கிறது. இவர்கள் பிடிக்க உள்ள ட்யூனா மீன்கள் நம் நாட் டில் பிடிக்கப்படவில்லை. இவை ஆழ்கடல் மீன்கள், வெளி நாட்டிலேயே விரும்பி உண்ணப்படுகின்றன. இக்கம்பெனி இன்னும் இத்திட்டத்தை முழுமையாகத் தீட்டவில்லை. முதல் விவரப்படி சுமார் ரூ. 550 கோடி முதலீட்டில் ஆழ்கடல் மீன்களைப் பிடித்து, கப்பலிலேயே பதப்படுத்தி, கரை சேர்ந்த வுடன் விமானம் மூலம் உடனடியாக ஜப்பான் நாட்டிற்கு ஏற்று மதி செய்ய உத்தேசம் தெரிகிறது. இந்த ஆழ்கடல் ட்யூனா மீன்கள் நீண்ட கொடி தூண்டில் ( Long line fistring ) மூலம் பிடிக்கப்படுகின்றன. இந்தமுறை நம் மீனவருக்குத் தெரி யாது. ஆகவே வெளிநாட்டுதவி தேவை. சிறிது சிறிதாக நம் மீனவர் இம்முறையில் பழக்கம் பெற்று, மிகுந்த வேலை வாய்ப்புப்பெறுவர் எனவும், ரூ. 550 கோடி முதலீடு காரண மாக துறைமுகப் பகுதியும் முன்னேறும் எனவும் எதிர்பார்க்க வாய்ப்புண்டு. மேலும் இத்தூண்டிலுக்கு பொடி மீன்கள் தூண்டில் மீன்களாகத் தேவை. அவை நம் கட்டுமர மீனவரிடமே வாங்க உள்ளனர். இதுமூலம் விலை போகாத, உணவு

மீன் போக மற்ற மீன்களுக்கும் சந்தை ஏற்படுகிறது. கட்டுமரம் மற்றும் ஆழ்கடல் ஆகிய இருவகை மீன்பிடி முயற்சிகளும் வெவ்வேறிடத்தில் நடைபெறுவதால் இருவருக்கும் ஒருவழியிலும் போட்டியிட வாய்ப்பில்லை.

ஆழ்கடல் மீன்பிடிக் கலன்கள் அதிகார எல்லைக்கு அப்பால் ( Beyond Territolial water ) ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் கட்டுமர மீனவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் நேரிடாது. மேலும் இம்மீன்பிடிக் கலன்களின் நடமாட்டம் நாளொன்றுக்கு இரண்டு முறை கடலோரக் காவல்படையினரால் 10-00 மணி மற்றும் 16-00 மணிக்குக் கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆழ் கடலிலே மீன் பிடிப்பதன் மூலம் இன்றைக்கு 500 கோடி ரூபாய்க்கு இதன் மூலமாக இலாபம் ஈட்டி வருவதாகவும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே கடலிலே மீன் பிடிக்கக்கூடிய மீனவர்கள்—விசைப் படகு மீனவர்களுக்கும், உள்நாட்டு மீனவர்களுக்கும் ஏற்கனவே சாதாரணமாகக் கட்டுமரம் வைத்திருக்கும் மீனவர்களுக்கும் ஏகப்பட்ட பிரச்சினைகள் தமிழ் நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன. விசைப்படகு மூலமாக அந்த மீனவர்கள் மீன் பிடிக்கிறபொழுது அந்த மீன்கள் கலைந்து சென்று விடுகின்றன. மீன் கிடைப்பது இல்லை. வலைகள் அறுந்து விடுகின்றன. இப்படி விசைப்படகு மீனவர்களுக்கும், கட்டுமர மீனவர்களுக்கும் ஏற்கனவே இப்படிப்பட்ட மிகப்பெரிய ஒரு போட்டி, சண்டை, துப்பாக்கிச் சூடு போன்ற கலவரங்கள் தமிழ்நாட்டிலே பல்வேறு நேரங்களிலே ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால் இப்பொழுது அமெரிக்க நிதி நிறுவனத்தோடு இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலே பழையாறு பகுதியிலே மீன் பிடிப்பது என்று சொன்னால் அநேகமாக இதன் மூலமாகத் தமிழ்நாடு அரசுக்கு ஏதும் இலாபகரமாக அதிக மூலதனம் மூலம் வருமானம் கிடைக்கிறதா? அது போன்று உள்நாட்டு மீனவர்களுக்கு இருக்கக்கூடிய அந்தப் பாதிப்பிலிருந்து அவர்கள் மீள்வதற்கு இந்த அரசு இதுபோன்ற நிறுவனங்களைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க கம்பெனி பிடிக்க உள்ள ட்யூனா என்ற மீன் வகை நமது எல்லைக்குள் பிடிக்கப்படுவதில்லை. இவை ஆழ்கடல் மீன்கள். ஆழ்கடல் மீன்பிடித் திட்டம் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளதாகும். அமெரிக்க கம்பெனியே முழுமையான திட்டம் ஒன்றை இதுவரையில் தீட்டவில்லை. மாறாக, கட்டுமர மீன் பிடிப்பும், ஆழ்கடல்



மீன் பிடிப்பும் வெவ்வேறு இடங்களில் நடைபெறும். மேலும் ட்யூனா மீன் வகைகள் நமது அதிகார எல்லைக்கு அப்பால் ஆழ்கடல் பகுதியில் மிகவும் ஆழமான கடல் பாகத்தில் பிடிக்கப்படுவதாகும். எனவே, நமது கட்டுமர மீனவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இருக்காது. இன்னும் சொல்லப் போனால், ட்யூனா மீன்களைப் பிடிக்க நீண்ட கொடித் தூண்டிலில், பொடி மீன்களை வைத்துத்தான் பிடிக்க வேண்டும். இதற்குத் தேவைப்படும் பொடி மீன்களில் உணவு மீன்கள் போக, மீதமுள்ள மீன்களை அவர்கள் வாங்குவார்கள். இதனால் நம் கட்டுமர மீனவர்களுக்கு இலாபம் ஏற்படும்.

முற்பகல் 9-35

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நமது மீனவர்களுக்கு எந்தவொரு பாதிப்பும் வராது; ஆகையினால், அவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். குறிப்பாக, 6 கப்பல்கள், 4 சரக்கு ஏற்றுமதி கப்பல்களோடு சேர்ந்து அவை செல்கின்றன. சுமார் 6,200 மீன்களைப் பிடிப்பதற்கு 4,000 தூண்டில்களைக் கொண்டு போகிறபோது, இந்தக் கப்பல்கள் வரிசையாகச் செல்கிறபோதே, சாதாரணமான ஏழை எளிய கட்டுமர மீனவர்கள், அதைப்போல விசைப்படகு மீனவர்கள் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாவார்கள். காரணம் என்னவென்று சொன்னால், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற பழையாறு கரையிலேயிருந்துதான் அவர்கள் செல்ல வேண்டும். கடலிலேயிருந்து அவர்கள் மீன் பிடிப்பதல்ல; அவர்கள் மீன் பிடித்துவிட்டு, ஓய்வு எடுப்பதற்கு கரைக்கு வருவார்கள். கரையிலேயிருந்து திரும்ப அவர்கள் கடலுக்குச் செல்வார்கள். இப்படிப் போகிறபோது, அந்த மீனவர்களுடைய வலைகள் சுமார் 1 கிலோ மீட்டர் அல்லது ½ கிலோ மீட்டர் தூரத்திலே அந்த விசைப் படகுகள் மற்றும் சாதாரண கட்டுமரப் படகுதாரர்கள் போடுகிறபோது, இவர்கள் அறுத்துவிட்டுச் சென்று விடுவார்கள். இது அவர்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அந்த மீனவர்களுக்கு—பொதுவான மீனவர்களுக்கு—மிகப்பெரிய பாதிப்பை உண்டு பண்ணும். அந்த மீனவர்களுக்கு மிகப்பெரிய அச்சங்கள் வந்திருக்கின்றன. ஆகையினால், இதை மீண்டும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு திரு, டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன்கள் பிடிக்கப்படுவதால் நமது நாட்டிற்கு அன்னியச் செலாவணியும், அதே நேரத்தில் துறைமுகம் அபிவிருத்தி அடையவும், பெருமளவில் வேலை வாய்ப்புகளும் உருவாகும். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல தவறுகள் ஏதேனும் நடக்குமானால், இதுகுறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. அறிக்கை அளித்தல்.

### மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை— தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 16— தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. திரு. எஸ். திருநாவுக்கரசு, இருக்கையில் இல்லை; திரு. ச. இராமச்சந்திரன் (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்; நேற்றே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; என்னுடைய அறையிலேயும் சொல்லியிருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலேயிருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, உங்கள் கட்சியிலேயிருந்து என்பதல்ல; இன்று கட்சித் தலைவர்கள் பேசுகிறார்கள். நேற்றே, நீங்கள் விரும்பினால் பேசலாம் என்று உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தேன். அந்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டீர்கள்.



திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று பேசுவதால் என்ன நட்டம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவதால் நட்டம் ஒன்றுமில்லை; ஒரு உறுப்பினரைப் பேச அனுமதிக்கிறபோது, மற்ற சில உறுப்பினர்களும் என்னிடத்திலே கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : நான்கு பேர்தான் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை; அதை நீங்கள் சொல்லக்கூடாது. நேற்றைய தினம், நேற்றே நீங்கள் பேசிவிடுங்கள் எனக் கூறினேன். அவையினுடைய அலுவல் நேரத்தை நீட்டித்து...... (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : இனிமேல் பேச வேண்டாம் என்று சொல்லுங்கள்; நான் பேசாமல் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை, நீங்கள் பேச வேண்டுமென்று நான் விரும்பினேன். நீங்கள் தான் பேசவில்லை. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எங்கள் கட்சியின் துணைத் தலைவரை பேச அனுமதிக்க வேண்டும். அவரை அனுமதித்து விட்டு, பிறரை அனுமதிப்பதுதான் முறையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அவர் பேசட்டும், திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத் தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு மிகுந்த சிரமங்களுக்கிடையே வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மிகுந்த சிரமங் களுக்கிடையே நேற்றைய தினம் உங்களுக்கு வாய்ப்பளித்தேன். நேற்று 2¼ மணி வரையிலேயும் அலுவல் நேரத்தை நீட்டித்து அந்த வாய்ப்புக்கிடையில் நீங்கள் பேசுங்கள் என்று உங்களுக்கு வாப்பளித்தேன். அந்த வாய்ப்பை, நேற்றையதினம் நீங்கள் பயன்படுத்தவில்லை என்பதைச் சொல்லிவிட்டு நீங்கள் பேசி னால் நன்றாக இருக்கும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி; நன்றி; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறைக்கு இவ்வாண்டு 25,30,65,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 205 தீயணைப்பு நிலையங் கள் உள்ளன. இவற்றில் 75 தீயணைப்பு நிலையங்களில் மட்டும் ஆம்புலன்ஸ் வசதி இருக்கிறது. இந்த வசதியை அனைத்து நிலையங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். இது மக்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதோடு, அரசுக்கு வருவாய் நல்கும். இந்த 205தீயணைப்பு நிலையங்களில் 21 நிலையங்கள் சென்னை நகரத்திலே உள்ளன. மீதமுள்ள 184 தீயணைப்பு நிலையங்களும் மாநிலத்தின் இதரப் பகுதிகளில் உள்ளன. அதிலும் 205 நிலையங்களிலும் உள்ள தீயணைப்பு வண்டிகளின் எண்ணிக்கை 237 தான். இது போதுமானதல்ல. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவிலாவது தீயணைப்பு வண்டியை ஏற்படுத்தித் தர வேண்டும். அதை உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும் ஒரு மாதத்திற்கு இரண்டு என்ற வகையி லாவது தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்த வேண்டும். அதோடு தீயணைப்பு வண்டிகளின் எண் ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும். மேலும் தீயணைப்பு துறையிலே இப்படிப்பட்ட விரிவாக்கங்களைச் செய்யவேண்டிய அவசியத்தைக் கொள்கை விளக்கக் குறிப்பில் 27 ஆம் பக்கத்தில் புள்ளி விவரங்கள் வலியுறுத்துகின்றன. கடந்த 1990 ஆம் ஆண்டு 10,341 ஆக இருந்த தீ விபத்துக்கள் 1991ஆம் ஆண்டில் 12,157 ஆக அதிகரித்து இருக்கிறது. கடந்த 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ. 7,36,94,873 என்றால், 1991 ஆம் ஆண்டில் ரூ. 10,47,48,851 ஆக உயர்ந்துள்ளது. இப்படி விபத்துக்களின் எண்ணிக்கை கூடுகிற காரணத்தால் தீயணைப்புத் துறையின் திறனை, அளவை அதிகப்படுத்த வேண்டியது மிகவும் அவசிய மான ஒன்றாகிறது. இந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்து பணியாற்றுகிறார்கள். எனவே, இவர்களுடைய பணி ஈடு இணையற்றது. அவர் களுக்குச் சலுகை வழங்குகிற விஷயத்திலே, மத்திய அரசு இரா ணுவத்திற்கு எவ்வாறு சலுகைகள் வழங்குகிறதோ அதைப்போல வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, மேலும் அவர்



களுக்கான குடியிருப்புப் பகுதிகள், தீயணைப்பு நிலையங்களுக்கு அருகிலே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9-40

அடுத்து, ஆயத் தீர்வை, நேரம் இல்லாத காரணத்தால், சுருக்கமாகப் பேசுகிறேன். 1989-90 ஆம் ஆண்டில் ஆயத் தீர்வை மூலம் கிடைத்த தொகை ரூ. 301.71 கோடி. ஆனால் 1991ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 434.86 கோடி. 16—7—1991 முதல் நாட்டு மது விற்பனையை ஒழித்ததன் விளைவாக ரூ. 391 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அதற்குப் பின்னால் 1991 டிசம்பர் மாதம் முடிய உள்ள காலங்களில் அரசின் வருவாய் ரூ. 358.30 கோடியாக உயர்ந் துள்ளது. ஆக 5, 6 மாத காலம் மலிவு விலை மது இல்லாத காலத்திலேகூட, ஆயத் தீர்வை மூலம் ரூ. 358 கோடி வருவாய் கிடைத்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டிலே குடிக்கின்றவர் களின் எண்ணிக்கை உயர்ந்து இருக்கிறது. அவர்கள் குடிக்கிற பிராந்தி, விஸ்கி, பீர் போன்றவைகளின் அளவும் உயர்ந்திருக் கிறது என்றுதானே பொருள். இது ஒரு நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை. மதுபான வகைகளுக்குப் பொதுவாக வரியை உயர்த்துவதன் நோக்கமே அரசுக்கு அதிகமாக வருவாய் கிடைக் கும் என்பதை விட, குடிப்பழக்கம் ஓரளவாது, கட்டுப்படுத்தப் படவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், அது பயன்தர வில்லை என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவின் முடிவு கள் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார் கள். அதில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவர்களுக்குப் புனர் வாழ்வு தருவதற்காக ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்குவோம் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. இது பொருளாதார ரீதியாக ஒரு நல்ல சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டம்தான்.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், மற்றும் குடிப்பது இல்லாத தொகுதிகளைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குப் பரிசு வழங்குவது என்றும் குறிப் பிடப்பட்டிருக்கிறது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் களைக் குறைவாகப் பேசுவது சரியல்ல. அது அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது. சக உறுப்பினர்களை இது போல நீங்கள் அறிவுறுத்த விரும்புவது சரியல்ல. உங்களுக்குப் பரிசு கிடைக்காது என்பதோடு நிற்கலாம்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 18

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான், குடிப்பழக்கமே இல்லாதவர்களைச் சார்ந்த தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னேன். அதனாலேதான் அந்தப் பரிசு இங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்குமே கிடைக்கப்போவது இல்லை என்று சொன்னேன். ஏனென்றால் , கிரிக்கெட் பந்தயத்திலே ரன் கொடுக்காமல் பந்து வீசுகின்ற பந்து வீச்சாளரின் வீச்சை ''மெய்டன் ஓவர்'' என்று சொல்வார்கள். அது போலவே கள்ளச்சாராயச் செய்திகள் பற்றி செய்திகள் வெளிவராத மெய்டன் வீக்காக கொண்டாடுகிற வகையிலேதான் இன்றைக்கு ஆதம்பாக்கம், போரூர், கீழாமூர், சென்ற வாரம் மயிலாடுதுறை என்று விஷச் சாராயச் சாவு நடந்த இடங்களைக் கொண்டு பட்டியல் போட்டால் நீண்டு கொண்டே போகிறது. இதைச் சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்த முடியாது. மக்களிடத்திலே விழிப்புணர்வும், வாழ்வில் நம்பிக்கையும், பொருளாதார மேம்பாடும் ஏற்பட்டால் தான் இவைகளை ஒழிக்க முடியும்.

கடந்த ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின் போது இங்கே குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் அவர்கள், மலிவு விலை மதுவை ஒழிப்பதால், தமிழ்நாட்டிற்கு ஏற்படுகிற இழப்பை மத்திய அரசு வழங்க வேண்டும், அல்லது அரசியல் சட்டத்தைத் திருத்த மத்திய அரசு முன்வரவேண்டும் என்று மத்திய அரசுக்கு** ஆனால், மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு மலிவு விலை மதுவை ஒழிப்பதால் ஏற்படும் நட்டத்திற்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அதை நீங்கள் ** என்று எடுத்துக்கொண்டு பேசுவது சரியல்ல. ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலிலே பேசுகிறபோது இவ்வாறெல்லாம் எழுதி வைத்துப் படிப்பதை நாம் அனுமதிப்பது முறையாக இருக்கிறது. இவர் இரண்டு, மூன்று தடவை உறுப்பினராக இருந்துவிட்டு முரசொலி பத்திரிகையில் எழுதி வைத்ததை எல்லாம் கொண்டு வந்து இங்கே படித்துக் கொண்டிருப்பாரேயானால் .... (மேசையைத் தட்டும் ஒலி).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 18]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. இளம்வழுதி பேசுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தான் சொன்னேன். பேசுவதில் தவறு வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசுகிறேன். அன்றைக்குக் கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட் படிக்கும்போது குறிப்பு வைத்துக் கொண்டு தான் படித்தார்கள். அதைத் தவறு என்று சொல்ல முடியுமா? முடியாது. அதுமாதிரி தான் இதுவும். அதுமட்டுமல்ல. மத்திய அரசுக்கு** என்று சொன்னதை மாற்றி ஒரு துணிச்சலான கருத்தை வெளியிட்டார் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். ஆனால் மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு, மலிவு விலையில் மதுவை ஒழித்ததால் ஏற்படும் நட்டத்திற்கு இழப்பீடு எதுவும் தரவும் இல்லை: அரசியல் சட்டத்தை மாற்றவும் இல்லை. இந்த விஷயத்தில் மத்திய அரசின் கொள்கை என்ன? காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களிலே எல்லாம் மதுவிலக்கு அமுலில் இல்லை. அது காந்தியின் கொள்கையாகவும், அரசியல் சட்டத்தில் வாசகங்களாக மட்டுமே பரிதாபகரமாகக் காட்சி தருகிறது. ஒன்று, மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு இழப்பீடு தர வேண்டும். இல்லையென்றால் அரசியல் சட்டத்தில் இருக்கிற வாசகங்களையாவது மாற்ற முன் வரவேண்டும். அதுவும் இல்லை என்றால் காந்தியார் கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை: ஓட்டு வாங்குவதற்காக மட்டுமே காந்தியின் கொள்கையைச் சொல்கிறோம் என்று பட்டவர்த்தனமாக அறிவிக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் மற்ற கட்சியின் நிலைமைகளைப் பற்றி எல்லாம் ஆவேசமாகப் பேசுகிறார். ஆனால், அவர் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது அது மதுவிலக்கை அமுல்படுத்தியதே, அதுபற்றி உறுப்பினர் என்ன விளக்கம் அளிக்கிறார் என்பதை அவைக்கு அவர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் [மதுவிலக்கைத் தளர்த்தினார்கள் என்பதையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுவை ஒழிக்க வேண்டுமென்றுதான் எல்லோரும்
விரும்புகிறோம், ஆனால், அந்த முயற்சியில் ஈடுபடுகிற எல்
லோரும் தோல்வி அடைகிறார்கள் என்பதைத்தான் உங்கள்
கவனத்திற்குக் கொண்டுவர சுட்டிக்காட்டினேனே தவிர வேறு
ஒன்றுமில்லை. இப்போது ஜனார்த்தன ரெட்டி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியைச் சார்ந்தவர்
இந்த அவையில் பேசுகிறபோது அவர் சார்ந்துள்ள கட்சியின்
கொள்கையைத்தான் இங்கே பேசுவார். அதுதான் வழக்கம்.
இவர் கட்சி ஆட்சிக்கு வந்தபோது ஏற்கெனவே 1971ஆம் ஆண்
டில் மதுவிலக்கைத் தளர்த்தினார்கள். அதன் பிறகு மீண்டும்
மதுவிலக்கைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
கொண்டு வந்தார்கள். ஆனால் மீண்டும் இவர்கள் ஆட்சிக்கு
வந்தபோது—அரசியல் விபத்து காரணமாக என்றே வைத்துக்
கொள்ளுங்கள்—(மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் ஆட்சிக்கு
வந்தபோது—மீண்டும் இவர்கள் தற்காலிகமாக ஆட்சிக் கட்டிலில்
ஏறியபோது—என்ன செய்தார்கள்? மீண்டும் மதுவிலக்கை
அடியோடு தளர்த்தினார்கள். சாராயம் போன்றவற்றை
தெருக்களிலே ஆறாக ஓடவிட்டு, ஓடவிட்டதோடு மட்டுமல்லா
மல் அதுவரையில் இல்லாத ஒரு பழக்கத்தை, அரசாங்கமே
மலிவு விலை மதுவைத் தயாரிக்கிற ஒரு திட்டத்தை இவர்கள்
கொண்டு வந்தார்கள். எனவே, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்
கள் இங்கே மக்கள் மத்தியில் மது, குடி, குடியைக் கெடுக்கும்
என்பது பற்றியெல்லாம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்
என்றெல்லாம், இவர்கள் பேசினால் எப்படிப் பொருத்தமாக
இருக்கும்?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஏதோ அரசியல் சட்டத்தில் இருக்
கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். Directive
Principles of State Policy என்பதில் வருகிறது. அதிலே 37ஆவது
ஆர்ட்டிகிளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

"Directive Principles of State Policy—

Art. 37. The Provisions contained in this Part shall not be enforceable by any court, but the principles therein laid down are never the less fundamental in the governance of the Country and it shall be the duty of the State to apply these principles in making laws."





என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அது ஏதோ கண்
டிப்பாக ஒவ்வொரு மாநிலத்திலேயும் பூரணமாக மதுவிலக்கு
இருந்தே தீரவேண்டும் என்று அதிலே எங்கேயும் குறிப்பிடப்பட
வில்லை. எனவே, மற்ற மாநிலங்களை எல்லாம் வம்புக்கு
இழுக்க வேண்டாம்; அது நல்ல கொள்கை என்று நான் சொல்
கிறேன். அதாவது பூரணமாக நாட்டில் மதுவிலக்கு அமலில்
இருக்க வேண்டும் என்பது நல்ல கொள்கை. அதை ஏற்றுக்
கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். நண்பர் அதை விரும்பு
கிறாரா? அல்லது வேண்டாம் என்று சொல்கிறாரா? மது
விலக்கு வேண்டும் என்று சொன்னால் மதுவிலக்கு வேண்டு
மென்று பேசட்டும். மதுவிலக்கு வேண்டாம் என்றால் மது
விலக்கே வேண்டாம்; பரிபூரணமாகத் திறந்து விடுங்கள் என்று
தைரியமாகச் சொல்லட்டும். அரசியல் சட்டத்தை வம்புக்கு
இழுக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.
இங்கே என்ன பிரச்சினை என்றால் (குறுக்கீடு) அதாவது ஒரு
கட்சி இங்கே மதுவிலக்கு வேண்டும் என்கிற அடிப்படையில்
அந்தத் திசை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. ஏற்
கெனவே ஆட்சியில் இருந்த கட்சி மதுவிலக்கு வேண்டாம் என்று
சொல்லி அந்தத் திசையில் போனது. அந்தக் கட்சியின் சார்பில்
நீங்கள் பேசுகிறீர்கள். எனவே உங்களுடைய கட்சியின் கொள்
கையைச் சொல்லுங்கள் என்றுதான் கேட்கிறார்கள்.

முற்பகல் 9–50

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நான் முழுவதுமாக பேசுவதைக் கேட்டால் புரியும்.
அதற்குள்ளே இடையிலே இடையிலே குறுக்கிட்டால் நான்
என்ன பண்ணமுடியும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். "நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது மதுவிலக்கை
தளர்த்திவிட்டோம், அரசியல் விபத்தின் காரணமாக ஆட்சிக்கு
வந்தோம்" என்று. ஒவ்வொருவரும் அரசியல் விபத்தின் காரண
மாகத்தான் ஆட்சிக்கு வருகிறார்கள். முன்னாள் மதிப்பிற்குரிய
பெரியவர் எம்.ஜி. ஆர். அவர்கள் இதுபோலத்தான் ஆட்சிக்கு
வந்தார். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த அவையின்
முன் உள்ள கேள்வியே மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள
கட்சியின் கொள்கைதான் இவருடைய கொள்கையா? இவர்
களுடைய கட்சி இரண்டு முறைகள் ஆட்சியில் இருந்தபோது
மதுவிலக்கை வேண்டாம் என்று அடியோடு எடுத்துவிட்டவர்
கள். அப்படி இருக்கிறபோது, இன்று மதுவிலக்கைத் தீவிரமாக
அமல்படுத்தவேண்டும், இது குறித்து மக்கள் மத்தியில் ஒரு
விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றெல்லாம் மாண்பு

மிகு உறுப்பினர் பேசுகிறார் என்றால் அந்தக் கட்சியினுடைய கொள்கை இவருடைய கொள்கையில்லையா? கட்சியின் கொள்கைக்கு மாறுபட்டுத்தான் இவர் பேசுகிறாரா என்பதை விளக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே கட்சியிலேயிருந்து மாறுபட்டு கருத்துக்களைப் பேசுவதற்கு ** எங்கள் கொள்கையிலே எப்பவும் நான் உறுதியோடுதான் இருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சரி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரும் சரி, எதிர்கட்சித் தலைவர் அவர்களும் சரி, அவர்கள் கேட்டது உங்களை இதுதான். உங்களுடைய கட்சி மதுவிலக்கு வேண்டாம் என்கின்ற முடிவில் நடவடிக்கை சிலவற்றை எடுத்தார்களே அந்த அடிப்படையிலேதான் உங்களுடைய கருத்துக்கள் இருக்க வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்லியிருக்கிறார். அதை நீக்கக் கோருகிறேன்.

திரு. இளம்வழுதி : ஏன், எல்லாவற்றையுமே நீக்கி விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ** அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்னாள் முதல்வர் பெரியவர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட இங்கு ''தாய்மீது ஆணையாகச் சொல்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிடுகிறோம்.'' என்று சொன்னார்கள். சொன்னவர்களே மறுபடியும் திறந்தார்கள். அதுமாதிரிதான் நாம் மேற்கொள்கின்ற முயற்சிகள் தோல்வியுறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திறந்ததை அவரே மூடினார். திறந்ததை அவர் ஆட்சிக் காலத்திலேயே மூடினார் என்பதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசியல் சட்டத்திலே அடிப்படைக் கொள்கையாக மதுவிலக்கு கூறப்பட்டிருக்கிறது என்பது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.





உண்மை. அதே நேரத்திலே மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் கட்சியைப் போன்ற கட்சியினர் நடத்துகின்ற அரசுகள் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றார்கள் என்பதும் உண்மை. அதற்குக் காரணம் அது சிறந்த கொள்கையாக இருந்தாலும் நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்துதான அவர்கள் நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு அந்தச் சங்கடங்களை எல்லாம் சந்திக்கின்ற துணிவோடு இன்றைக்கு மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த முன்வந்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த மிகப்பெரிய தவறு, மதுவிலக்குக் கொள்கையை பின்பற்றாமல், சங்கடங்களை உணர்ந்து தளர்த்தாமல், அதற்கு மாறாக யாருமே எதிர்பார்த்திராத அளவுக்கு ஏழைகளுக்குக் குடிக்கச் சொல்லி மலிவு விலையிலே சாராயத்தை விற்கிறேன் என்று சொன்ன அதிசய ஆட்சி, அதிசய மனிதர்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர். அவ்வளவு பெரிய பாவத்தை அவர் செய்திருக்கிறார்,

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே மலிவு விலை மதுவைக் கொண்டுவருவார் என்று அறிந்த மாத்திரத்தில் நாங்கள் கொண்டுவரக்கூடாது என்று பல்வேறு கட்டங்களிலே வலியுறுத்தினோம். அப்போது ஒரு குறள்கூடச் சொன்னேன்.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்று சொல்லி நீங்கள் அப்படிப்பட்ட பெரியவராக இருக்க வேண்டும் என்று சொன்னபோது, 'நாம் சிறியராக இருக்கிறோம்' என்று அவருடைய கட்சித் தலைவர் இதே அவையிலே பேசியிருக்கிறார் சென்ற முறை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உங்களுடைய நேரம் 15 நிமிடம் ஆகிவிட்டது. 10 நிமிடம் கொடுத்தது. குறுக்கீடு இல்லாமல் பேசி முடிக்க வேண்டும். பேசி முடியுங்கள்.

[1992 மார்ச் 18

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க வந்தது, ஜனார்த்தன ரெட்டி ஆளுகின்ற ஆந்திராவிலே, மாண்புமிகு கருணாகரன் ஆளுகின்ற கேரளாவிலே, மாண்புமிகு பங்காரப்பா ஆளுகின்ற கர்நாடகத்திலே, வைத்தியலிங்கம் ஆளுகின்ற புதுவையிலே மதுவிலக்கைப்பற்றி வாயே திறக்கமாட்டார்கள். தமிழ்நாட்டிலே மட்டும் மதுவிலக்குப் பற்றித் தீவிரமாக ஓங்கி ஒலிக்கிறார்களே என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கேளுங்கள். அவர் பேசட்டும். அவர் பேசி அவருடைய முழுக் கருத்துக்களைக் கேட்போம்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா விஷயத்தையும் தேசியப்பார்வை பார்க்கின்ற காங்கிரஸ்காரர்கள் இந்த விஷயத்தில் கண்ணை மூடிக்கொள்வது ஏன் என்று கேட்க ஆசைப்படுகிறேன். மேலும் பேரவைத் தலைவர் அவர்களே.......... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அவருடைய முழுப்பேச்சையும், கருத்துக்களையும் கேட்டுக்கொள்ளவேண்டும். அவருக்கு ரொம்ப நேரம் கொடுக்கிறதாகச் சொல்வார்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் நம் நாட்டிலே சாராயம் மட்டும்தான் இப்போது மூடப்பட்டிருக்கிறது. ஆனால் பீர், பிராந்தி, விஸ்கி எல்லாம் விற்பனை ஆகிறது. அதிகமாக விற்பனை ஆகிறது. பீர் விற்பதிலே ரொம்ப லாபம் கிடைக்கிறது. அப்படி இருக்கிற நேரத்திலே பீர் தொழிற்சாலையை இப்போது விற்கவேண்டிய அவசியம் ஏன் வந்தது? இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, ''தமிழ்நாடு சாராவிக் கழகம், திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்திடமிருந்து பீர் வடிசாலையை ஈட்டுக்கடன் பொறுப்புகள் உள்ளிட்டு ரூ. 8.02 கோடிக்கு வாங்கி 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பீர் தயாரித்து புட்டிகளில் அடைக்கும் பணியைத் தொடங்கியது.''

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். முடியுங்கள். முடிக்க வேண்டும்.

திரு. இளம்வழுதி : இந்த பீர் தொழிற்சாலையில் நல்ல லாபம் தான் வந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையில் இதை விற்க வேண்டிய அவசியம் என்ன? அதுமட்டுமல்ல, அரசுக்குச் சொந்தமான ஒரு தொழிற்சாலையை ஒருவருக்கு விற்கிறோம்



என்றால் யார் மனுக்கொடுத்தாலும் கொடுத்துவிடுவீர்களா ?
அதேநேரத்தில் முறைப்படி ஏலம் விட்டுதான் டெண்டர்
கோரப்பட்டதா? இதுபோன்ற விவரங்களை எல்லாம் மாண்பு
மிகு முதலமைச்சர் தன்னுடைய பதில் உரையில் தெரிவிக்க
வேண்டும். இதில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்
லப்பட்டிருக்கிறது. ஆனால் விற்கப்பட்டது என்றும் சொல்லப்
படுகிறதே அப்படியானால் அதற்கான பணத்தைக் கட்டி
விட்டார்களா? கட்டினப் பிறகுதானே அந்த எம்பீ நிறுவனத்
திடம் ஒப்படைக்க முடியும்? முதலில் டெண்டர் கோரப்
பட்டதா? முறையான வகையில் டெண்டர் கோரப்பட்டதா?
யார் மனுப் போட்டாலும் கொடுத்துவிடுவார்களா? இதுபோன்ற
கேள்விகளுக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் பதிலுரையில் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மேலும்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி
அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தில் ஆட்சிக்கு வந்த
திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கு ஆகாதவர்கள் நடத்தி
வந்த நிறுவனங்களை எல்லாம் கைப்பற்றியது ஊர் அறிந்த
ரகசியம். அப்படித்தான் புருசோத்தமன் என்பவர் நடத்தி
வந்த பீர், பிராந்தி தொழிற்சாலையையும் அன்றைக்கு எடுத்
தார்கள். ஆகவே, நியாயம் வழங்குகிற முறையிலேதான் அது
அவர்களிடத்திலே திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வி. தண்டாயுத
பாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, சமயநல்லூர் மின்சார நிலையத்தை மூடி
னார்களே, அதை எதற்காக மூடினார்கள் என்பதற்கு இவர்
பதில் சொல்லட்டும்.

திரு. இளம்வழுதி : ஆகாதவர்கள் என்பதனாலே நாங்கள்
வாங்கினோம் என்று சொல்கிறார்களே, ஆகாதவர்களிடத்திலே
யிருந்து நாங்கள் 8 கோடி ரூபாய்க்கு வாங்கினோம். வேண்டிய
வர்களுக்கு நீங்கள் 10 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிறீர்கள்.
அதற்குள்ளே எல்லாம் நான் போக விரும்பவில்லை. சில கேள்வி
களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்வி
தொடர்ந்து கொண்டே போகக்கூடாது. இன்னும் ஒரு
நிமிடத்தில் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. இளம்வழுதி : அடுத்து, காவல் துறை முக்கியமானது. அதைப்பற்றி நான் பேசியாக வேண்டும். காவல் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு காவல் துறைக்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 272 கோடியே, 38 லட்சத்து, 75 ஆயிரம் ருபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசுத் துறைகளிலே காவல் துறை மிகப் பெரிய துறையாகும். இத் துறையிலே 68 ஆயிரத்து 987 பேரும், புதிதாகஅனுமதிக்கப் பட்ட பதவிகளில் அமைச்சுப் பணியில் 166 பேரும், நிர்வாகப் பணியில் 2,670 பேரும் ஏனைய பணிகளில் 24 பேரும் பணியாற்றுகிறார்கள். இவ்வளவு ஆட்பலம்மிக்க ஒரு துறைக்கு இப்போது 272 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது ஒன்றும் பெரிய தொகை அல்ல. இந்தத் துறை மிகச் செம்மை யாக அமையவேண்டும் என்பதற்காகத்தான் முதன் முதலாக போலீஸ் கமிஷன் அமைத்து, அதன் பரிந்துரைகளின்பேரில் பல கோடி ரூபாயில் இந்தத் துறையை நவீனம் ஆக்கியவர் எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைககூட நான்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் தானைத் தலைவர் காவல் துறையின்மீது அவ்வளவு அக்கறை கொண்டிருந்ததால் தான் தமிழகத்திலேயுள்ள சிறைச்சாலைகளுக்கு 'அலாரம்' கூட வைக்கவில்லை. அதனால்தான் கைதிகள் தப்பியோடுவது கண்டுபிடிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதை சில தினங்களுக்கு முன்பு இந்தத் துறையைப் பற்றி ஒரு 'ரெவ்யூ மீட்டிங்'-ஐ நடத்தியபோது நான் கேட்டேன். கைதிகள் தப்பிச் செல்வது அதிகரித்து வருகிறதே, இதற்கு என்னக் காரணம்? 'அலாரம் சிஸ்டம்' இல்லையா என்று கேட்டேன். 'இல்லை' என்ற பதிலே வந்தது. இதிலிருந்தே இவருடைய தானைத் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது எவ்வளவு அக்கறையாக, அக்கறையோடு காவல் துறையை கவனித்திருக் கிறார் என்பது தெளிவாகிறது. இப்போதுதான், எல்லாச் சிறைச் சாலைகளுக்கும் 'அலாரம் சிஸ்டம்' வைக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நான் சொல்கிறேன் என்று என்மீது யாரும் சத்தம்போட வேண்டியதில்லை. முன்னாள் ஓய்வுபெற்ற ஐ.ஜி. அருள் தன் னுடைய வாழ்க்கை அனுபவங்களை 'ஒரு போலீஸ்காரன் டைரி' என்ற புத்தகமாக எழுதி வெளியிட்டிருக்கிறார். அதிலே அவர் அப்படி குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, 1970-லே அவர்தான் முதல் கமிஷனே போட்டார். 20 வருஷங்களுக்குப்



பிறகு இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இரண்டாவது கமிஷனையும் சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையிலே நாங்கள் போட்டோம். அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் என்ன ஆயிற்று? 'அலாரம் இல்லை' என்று மாண்புமிகு முதல்வர் சொன்னார். சில காவல் நிலையங்களில் ஜீப்பே இல்லையே, அதற்கு என்ன சொல்கிறீர்கள். அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஜீப்பே இல்லாததும் இவர்களுடைய தானைத் தலைவருடைய ஆட்சியிலேதான். பல போலீஸ் நிலையங்களுக்குக் கட்டிடங்களே இல்லாமல் போனதும் இவர்களுடைய தலைவருடைய ஆட்சியிலேதான். ஆட்டோ சங்கர் போன்றவர்கள் வளர்ந்ததும் இவர்களுடைய ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. இளம்வழுதி: சிறையில் இருந்து தப்பிச் சென்ற ஆட்டோ சங்கரை 15 நாட்களிலேயே கண்டுபிடித்து பிடித்து வந்ததும் எங்களுடைய ஆட்சியிலேதான். மேலும் காவல் துறையின் பணி செம்மையாக நடைபெறவேண்டுமானால் அரசாங்கம் விஷயங்களை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். காவல் துறையினர் காவல் துறை பணிகளுக்கு மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும். அதாவது குற்றத் தடுப்பு, சட்டம் ஒழுங்குப் பாது காத்தல், புலன் ஆய்வு, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவைகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 10 நிமிடங் கள் கொடுத்தேன். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் குறுக் கீடு இல்லாமல் பேசியிருக்க வேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத் தீர்வைத் துறை ஆகிய துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக ஆட்சி செய்த காலத்திலே, இந்தியாவிலேயே தமிழகத்தின் காவல் துறை முதலிடம் வகித்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு காவல் துறையினுடைய அதிகாரிகளைச் செயல்படுத்த விடாமல் காவல் துறை அதிகாரிகளுடைய கரங்கள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம் வன்முறையாளர்களுடைய கூடாரமாக மாறியது. பத்மநாபா கொலை வழக்கு சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க விடாமல் அந்தக் கொலை வழக்கிலே ஈடுபட்டவர்கள் தப்பித்துச் செல்வதற்கு காவல் துறையே உடந்தையாக இருக்க வேண்டிய நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது. பத்மநாபா கொலை வழக்கிலே ஈடுபட்டவர்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கைது செய்து, நடவடிக்கை எடுத்திருந்தால் இந்திய நாட்டினுடைய பிரதமராக இருந்த எங்களுடைய தலைவன் ராஜீவ் காந்தி அவர்களை இந்த நாடு இழந்திருக்க முடியாது. தமிழகத்திலே முதல்வராக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து ஆயுதம் தாங்கி வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளுடைய கொட்டத்தை அடக்கிய பெருமை தமிழகத்தினுடைய முதல்வரவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே தமிழகத்தைப் பொறுத்த மட்டில் விடுதலைப் புலிகளோடு உறவு வைத்துக்கொண்டு, தங்குவதற்கு இடம், உண்ண உணவு உடுக்க உடை, பணம், ஆயுதம் போன்றவைகளை அவர்களுக்கு வழங்கி, அடைக்கலம் தந்து கொண்டிருந்தவர்களை இன்றைய தினத்திலே அடையாளம் காட்டுகின்ற வகையிலே 'தடா' சட்டத்தின்கீழ் அவர்களைக் கைது செய்து இருப்பதை நாங்கள் மனதார வரவேற்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 18] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

விடுதலைப் புலிகளுடைய ஆதிக்கத்தை ஒழித்ததோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலன் விசாரணை முடிவடைந்து, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகின்ற இந்தக் காலகட்டத்திலே விடுதலைப் புலிகள் தமிழகத்திலே ஊடுருவக்கூடிய நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டிலே மீண்டும் வன்முறைச் சம்பவங்களை உருவாக்கி, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கச் செய்யும் அந்தச் சக்திகளை முறியடிப்பதற்கு தமிழகத்தின் முதல்வரவர்கள் எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளுக்கும் காங்கிரஸ் பேரியக்கம் துணையாக இருக்குமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

புரட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள், புரட்சித் தலைவர், அவர்களுக்கு உதவிகள் எல்லாம் செய்தார்கள் என்ற நியாய உணர்வுகளை இன்று வெளிப்படுத்திக்கொண்டிருக்கிற அவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், ராஜீவ் காந்தியினுடைய கொலைக்குப் பின்பும்கூட விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறோம் என்று சொல்பவர்களைப் புரட்சித் தலைவருடைய ஆவி நிச்சயமாக மன்னிக்காது என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே நடைபெற்ற நேரத்திலே ஆறாய் ஓடிக்கொண்டிருந்த கள்ளச் சாராயம் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறுகிற கதை போல, இன்றையதினம் தமிழகத்தில் பல இடங்களில் கள்ளச்சாராயம் காவல் துறையினரின் துணையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பில்கூட மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் இந்த ஆட்சிக்கு வந்த பிறகு கள்ளச்சாராயம் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறதே தவிர, முழுமையாக ஒழிக்கப்படவில்லை என்பதை அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த அயல்நாட்டு மதுக் கடைகளை திறந்து வைத்துக்கொண்டு, கள்ளச் சாராயத்தை எப்படி ஒழிக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே கேட்கவிரும்புகிறேன். முழுமையான மதுவிலக்கை நீங்கள் அமுல்படுத்த வேண்டுமென்று நான் சொல்கிற நேரத்தில், நீங்கள் சொல்கிறீர்கள் மத்திய அரசு மானியத்தை வழங்கவேண்டுமென்று. பிள்ளை பிறந்த பிறகுதானே பெயர் வைக்கமுடியும்? உங்களைப் பொறுத்தமட்டில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்வரவேண்டுமென்று நீங்கள் மத்திய அரசிடம் கேட்கிற நேரத்தில், நாங்கள் உங்களோடு துணையிருந்து போராடிப் பெற்றேறாம்,

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1992 மார்ச் 18

அதேபோன்று இந்த மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத் துங்கள். அதற்குப் பின்னால் மத்திய அரசிடம் மானியம் கேளுங்கள், நாங்கள் உங்களோடு உறுதுணையாக நிற்போம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு ருக்கிறேன். காவல் துறையைப் பொறுத்தவரையில் பல கோரிக் கைகளை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மதுவிலக்கை முதலில் அமல் படுத்துங்கள், பின்பு பார்ப்போம் என்று சொன்னார்கள். இதற்கு முன்பு தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்தியபோது மத்திய அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுத்திருக்கிறதா என்பதை உறுப்பினர் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : குஜராத்தைப் பொறுத்தவரை யில் முழு மதுவிலக்கு இன்றையதினம் கூட அமல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த மாநிலத்திற்கு மத்திய அரசு 15 சதவீதம் மானியத்தை வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத்தைப் பற்றிய விவரங் கள் என்னிடம் இல்லை. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எந்தக்காலத்திலும் மதுவிலக்கை அமல்படுத்தியதற்காக மத்திய அரசு எந்தவிதமான மானியத்தையும் வழங்கியதில்லை என்பதுதான் உண்மை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : முழு மதுவிலக்கை அமல்படுத்தி விட்டு மத்திய அரசைக் கேட்போம். (சிரிப்பு) நிச்சயமாக மத்திய அரசு வழங்கும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய தோழமைக்கட்சி என்பது உண்மை. அப்படி தோழமைக் கட்சியாக இருக்கிற உங்களுக்கு எங்கள் மீது



1992 மார்ச் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

நம்பிக்கை இல்லையா? நாங்கள் பூராவும் மதுவிலக்கைக் கொண்டுவந்தபிறகு, அதைப்பார்த்து பரிட்சார்த்தமாக அதற்குப் பிறகுதான் கொடுக்கவேண்டும் என்றுதான் இருக்கவேண்டுமா? ஏன் இன்றைக்கே நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னால் நாங்களும் அதைக் கொண்டுவந்துவிடுகிறோம். அதில் என்ன கஷ்டம்? இன்றே கொடுக்கிறோம் என்று சொல்லலாம். மற்றும் ஒன்று, குஜராத் மாநிலத்தில் மானியம் கொடுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார். அப்படிப் பணம் கொடுக்க வில்லை என்பதும் எனக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் :

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூரண மதுவிலக்கை எல்லோரும் தான் ஆதரிக்கிறோம். ஆனால் அது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதுதான் உண்மை. மதிப்பிற்குரிய முன்னாள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் ஒருமுறை திருவனந்த புரத்திற்குச் சென்றிருந்த போது பத்திரிகையாளர்களிடத்தில் கூறியபோது பணக்காரர்கள் குடித்தால் என்ன, செத்தால் என்ன, எனக்கு அதைப்பற்றி கவலையில்லை, ஏழைகள் குடிக்கக் கூடாது, அவர்கள் குடும்பங்கள் கெடக்கூடாது என்று சொன் னார்களே, அது பற்றி உறுப்பினருக்குத் தெரியுமா ?

முற்பகல் 10-10

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகள் நிச்சயமாக பாதிக்கப்படக்கூடாது என் பதிலே எங்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந் தவர்களாகிய நாங்கள் எங்களுடைய தலைவர்களுடைய வழி காட்டுதலில் தமிழகத்திலே நாங்கள் 20 வருடங்களாக நடத்திய ஆட்சிக் காலத்திலே முழு மதுவிலக்கைத்தான் அமல் ஆக்கி னோமே தவிர மதுவிலக்கை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எந்த நேரத்திலும் தளர்த்தவில்லல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு நம்மைப் பொறுத்த வரையில் மத்திய அரசை நம்புவோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த மட்டிலே நவீனப்படுத்த வேண்டுமென்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே அறிவிக்கப்பட் டிருக்கிறது. சமூக விரோதிகளை, தேச விரோதிகளை எதிர்த்து போராடுவதற்காக நவீன ஆயுதங்கள் காவல் துறைக்கு வாங் கப்படும் என்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்திலே இந்த நவீன ஆயுதங்களை, பயன்படுத்துவதற்கு தற்போது இருக்கின்ற காவல் துறையினுடைய எண்ணிக்கை

போதுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே காவல் துறையினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையைப் பொறுத்த மட்டிலே காவலர்களுடைய பணிதான் முக்கியமான பணி. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு நேரடிப் பணியில் ஈடுபடுவர்கள் காவலர்கள்தான். ஆகவே காவலர்கள் நல்ல முறையில் இருந்தால்தான் கடமையுணர்வோடும், பொறுப்புணர்வோடும் செயலாற்ற முடியும். ஆகவே புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே காவலர்களுக்கு ரேஷன் முறையில் 50 சதவீத மானியம் வழங்கப்பட்டது. அதேபோன்று காவலர்களுக்கு 20 நாட்கள் ஒரு வருஷத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ரேஷன் முறை 25 சதவீதமாக குறைக்கப்பட்டது. அதே போல 12 நாட்களாக விடுமுறையும் குறைக்கப்பட்டது. புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே என்ன முறை காவலர்களுக்கு அனுசரிக்கப்பட்டதோ அதே போன்று இந்த அரசும் அவர்களுக்கு வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

காவல் துறையைப் பொறுத்த மட்டிலே ஆய்வாளர்களுக்கும் அவர்களுக்கு மேலே பணியாற்றுகிறவர்களுக்கும் ஆர்டர்லி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த ஆர்டர்லிகளை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அவர்களுடைய குடும்பத்திலே அவர்களுடைய பிள்ளைகளை பள்ளிகளுக்கு கூட்டிச் செல்வதற்கும், காய்கறி வாங்குவதற்கும், மார்க்கெட்டுகளுக்குச் செல்வுதற்கும்தான் இந்த ஆர்டர்லிகளை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில் பட்டதாரி வாலிபர்கள்கூட காவல் துறையிலே ஆர்டர்லிகளாக பயன்படுத்தப்படும்போது உண்மையிலேயே அவர்களுக்கு அவலநிலை ஏற்படுகிறது. கொத்தடிமைகளை நாம் தமிழகத்திலே ஒழித்துவிட்டோம். ஆனால் காவல் துறையிலே கொத்தடிமைகளாக செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்த ஆர்டர்லி முறையை ஒழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த நேரத்திலே, 1980 ஆம் ஆண்டு மாமூல் முறை ஒழிக்கப்படும் என்ற உறுதிமொழியை இதே சட்டமன்றத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இது வரையில் மாமூல் முறை ஒழிக்கப்படவில்லை. இந்த மாமூல் முறை இன்றைய தினம் தமிழகத்திலே, காவல் துறையில் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமூல் முறையை ஒழிப்பதற்கு ஒரு சட்டத் திருத்தத்தைக்கூட இந்த சட்டமன்றத்திலே கொண்டு வரவேண்டும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டேனியல்ராஜ் அவர்கள், மாமூல் முறை என்பது சட்டபூர்வமான முறையாக அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைப் போலவும் இதை ஒழிக்க சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்பதைப் போலவும் பேசுகிறார்கள். அப்படியல்ல. மாமூல் என்பதே சட்டவிரோதமான செயல். நீங்கள் பேசுவதைப் பார்த்தால் ஏதோ மாமூல் முறை இது வரையில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதைப் போலவும் அந்த மாமூல் முறை ஒழிக்கப்படும் என்று சொன்னதைப் போலவும் இருக்கிறது. சட்டவிரோதமான செயல் என்பதால் ஒழிக்கப்படும் என்று சொன்னார்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : அவர் உறுதிமொழியைக் கொடுத்தும் கூட ஒழிக்கப்படாத காரணத்தாலே இதை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (பலத்த சிரிப்பொலி). மாமூல் முறை ஒழிக்கப்பட வேண்டும். சாரி, சாரி, சாரி, மாமூல் முறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாமூல் முறை என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மொகலாயர்கள் ஆண்டபோதே ஏற்பட்டது. அவர்கள் வைத்த பெயர்தான் மாமூல் என்பது. மாமூல் என்பது தமிழ்ச் சொல்லே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் கூடும் என்பதற்காக காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அவ்வாறு சொல்லுகிறாரோ என்னவோ, ஆகவே சட்டபூர்வமாகக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் முயற்சிக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டபூர்வமாகக் கொண்டுவருகிற சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு ஒரு 'டாக்ஸ்' போட வேண்டிய அவசியம்தான் ஏற்படும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் காவலர்கள் பதவியானது பத்தாண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு இன்னும் அதே நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பெண் காவலர்கள் பிரிவைச்

சார்ந்தவர்கள் கடமையுணர்வோடு செயலாற்றுவதற்கு அவர்களுடைய பதவியின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

நகைத் தொழிலாளர்களைப் பற்றி ஒரு பிரச்சினை. மதுரையிலே நகைத் தொழிலாளர்களை இழிவுபடுத்தியும் கொச்சைப் படுத்தியும் 'தாய்' பத்திரிக்கையிலே வெளிவந்த செய்தியை அவர்கள் கண்டிக்கின்ற வகையிலே மதுரையிலே ஒரு ஊர்வலம் நடத்தச் சென்ற நேரத்திலே காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் நடத்தி, 56 பேர்கள் மீது வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள். அவர்களுடைய உரிமை அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த வழக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டத்திலே திருச்செந்தூரில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்செந்தூரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பாக்கியராஜ் என்பவர் ஒரு வழக்கு விஷயமாக திருச்செந்தூர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டு திரும்புகின்ற நேரத்தில், திருச்செந்தூர் காவல் நிலையத்திலே வைத்து திருச்செந்தூர் சரகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் அவரை பொதுமக்கள் மத்தியிலே அடித்து, கொடுமைப்படுத்தியதன் காரணமாக திருச்செந்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அன்றையதினம் பஸ் மறியலிலே ஈடுபட்டார்கள். திருச்செந்தூருக்கு அருகிலே இருக்கின்ற நாலு முனைகிணறு என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அந்த பஸ் மறியலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே காவல் துறை அதிகாரிகளும் காவலர்களும் அங்கு சென்று அவர்கள் நினைத்து இருந்தால் சுமுகமாகப் பேசி அந்தப் பிரச்சினையை வளரவிடாமல் தடுத்து இருக்கலாம்; ஆனால் அவர்களுடைய தவறான அணுகுமுறை காரணமாக அங்கு துப்பாக்கிச் சூடு நடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, துப்பாக்கிச் சூடு நடந்ததன் காரணமாக அந்தப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளும், இளஞ் சிறார்களும் துப்பாக்கிச்சூட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட நபர்களில் ஒருவர் 8–3–1992 அன்று காலமாகி இருக்கிறார். அதேபோல் 2 குழந்தைகளின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நீதி விசாரணை நடத்துவதோடு மட்டுமல்லாமல் அந்த நேரத்திலே கைது செய்யப்பட்ட 56 பேர் மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்வதோடு துப்பாக்கிச்சூட்டினால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நீங்கள் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு. தாங்கள், அழைக்கிறபோது இல்லை. அதனாலே வேறு வேறு உறுப்பினர்களுக்கு எல்லாம் பேச அனுமதி அளித்து நேரம் போய் இருக்கிறது. எனவே, சுருக்கமாக முடித்துக்கொள்ளவும்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கருணை உள்ளத்திற்கு மிக்க நன்றி. காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை மீதும் கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பு பெற்றமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக காவல் துறை மிகவும் புகழ் பெற்ற காவல் துறையாகும். இந்திய அளவிலே இங்கு பணியாற்றுகிற உயர் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது சாதாரண காவலர்களாக இருந்தாலும்சரி, அவர்களுடைய சிறப்பான செயல் திறனுக்காக கடந்த காலங்களிலே மிகவும் போற்றப்பட்டு வந்து இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட காவல் துறையினுடைய செயல்பாட்டினை கடந்த 2 ஆண்டுகளிலே ஒப்பிடுகிறபோது, சென்ற 1990–91-லே 1990-ல் இருந்ததைவிட 1991-லே பல்வேறு வகையான குற்றங்கள் பெருகி இருக்கின்றன. குறிப்பாக கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டதுபோல ஆதாயத்திற்காக கொலை, கொள்ளை, வழிப்பறி கொள்ளை, மேலும் தமிழகத்திலே இப்போது வீட்டை உடைத்து திருடுதல், வீடு புகுந்து தாக்குதல் சென்னை நகரத்திலேயும் தமிழ்நாட்டிலேயும் அதிகமாக நிகழ்ந்து வருகின்றது. காலை, மாலை பத்திரிகைகளைப் பார்த்தால் தினம் தினம் ஒவ்வொரு பகுதியிலும் வீடு தாக்கப்பட்டது; வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் தாக்கப்பட்டார்கள்; அங்கே கொள்ளை நடந்தது என்பது போன்ற செய்திகள் தினம் தினம் பத்திரிகைகளிலே வருவதைப் பார்க்கமுடிகிறது. உதாரணமாக 1990-ல் குற்றங்கள் தெரிவிக்கப்பட்டவை 25,204. கண்டுபிடிக்கப்பட்டவை 17,067. 1991-ல் தெரிவிக்கப்பட்டவை 25,850. கண்டுபிடிக்கப்பட்டவை 17,534. இப்படி ஒவ்வொன்றாகச் சொன்னால் நேரம் ஆகும் என்ற காரணத்தால், மொத்தத்தில் தெரிவிக்கப்பட்டவை 36,733 கண்டுபிடிக்கப்பட்டவை 1990–ல் 23,928. 1991-ல் தெரிவிக்கப்பட்டவை 37,283. கண்டுபிடிக்கப்பட்டவை 23,854. ஆகவே, குற்றங்களைக் கண்டுபிடிக்கிற சதவீதம் குறைந்திருக்கிறது. குற்றங்களுடைய எண்ணிக்கையும் பெருகி இருக்கிறது. அரசினுடைய குறிப்பிலே கொடுத்திருப்பதைப்போல சுமார் ஒரு சதவீதத்திற்கு மேல் குற்றங்கள் கண்டுபிடிப்பது குறைந்திருக்கிறது.

முற்பகல் 10–20

காவல் துறை ஆண்டுதோறும் நவீனப்படுத்தப்படுகிறது. இப்போது கூட 80 கோடி ரூபாய் கேட்டு மத்திய அரசு 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. தமிழக அரசினுடைய நிதியைக் கொண்டும் காவலர்களுடைய எண்ணிக்கை, வாகனங்களுடைய

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1992 மார்ச் 18

எண்ணிக்கை, தொடர்பு சாதனங்களுடைய எண்ணிக்கை மற்றும் காவலர்களுக்கு, காவல் நிலையங்களுக்கு வேண்டிய வசதிகளுக்கு ஆண்டுதோறும் அதிகப்படுத்துவதற்குப் பின்னால் குற்றங்களைக் கண்டு பிடிக்கிற எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டுமே தவிர அது குறையக்கூடாது. குற்றங்கள் நிகழ்ந்ததற்குப் பின்னால் குற்றங்களைத் தடுப்பது மட்டும் காவல் துறையினுடைய வேலை யல்ல. குற்றங்கள் நிகழ்வதற்கு முன்னாலே, பிரிவெண்டிவ் ஆக்டிவிட்டீஸ் என்ற முறையில் குற்றங்கள் நிகழாமல் தடுக்க வேண்டியதும் காவல் துறையினுடைய கடமையாகும். எனவே, அப்படிப் பார்க்கிறபோது குற்றங்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்திருப்பது சரியான காவல் துறையினுடைய திறமை, வளர்ச்சி என்று குறிப்பிட முடியாது. இதற்கு பல காரணங்கள் இருந்தால் கூட குறிப்பிடத் தகுந்த சில காரணங் களில் காவலர்களுடைய எண்ணிக்கையும், காவல் நிலையங் களுடைய எண்ணிக்கையும் தமிழகம் முழுவதும் குறைவாக இருப்பது என்பது மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

காவல் நிலையம் என்று எடுத்துக்கொண்டால் சுமார் 10,000 பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் என்ற அடிப்படையிலும், காவலர்கள் என்றால் சுமார் 1,000 பேர்களுக்கு ஒரு காவலர் என்ற நிலையிலும் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். லா அண்ட் ஆர்டர் என்று எடுத்துக்கொண்டால் சுமார் 50 அல்லது 55 ஆயிரம் காவலர்கள் இதிலே இருக்கிறபோது 1,040 பேர்கள் தான் பெண் காவலர்கள். ஆண் காவலர்களுடைய எண்ணிக்கையும் அதைப் போல பெண் காவலர்களுடைய எண்ணிக்கையும் உயர்த்தப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை ஆண்டுதோறும் அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அதைப்போல, காவல் துறையினருக்கு வீட்டு வசதிக் கழகம் என்பது முன்னாள் காவல்துறையினர் வீட்டு வசதிக் கழகமாக இருந்தது. இப்போது பணியாற்றுகிற காவலர்களுக்கு வீட்டு வசதிக் கழகம் மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆண்டுக்கு சுமார் ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன. ஏறக் குறைய 65,000 காவலர்கள் இருக்கிறபோது ஆண்டு தோறும் சுமார் 1,000 வீடுகள் என்று கட்டிக்கொண்டு வந் தால் ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேல் போனால் தான் எல்லா காவலர்களுக்கும், இப்போது இருக்கிற காவலர்களுக்கு வீடு கொடுக்க முடியும். எனவே, காவலர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும், வேறு இடங்களில் குடியில்லாமல், அரசு குடியிருப்பு களில் குடியிருக்க வேண்டும் என்கிறபோது இதற்கான ஒதுக் கீட்டை அரசு அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 மார்ச் 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

1979 ஆம் ஆண்டில் சர்வீஸ் கமிஷன் மூலமாக—மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி இருந்தபோது—ஏறக்குறைய 260 சப்-இன்ஸ்பெக்டர்கள் நேரிடை யாக தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த 260 பேருக்கும் இப் போது ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு மேலான பின்னாலும் கூட அவர்களுக்கு இன்ஸ்பெக்டர் புரமோஷன் யாருக்கும் வரவில்லை. உதவி ஆய்வாளர்களாக இருக்கிறவர்களை 1979 ஆம் ஆண்டில் நேரிடையாக சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு செய்யப்பட்ட வர்களை — ஆய்வாளர்களாகப் பணி உயர்த்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25.

அதேபோல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே, குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கு கிற திட்டம் செயல்படுத்தப்பட்டது. காவலர்கள் துவங்கி, காவல்துறை ஆய்வாளர்கள் வரை, மானிய விலையிலே, அரிசி, பருப்பு, கோதுமை போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் அவர் களுக்கு வழங்கப்பட்டு வந்தன. அது மீண்டும் 1984-லே திருத்தி அமைக்கப்பட்டது. எனவே, விலைவாசிகள் ஏறி யிருக்கிற காரணத்தாலே, இப்போது விற்கிற விலையோடு ஒப்பிட்டு, ஏற்கனவே புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் அறிவித்தபடி, காவல்துறை ஆய்வாளர்கள்வரை மானிய விலை யிலே, சலுகை விலையிலே அவர்கள் அத்தியாவசியமான உணவுப் பண்டங்களைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால், கீழ்மட்டத்தில் இருக்கிற அந்தக் காவலர்கள் மிகச் சிறப்பாக பணியாற்றுவதற்கு அது உதவிகரமாக இருக்கும், அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் தாக்குதல்கள் சில நேரங்களில் வரம்புக்கு மீறி கீழ்மட்டத்திலே, காவல்துறை யிலே நடைபெறுகின்றன. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, இது சட்ட மன்ற உறுப்பினரைப் பற்றியது. இவ்வாறு ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. அந்த உறுப்பினரே, இதுபற்றி இந்த அவை யிலே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. தாங்கள் இவ்வாறு ஆதாரம் இல்லாத ஒரு சம்பவம் பற்றிக் குறிப்பிடுவது நல்லதல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, தாங்களே சுட்டிக்காட்டியதைப்
போல, ஆதாரம் இல்லாமல் ஒரு தவறான தகவலை இந்த
அவைக்குத் தரக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறியதைப் போல, அப்படி ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்து
இருந்தால், அந்தச் சட்டமன்ற உறுப்பினரே, அதை இந்த அவை
யிலே தெரிவித்து இருக்கலாம், தங்களிடமே கூட முறையிட்டு
இருக்கலாம். புகார் செய்திருக்கலாம். அப்படி எதுவும் நடை
பெறவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இல்லாமல்
பேசக்கூடாது, இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் பற்றிய
பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், அது, அவர் என்னுடைய
கவனத்திற்குக் கொண்டு வராமல் அவையினுடைய கவனத்திற்
கும் கொண்டு வராமல் இருக்கிற பிரச்சினை. அது அவைக் குறிப்
பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆளும் கட்சி எம். எல். ஏ. ஆட்சியை
விமர்சிக்க முடியுமா, சட்டமன்றத்திலே என்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உறுப்பினருடைய
பிரச்சினை. உறுப்பினருடைய பிரச்சினையை, அவைத் தலை
வருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அந்த உறுப்பின
ருக்கு உரிமை இருக்கிறது ** அவைத் தலைவரே இருந்து
அவருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டிய ஒரு பிரச்சினை. இந்தப்
பிரச்சினை என்னுடைய கவனத்திற்கே வராதது. அது அவைக்
குறிப்பிலேயே இருப்பது நல்லதல்ல. அதுபற்றித் தாங்கள் பேச
வேண்டாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர்
ஆளும் கட்சியிலே இருப்பவர் பேச முடியாது என்பதற்காக
அவரைப் போய், பார்த்துவிட்டு வந்து, அவருக்காகப் பேசு
கிறாரா என்பது எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது, அதை
அவர் தெளிபடுத்தினால், பொருத்தமாக இருக்கும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



1992 மார்ச் 18]

திரு. எஸ். திருநாவுக்கரசு ; எப்படி வேண்டுமானாலும்
நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்து, சட்டமன்றத்தின்
விடுதிக்குள்ளேயே, ஆளும் கட்சி எம்.எல்.ஏ. தாக்கப்பட்டு
அவர் கடத்தப்பட்டார்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை உங்களுக்கு நான்
தகவலுக்காக தெரிவித்து இருக்கிறேன். ஏற்கனவே இந்தப்
பிரச்சினை வருகிறபோதே தெரிவித்து இருக்கிறேன். எனவே,
நீங்கள் ஆதாரம் இல்லாமலேயே, தொடர்ந்து பேசிக் கொண்டு
இருப்பது நல்லது அல்ல. சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்
குள்ளே தாக்கப்பட்டார் என்பதற்கு என்ன ஆதாரம் வைத்
திருக்கிறீர்கள்? (குறுக்கீடு). நீங்கள் என்னுடைய நிர்வாக
வரம்புக்கு உள்ளேயே வந்து என்னை வம்புக்கு இழுக்கக்
கூடாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வேறு கட்சியைச் சேர்ந்த இந்த
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு எங்கள் ஆளும் கட்சியைச்
சேர்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரைப்பற்றி இவ்வளவு
கவலை ஏன்? இவ்வளவு அக்கறை ஏன் என்பதுதான் இங்கே
யாருக்குமே புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி), மதுராந்
தகம் சட்டமன்ற உறுப்பினரைப் பற்றிய செய்திகள் ஏற்கனவே
பத்திரிகைகளிலே வெளி வந்து இருக்கின்றன. அவர்களுடைய
விஷயத்தில் நடைபெற்றது குடும்பத் தகராறு. இதற்கும்
அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை. (மேசையைத் தட்டும்
ஒலி) அதனால்தான் ஏற்கனவே, இந்தப் பிரச்சினை
மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களாலும்
இன்னும் சில சட்டமன்ற உறுப்பினர்களாலும், சில நாட்
களுக்கு முன்பு, இந்த அவையிலே எழுப்பப்பட்ட போது;
இந்தக் குடும்பப் பிரச்சினையை வெளியே சொல்லிக் கொண்
டிருந்தால், அது நன்றாக இருக்காது என்பதால்தான் நான்
அன்று மௌனமாக இருந்தேன்; எந்த பதிலையும் சொல்ல
வில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் இதே பிரச்சினையை
அவர்கள் கிளறுவதால் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்
இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உறுப்பினர் சொக்கலிங்கம்
அவர்கள் சட்டமன்ற விடுதிக்குள்ளேயே தாக்கப்பட்டார்
என்பது, அங்கிருந்தே கடத்தப்பட்டார் என்பது உண்மை
யான செய்தி அல்ல. இதையெல்லாம் சொல்ல வேண்டாம் ;
சொன்னால், ஆளும் கட்சிக்கே கேவலம் என்ற நினைப்பில்தான்
இதுவரை இதைப் பற்றிப் பேசாமல் இருந்தேன். ஆனால்
மீண்டும் மீண்டும் இப்படி இதே பிரச்சினையை எழுப்புகின்ற
போதுவிளக்கம் சொல்லவேண்டியது அவசியமாகிறது. மாண்புமிகு

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 18

உறுப்பினர் சொக்கலிங்கத்திற்கும் வேறு ஒரு பெண்ணிற்கும் ஏற்கனவே தொடர்பு இருந்தது. இது சம்பந்தமாக அவருடைய மனைவி, அவருடைய மனைவியின் சகோதரர் ஆகியோர் ஏற்கனவே ஒரு தகராறு செய்து அந்த இரண்டாவது பெண் வீட்டிற்குச் சென்று அங்குள்ளவர்களை அடித்து, தாக்கி, ஏற்கனவே பெரிய தகராறு எல்லாம் நடைபெற்றிருக்கிறது. அந்த இரண்டாவது பெண்ணோடு— அந்தப் பெண்ணின் பெயர் உஷா— அந்த உஷா என்ற பெண்ணோடு இந்தச் சட்டமன்ற உறுப்பினர் கள்ளத் தொடர்பு வைத்திருப்பதை அவருடைய மனைவி விரும்பவில்லை; மைத்துனரும் விரும்பவில்லை. இருப்பினும் சட்டமன்ற உறுப்பினர் அந்த உறவை முறித்துக்கொள்ளவில்லை. தொடர்ந்து இந்த உறவு, கள்ள உறவு நீடித்ததால் ஆத்திரமடைந்த மைத்துனர் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு சில ஆட்களை அனுப்பி அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற விடுதிக்குள் சில ஆட்கள் புகுந்து, ஒரு சட்டமன்ற உறுப்பினரை யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து கடத்திச் செல்வது என்பது நடைமுறையில் நடக்க முடியாத ஒரு விஷயம். அந்தச் சட்டமன்ற விடுதிக்கு உறுப்பினரின் அறைக்கு வந்த நபர்கள் ஏற்கனவே அவருக்குத் தெரிந்தவர்கள் என்பதால்தான் அவர்களுடன் அவர் சென்றார். அவரை அந்த இடத்திலிருந்து அழைத்துச் சென்று, அவருடைய மனைவியின் தூண்டுதலின் பெயரிலே, மைத்துனரின் தூண்டுதலின் பெயரிலே அடித்துப் போட்டிருக்கிறார்கள். இந்த விவரங்களைப் பற்றி காவல் துறையினர் தெரிந்து, அறிந்துகொண்டு எனக்குத் தகவல் கொடுத்தார்கள். இதையெல்லாம் சொன்னால் நன்றாக இருக்காது என்பதால்தான் இதுவரை இதையெல்லாம் பேசாமல் இருந்தேன். எனவே சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்கள் தாக்கப்பட்டது அவருடைய சொந்தப் பிரச்சினை. குடும்ப விஷயம் என்பதைப் புரிந்துகொண்டு, இத்துடன் விட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவேதான் இந்தப் பிரச்சினையை இத்தோடு கைவிட்டு விடுங்கள் என்று சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன ** விளக்கங்கள், எம்.எல்.ஏ-வைப் பற்றி சொன்ன நிகழ்ச்சிகள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மார்ச் 18]

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினரைப் பற்றிச் சொன்ன நிகழ்ச்சிகள் உண்மையிலேயே அவர் சொன்னதுபோல் நன்றாகத்தான் இல்லை. நான் சொன்னது, அந்தக் குடும்ப நிகழ்ச்சிகள், எதனால் சண்டை நடந்தது என்பதை விட்டு விடுகிறேன். அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் அவரைத் தாக்கியது என்பதற்கு 307-ல் கூட கேஸ் போடவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் அதற்குள்ளே போவது நல்லதல்ல என்றுதான் அப்போதே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அது சம்பந்தமாக ஏற்கனவே காவல் துறையினர் நான்கு நபர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட அவருடைய மனைவியின் சகோதரர் ராஜன் என்பவரையும் காவல்துறையினர் தேடி வருகிறார்கள். அவர் இப்போது தலைமறைவாகி இருக்கிறார். எனவே இதில் யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவர்கள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட வந்தது இப்போது பிரச்சினை அது அல்ல. எந்தச் சம்பவத்தினாலும், யார் தாக்கப்பட்டாலும் அது 'அட்டெம்ட்டு மர்டர்' என்பதால் யார் தாக்கினாலும் அவர்கள் மீது 307-ஆவது போட்டிருக்கலாம் என்பதுதான் நான் சொல்லவந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன தாக்குதல் நடந்தது? எப்படி நடந்தது என்பதில் நீங்கள் ஏதோ தாக்குதல் என்ற பெயர் வந்தாலே 307 போட வேண்டுமென்பது எப்படிச் சரியாக வரும்? ஒருவர் தாக்கப்பட்ட உடனே 307 தான் போட வேண்டுமென்பது. . . .

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : இது சம்பந்தமாக காவல்துறையினர் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் 307-ல் கேஸ் போட வேண்டுமென்றால், காவல்துறையினர் நிச்சயமாகப் போடுவார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 18

திரு. எஸ். திருநாவுக்கரசு : அடுத்து இதைப்போல
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வியாபாரிகள் சங்கத் தலைவ
ராக இருக்கிற பாண்டியன் என்பவர் பயங்கரமாக தாக்கப்
பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்
போன்று முன்னாள் எம்.எல்.ஏ. வீடும் தாக்கப்பட்டிருக்
கிறது. இப்படி வரிசையாக இந்த நிகழ்ச்சிகள் நடைபெறு
கின்றன. சட்டமன்ற உறுப்பினர் சொன்னது போன்று
கோவையிலே கலெக்டர் அலுவலகத்திலே இரண்டு பெண்கள்
கொல்லப்பட்டார்கள். இப்படி இதிலெல்லாம் உடனுக்குடன்
அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அந்தக் குற்றவாளிகளை
கைது செய்யவேண்டும். இந்த வழக்குகள் தெரிவிக்கப்படு
கின்ற வழக்குகளுக்கும், கண்டுபிடிக்கப்படுகின்ற வழக்கு
களுக்கும் இருக்கின்ற வித்தியாசம் என்பது, எந்தவிதமான
அரசியல் தலையீடுகளும் இல்லாமல் இருந்தால் அந்தக்
குற்றவாளிகள் தப்பாமல் இருப்பதற்கு அது வழிவகை
செய்யும். எனவே போலீசைப் பொறுத்தவரையில் அரசியல்
தலையீடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்
றால் காவல் துறை அதிகாரிகள்—ஹோம் செக்கரட்டரியாக
இருந்தாலும் சரி, டி.ஜி.பி.யாக இருந்தாலும் சரி ஐ.ஜி.யாக
இருந்தாலும் சரி, எல்லோரும் மிகத் திறமையான நேர்மை
யான நல்ல அதிகாரிகள்தான். இதற்கு மேலேயும் கூட அவர்
களைப் பாராட்டலாம். ஆனால் நான் பாராட்டினால்
அவர்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடக் கூடாதே என்ற
காரணத்தாலே இதற்கு மேலே நான் பாராட்ட விரும்ப
வில்லை..........

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராட்டுவது என்
பதில் யார் பாராட்டினாலும், பாராட்டுக்கு உரியவர்களைப்
பாராட்டுவதை இந்த அரசு மட்டுமல்ல யாருமே பொதுவாக
விரும்புவார்கள். எனவே அதற்கும் நீங்கள் உள் நோக்கம்
கற்பிக்க வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1990—ஆம் ஆண்டு இதே சட்ட
மன்ற உறுப்பினர் அன்றைய முதல்வரின் துணையோடு, அன்றைய
காவல் துறையின் துணையோடு வந்து எங்கள் கட்சி அலுவல
கத்தைக் கைப்பற்றினார்களே, எங்கள் கட்சித் தலைவர்களை
யெல்லாம் தலைமைக் கழகத்திலேயிருந்து வெளியேற்றி
வழக்கு பதிவு செய்ய வைத்தார்களே, எங்கள் கட்சித் தலைவர்
களையெல்லாம் அன்று கைது செய்ய வைத்தாரே, அன்று
அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பது அவர்களுக்குப் புரிய
வில்லையா என்பதை அவர்கள் வெளியிடுவார்களா என்று
அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 மார்ச் 18]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
மறைவுக்கு பின்னால், ஜானகி அம்மையார் அணி, இன்றிருக்
கிற முதலமைச்சருடைய அணி என்று இருக்கிறபோது,
அவர்களுடைய தலைமையிலே என்ன செய்தோமோ அதைத்
தான் திருப்பிச் செய்தோம். அவருடைய தலைமையிலே
சென்று தலைமைக் கழகத்திற்கு முன்னாலே, இன்றிருக்கிற
முதலமைச்சருடைய தலைமையிலே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி
அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அணிகளாகப் பிரிந்து
இருந்த நேரத்திலே நாங்கள் தலைமை அலுவலகத்திற்கு
முன்னாலே போய் உட்கார்ந்து மறியல் செய்தோம், அப்
பொழுதும் அடிக்கப்பட்டோம், காவல் துறையினரால் அடிக்கப்
பட்டோம், அதுதான் நம்முடைய அனுபவமே தவிர எங்கேயும்
வன்முறையில் ஈடுபட்டு அத்து மீறிச் செல்லவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இரண்டு சம்பவங்
களுக்கும் சம்பந்தமே இல்லை. இரண்டு நிகழ்ச்சிகளையும்
ஒப்பிட முடியாது, புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்த பிறகு
நாங்கள் தலைமைக் கழகத்திற்கு உள்ளே அனுமதிக்கப்படவில்லை.
அப்போது நாங்கள் சென்று அந்த அலுவலகத்திற்கு வெளியே
சாலையில் அமர்ந்து மறியல் செய்தோம், நாங்கள் காவல்
துறையினரால் அடிக்கப்பட்டோம்; விரட்டப்பட்டோம்; கைது
செய்யப்பட்டோம்; அப்போது இருந்த காவல் துறையினர்
எங்களுக்கு உறுதுணையாக நிற்கவில்லை. ஆனால் இந்த மாண்பு
மிகு சட்டமன்ற உறுப்பினர் 1990 ஆம் ஆண்டு காவல் துறை
யினரின் துணையோடு அன்றைய முதல்வரின் ஆதரவோடு எங்கள்
தலைமைக் கழகத்திற்குள் நுழைந்து காவல் துறையினரை வைத்து
அங்குள்ள கட்சித் தலைவர்களைத் தாக்கி அங்கிருந்தவர்களை
யெல்லாம் அடித்து உதைத்து வெளியேற்றி போலீஸ் வேனிலே
ஏற்றி கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்
றார்கள். பிறகு கட்சி அலுவலகம் பூட்டப்பட்டு பல மாதங்கள்
நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து பின்னர்தான் எங்களிடம்
ஒப்படைக்கப்பட்டது. அப்படி இருக்கும்போது இரண்டு சம்
பவங்களையும் எப்படி அவர் ஒப்பிட்டுப் பேசுகிறார் என்பது
புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளே சென்று நாங்கள் யாரையும் அடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பிரச்சினையைச் சொன்னீர்கள், அது முடிந்த பிறகு.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் அடி வாங்கிய மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்களே இங்கே இருக்கிறார். அவரே சொல்லுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று நடந்ததை யெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் இப்போது நேரம் போதாது. ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால் முதல் நாளே மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அவர்களுக்கெல்லாம் சொல்லி விட்டார்கள்; இவ்வளவு பேர்கள் வருகிறார்கள், நீங்கள் தைரியமாக உள்ளே போங்கள் என்று அவர்களிடமும் காவல் துறையினரிடமும் சொல்லி விட்டார்கள்; அப்போது போலீஸ் கமிஷனரிடமும் சொல்லி விட்டார்கள், போலீஸ் கமிஷனரிடத்திலே சொல்லி நீங்கள் எல்லாம் அங்கே போய் உள்ளே இருப்பவர்களை வெளியே அனுப்பி விட்டு நீங்கள் உள்ளே போங்கள் என்று சாவியைக் கொடுத்தார்கள். இவ்வளவும் எப்படியோ எங்களுக்குத் தெரிந்து காலை 6 மணிக்கே நான் அங்கே போய் விட்டேன். 6 மணிக்கு நான் போனபோது அங்கே 500,600 போலீஸ்காரர்கள் இருந்தார்கள். அவர்களை நான் கேட்டேன் நீங்கள் எங்கே வந்தீர்கள் என்று. எங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு கமிஷனருக்குப் போன் பண்ணினேன். எனக்கும் தெரியாது என்று அவர் சொன்னார். நான் அவர்களிடம் உங்களுக்குத் தெரியாவிட்டாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கருணாநிதி அவர்கள் உங்களுக்கு உத்திரவு போட்டிருக்கிறார்கள். 'திருநாவுக்கரசும், திருநாவுக்கரசைச் சேர்ந்தவர்களும் வருவார்கள், பாதுகாப்பாக உள்ளே விட வேண்டும்' என்று. ஆகையினால் நாங்கள் தான் இப்போது உள்ளே இருக்கிறோம், இப்போது எங்களுக்கு விவரம் தெரியாது, நாங்கள் 2. 3 பேர் தான் இருக்கிறோம், அவர்கள் எங்களை அடிக்க வருகிறார்கள், நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அவர்கள் சொன்



[முற்பகல் 10-40

னார்கள் சட்டம் அதைச் செய்யும் என்றார்கள். அதற்குப் பிறகு
என்னவென்றால் காவல் துறையின் 500 பேர்கள் அங்கு வந்து
நாங்கள் உள்ளே 5. 6 பேர்கள் இருக்கிறபோது எங்களை அடித்
தார்கள், அதுமட்டுமல்ல, என்னையேகூட அடித்தார்கள், எல்
லோரையும் அடித்தார்கள், நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள்.
நான் அவர்களிடத்திலே சொன்னேன், என்னை நீங்கள் அடித்
தாலும் கொன்றாலும் பரவாயில்லை, என்னைக் கொன்ற பிறகு
தான் நீங்கள் உள்ளே போக முடியும் என்று சொன்னேன்.
படுத்து விட்டேன், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு
அங்கே இருக்கின்ற டெப்டி கமிஷனர், கருணாநிதிக்கு போன்
செய்து என்ன செய்வது? இவர் எல்லாம் போய் படுத்துக் கொள்
கிறார்கள்; என்ன செய்வது என்று கேட்டார்கள், அவரை
அடித்தால் தான் முடியும் என்றார்கள். அவர் அடிக்கச் சொன்
னாரோ இல்லையோ மறு தினம் வந்தார்கள். என்னைத்
தூக்கி வேனிலே போட்டார்கள். நான் வேனை விட்டு கீழே
வந்து படுத்துக் கொண்டேன் மறு தினமும், மாறி மாறி போலீ
ஸார்கள் என்னைத் தூக்கி வேனிலே போடுவதும் திருப்பி வந்து
இங்கே படுப்பதும் என்று இப்படி இருந்தது. அதிலே ஒன்று
என்னவென்றால் மாநிலத்திலேயிருந்து வந்த போலீஸ்காரர்கள்.
எனக்குப் பாதுகாப்பு கொடுத்திருந்தார்கள், ஆனால் என்னை
அடையாளம் தெரியாத மத்திய ரிசர்வ் போலீஸ் வந்தது. அந்த
மத்திய ரிசர்வ் போலீஸுக்கு என்னை அடையாளம் தெரியாமல்
அவர்கள் அடிக்கிறார்கள் என்னை. இதெல்லாம் முன்கூட்டியே
கருணாநிதி அவர்களும், புரட்சித் தலைவி அவர்களால்
நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டவர்கள் எல்
லாம் முதல் நாளே பேசி திட்டமிட்டிருக்கிறார்கள். காலையில் 5
மணிக்கு அந்த காவல் துறை வருவதற்கு காரணம் என்ன? காலை
500 பேர்கள் அங்கு வருவதற்கு என்ன காரணம்? டெப்டி கமிஷனர்
அங்கே வருவதற்கு என்ன காரணம்? அசிஸ்டெண்ட் கமிஷனர்
அங்கே வருவதற்கு என்ன காரணம்? அவர்கள் எல்லாம் வந்த
பிறகு இவர்கள் வருகிறபோது பாதுகாப்பாக இவர்களுக்குப்
போலீஸ் வருகிறது. போலீஸ் வந்து அவர்களை உள்ளே கொண்டு
வந்து விடுகிறது, இதெல்லாம் ஆளும் கட்சியில் இருந்த கருணா
நிதி அவர்களும் இவர்களும் இப்படிச் செய்து விட்டு இன்றைக்கு
ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் இப்படித் தவறு செய்
கிறார்கள் என்று சொல்வது எப்படி என்று தெரியவில்லை எனக்கு,
இதைத்தான் நான் சொல்வேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் கூறியது அத்தனையும் உண்மை. அன்றைய தினம் இந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கும், இவருடைய

கூட்டாளிகளுக்கும் அவர்களுடைய இல்லங்களிலிருந்தே கட்சி அலுவலகம் வருவதற்கு போலீஸ் எஸ்கார்ட் தரப்பட்டது, மாநில போலீசிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் அவர் கள் பரிவு காட்டுவார்கள் என்று பயந்து சி.ஆர்.பி.எஃப். பெர் சானேலிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தார்கள். அதுமட்டு மல்ல. எங்கள் கட்சித் தலைவர்களை அடித்து, உதைத்து. அவர்களை போலீஸ் வேனில் ஏற்றி வேப்பேரி போலீஸ் நிலை யத்திற்குக் கொண்டு சென்று கைது செய்தார்கள், அப்போது நான் அங்கு ஓடிச் சென்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) என்ன குற்றம் செய்தார்கள் என்று இவர்களைக் கைது செய்திருக்கிறீர்கள்? எந்தச் சட்டத்தின் கீழ் எந்த செக்ஷனின் கீழ், எந்தப் பிரிவின் கீழ் கைது செய்திருக் கிறீர்கள் என்று நான் வாதாடிக் கொண்டு இருந்தபோதே அன்றைய முதலமைச்சர், அன்றைய போலீஸ் கமிஷனருக்குப் போன் செய்து இந்த பொம்பளை போலீஸ் ஸ்டேஷனுக்கு வந் திருக்கிறாளா? அவளை விடக்கூடாது, அவளைக் கைது செய யுங்கள்' என்று அவர் டெலிபோனிலேயே உத்திரவு போட்டு, ஆனால் அந்த போலீஸ் கமிஷனர், 'சாரி, அதையெல்லாம் செய்ய முடியாது, அந்த அம்மையார் எந்தக் குற்றமும் செய்யவில்லை' என்று மறுத்தார் என்பதும் உண்மையே. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது அவர்கள் அடிபட்டதும், நானும் எங்களுடைய தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தோம். உங்களையா இப்படி அடித்துவிட்டார்கள் என்று கேட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்ட காரியங்களுக்கு எல்லாம், சட்ட விரோ தமான காரியங்களுக்கெல்லாம் காரணமாக இருந்த இந்தச் சட்டமன்ற உறுப்பினர் இன்றைய ஆட்சியைப் பற்றி குறை கூறுவது தகுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. கடந்த 9 மாத கால ஆட்சியில் இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இத்தகைய சம்பவங்கள், அரசியல் குறுக்கீடு என்று சொல்லக் கூடிய சம்பவங்கள் ஒன்றாவது தமிழகத்தில் நிகழ்ந்திருக்கிறதா? இதை எடுத்துக் காட்ட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள். நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிய காரணத் தால் இது இப்படியே போய்க் கொண்டிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்ன நடந்தது என்பதை விளக்கிய மாண்பு மிகு அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்களுக்கும், அரங்க நாயகம் அவர்களுக்கும் தெரியும். நான் இல்லை என்றால் அவர்களுக்கு அடி விழுந்து இருக்கும். நான் தான் அடி இல்லாமல் தடுத்தேன். (சிரிப்பு).

முற்பகல் 10-45.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இல்லாவிட்டால் எனக்கு அடி விழுந்து இருக்கும் என்று சொன்னார்கள். இருக்கட்டும், அதையும் ஏற்றுக் கொள்கிறேன். அவர் பெருந்தன்மையை. அப்படி என்றால் அழைத்துக் கொண்டு வந்த குண்டர்கள் எப் படிப்பட்டவர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அழைத்துக் கொண்டு வந்த குண்டர்கள் யாராக இருந்தாலும் அடிப்பதற்குத் தயாராகத்தான் வந்தார்கள் என்பதும், அவரால் தான் அடி அதிகமாக வாங்கவில்லை என்று சொன்னால் அதற்கு நன்றி. ஆனால் அழைத்துக் கொண்டு வந்தவர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர் கள் எல்லாம் அடித்தார்கள், இல்லை என்று அவரால் மறுக்க முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்திலே போய் அடி வாங்கியவர்களில் நானும் ஒருவன். அதன் தலைமை நிலையச் செயலாளர் என்ற முறையிலே நானும் போயிருந்தேன். அப் போது அவரோடு வந்த இந்த வன்முறை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இன்றைய தினம் இந்த அவையில் உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவரைக் கேட்டால் ரொம்ப விளக்கமாக, விவரமாக..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அவரை எழுப்பு கிறபோது அவர் விளக்கமாகச் சொல்வார். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: அன்று போடப் பட்ட அந்த சதித் திட்டத்தில் பங்கு கொண்ட பெரிய மனிதர்கள் யார், யார் என்பதையெல்லாம் விவரமாக எடுத்துச் சொல் வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். அவர் பெயரை இழுத்து விட்டார்களே! (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினை வந்த நேரத்திலே கொஞ்சம் மனசு குன்றிதான் உள்ளே உட்கார்ந்து இருக்கிறேன். இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியது அத்துணையும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் அன்றைக்கு மரியாதைக் குரிய உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் செய்த நிகழ்ச்சியில் நானும் உடன் இருந்தேன். அதற்கு பாவமன்னிப் பாகத்தான் இன்றைக்கு இப்படி உட்கார்ந்து கொண்டு இருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நானும் திரு. திருநாவுக்கரசு அவர்களும் செய்தது தவறு என்பதை ஒத்துக் கொண்டு, புரிந்து கொண்டு தவறுக்கு நான் பிராயச்சித்தம் தேடிக் கொண்டு இருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தவறு செய்ததற்கு இப்போது திருந்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே ஒழிய அந்தத்தவறுக்கு சரியான காரணம் கற்பிப்பது சரியாக இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்ச்சியைப் பற்றி இன்றைக்கு யார் வேண்டு மானாலும்; எதை வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். நானும் அவரும்கூட மாறி, மாறி விவரங்களைப் பேசிக் கொண்டே இருக்க முடியும், ஆனால் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளும் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய அத்தனை நிகழ்ச்சிகளும் உண்மை. காரணம் நானும் உடன் இருந்தவர்களில் ஒருவன். அன்றைக்கு ஆளும் கட்சியினுடைய உறுதுணையோடுதான் அந்தக் காரியம் நடந்தது, எங்களுக்கு கூட அன்றைக்கு இருந்த ஒரு சூழ்நிலை; அன்றைக்கு நாங்கள் கட்சியை விட்டு விலக்கப்பட்ட நேரத்தில் எங்களுக்கு இருந்த ஆத்திரத்தின் காரணமாக அறிவை இழந்த அந்த நேரத்தில் அதற்கு நாங்கள் உறுதுணையாக இருந்து இருக்கிறோம், (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே



அந்தத் தவறு நடந்தது என்பது உண்மைதான், அங்கு வந்த நேரத்திலே அங்கே வந்த எல்லாத் தலைவர்களும் அத்தனை பேரும் எங்கள் முன்னால் அடிக்கப்பட்டார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். டி. சோமசுந்தரம், திரு. அரங்க நாயகம், திரு. மதுசூதனன் அவர்கள், அருமை கொள்கைப் பரப்புச் செயலாளர் அவர்கள், திரு. முத்துசாமி அவர்கள் எல்லோருமே அன்றைக்கு எங்கள் முன்னால் தாக்கப்பட்டார்கள். இங்கே சொன்ன அத்தனையும் உண்மைதான் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அந்த பேச்சை விட்டுவிட்டு வேறு பேச்சுக்குப் போனால் எல்லோருக் கும் கௌரவம்; திரும்பத் திரும்ப அதையே பேசினால் நமக்கு கௌரவம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சொன்னது போல் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு வேறு பிரச்சினைக்குச் செல்லலாம் ஏன் என்றால் உண்மை பேசுகிறது,

திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை. இல்லை. தலைவர் அவர்களே, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சொன்னது மாதிரி நாங்கள் ஏற்கனவே நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு கருத்து வேறுபாடு கொண்டு நாவலர் அவர்கள், நான், திரு. அரங்கநாயகம், இவர் எல்லாம் சேர்ந்து நால்வர் அணி என்று இருக்கிறபோது தலைமைக் கழகத்தைக் கழகத்தை (குறுக்கீடு) அப்போது தலைமைக் கழகத்தைப் பிடிக்கிற முயற்சியிலே நாங்கள் ஈடுபடவும் இல்லை; அங்கே யாரும் போகவும் இல்லை; ஆனால் அதற்குப் பின்னால் எங்கேயிருந்து போனோம் என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களோடு எல்லோரும் அசோகா ஓட்டலிருந்துதான் புறப்பட்டுப் போ னோம்; (குறுக்கீடு) அவர்களை நீங்கள் சேர்த்துக் கொண்டீர் கள்; அவரும் திருந்தி உங்களோடு சேர்ந்து விட்டார்; நீங்களும் மன்னித்து சேர்த்துக்கொண்டு விட்டீர்கள். எனவே அந்த நிகழ்ச்சியெல்லாம்.... (குறுக்கீடு) அவரும் மனம் மாறி மன்னிப்புக் கேட்டு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை நீங்கள் இழுப் பதாலே அவருக்கு பதில் சொல்லுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.

முற்பகல் 10–50

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் பணிவன்

போடு சொல்லிக் கொள்கிறேன், திருப்பியும் இது வேண்டாம், திருப்பித் திருப்பி இப்படியே பேசிக்கொண்டு போனால் ரொம்ப அசிங்கமாகப் போகக் கூடிய சூழ்நிலை வரும். இது வேண்டாம். நம் எல்லோருக்கும் இது அவமானம். ஆகவே, வளர்த்த கட்சியில், நாம் இருந்த கட்சியில், நாம் இப்படி பேசிக் கொண்டிருப்பது அவமானம், அதைப் புரிந்து கொள்ளுங்கள், அதற்குத்தான் பிராயசித்தம் தேடிக்கொண்டு இருக்கிறோம், நான் தேடிவிட்டேன், நீங்கள் தேடாமல் இருக்கிறீர்கள், அது தான் வித்தியாசம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பிரச்சினையை இத்தோடு நானும் விட்டு விடுகிறேன், நான் சொல்ல வந்ததே அதுதான், எல்லோரும் அங்கே போய் விட்டார்கள், நான் மட்டும்தான் இங்கே இருக்கிறேன் என்றுதான் சொல்ல வந்தேன். அதை அவரே சொல்லி விட்டார், அவ்வளவுதான், பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கம், என்ன நடந்தது என்பது மேலுலகத்திலே இருக்கிற இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் ஆண்ட வனுக்கும் தெரியும், அதை விட்டுவிடுவோம், நான் அரசியல் தலையீடு வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் என்ன வென்று கேட்டால். அதற்கு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள், நான் உதாரணம் சொல்கிறேன், மத்திய அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருச்சி யிலே தாக்கப்பட்டார்கள். அதற்குப் பின்னாலே சுற்றுப் பயணம் தொடர்ந்தபோது காரைக்குடியிலே அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கவில்லை, (குறுக்கீடு) காரைக்குடியிலே அந்த நிகழ்ச்சி நடக்கவில்லை, (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கனவே பேசப் பட்டிருக்கிறது, இன்னும் சொல்லப்போனால் இது எங்களு டைய தோழமைக் கட்சியோடு சேர்ந்த ஒரு பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் ஆளுங்கட்சித் தலையீடு என்று அந்தமாதிரி ஒன்றும் இல்லை, இது ஸ்பான்டேனியசாக ஏதோ அங்கே நடந்த பிரச்சினை, அதற்குப் பின்னாலே எல்லோருமே அதை விட்டுவிட்டார்கள். விவசாயிகள் அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே, ஒரு கொதிப்பான சூழ்நிலையிலே நடந்து விட்ட ஒரு பிரச்சினை, அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களேகூட தனியாக அதிகாரிகளை அனுப்பி அதற்குரிய





நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அதைப்பற்றி பேசினால்— ஏற்கனவே ஒரு பிரச்சினையைப் பற்றி பேசினார்—அதைப்போல இதுவும் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே, சென்ற பேரவைக் கூட்டத் தொடரின் போதே இந்தப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. எனவே, பேசப்பட்ட ஒரு பிரச்சினையைத் திரும்பத் திரும்ப அவையில் பேசக்கூடாது என்பது மரபு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நடந்தது, விவசாயி கள் அவர்களுடைய ஆத்திரத்தைத் தெரிவித்த சம்பவங்கள்தான். பிறகு மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களே அதை மறந்து விட்டார்கள். அவரும் எங்களுடன் சேர்ந்து காவிரி நதி நீர்ப் பங்கீட்டு தாவாவில் தமிழகத்திற்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்பதற்காக எங்களுடன் வந்து பிரதமரைச் சந்தித்தார். எனவே மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களே மறந்து விட்ட ஒரு நிகழ்ச்சியை இந்த மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஏன் கிளறுகிறார் என்பதுதான் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை இந்த அவையிலேயே கிளப்பப்பட்டது. அதனால் அதற்குள் போக வேண்டாம், நேரம் ஆகிவிட்டது. நீங்கள் இரண்டு நிமிடங் களில் முடித்துவிடுங்கள்,

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, சிதம்பரத்தை அடித்தது பற்றிய விவாதத்தில் நான் பேசவில்லை.... (குறுக்கீடு)

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்க ளைப் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சத்தியமூர்த்தி, நீங்கள் உட்காருங்கள். அடித்ததைப் பற்றி என்று சொன்னாலே விவாதம் வரும். சிதம்பரம் பிரச்சினை என்பதோடு பேசுங் கள். (குறுக்கீடு) அடித்தது பற்றி என்று வருகிறபோது அதற்கு பதில் சொல்ல வேண்டிவரும். அந்தப் பிரச்சினைபற்றி இங்கே பேசப்பட்டது. அதற்கு மேற்கொண்டு ஏதாவது பிரச்சினை இருந்தால் அதற்குள் போங்கள்.

[1992 மார்ச் 18

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திரு. சிதம்பரம் அவர்கள் திருச்சியிலே
எப்படி விவசாயிகளால் தாக்கப்பட்டாரோ, அதேமாதிரி
காரைக்குடியிலே விவசாயிகளால் தாக்கப்படவில்லை. அதற்கு
என்ன காரணம் என்றால் அங்கே இருந்த டி.ஐ.ஜி-யும்
எஸ்.பி.-யும் முறையாக நடவடிக்கை எடுத்து காங்கிரஸ்
காரர்களுக்கும் அண்ணா தி.மு.க.வினருக்கும் சண்டை
ஏற்படாமல் தடுத்து விட்டார்கள். அதற்கு அவர்களுக்குப்
பரிசு என்னவென்றால், டி.ஐ.ஜி.-யும் எஸ்.பி-யும்
அன்றைக்கே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. திருநாவுக்கரசு அவர்கள் பிரச்சினையை திசை திருப்
பிக் கொண்டு இருக்கிறார். காவல்துறை மானியத்திலே பேசு
கின்றபோது காங்கிரஸ் கட்சிக்கும் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏதோ பிரச்சினை
பெரிதாக இருக்கிறது என்பதைப்போல பேசிக் கொண்டு
இருக்கிறார். உண்மையிலேயே நடந்தது என்னவென்றால்,
மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள்
அங்கே செல்லுகின்ற நேரத்திலே எல்லா இடங்களிலும் காவிரி
நீர்ப் பிரச்சினையிலே அவர் எடுத்துக்கொண்ட ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
திரு. சிதம்பரம் பிரச்சினை என்பது வேண்டாம். அதற்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லிவிட்
டார்கள். மேற்கொண்டு ஏதாவது விவரம் இருந்தால்
சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியைப் பொறுத்த
மட்டிலே, அன்றைக்கு இந்தப் பிரச்சினையில் திருச்சியிலே
எப்படி விவசாயிகள் முக்கியத்துவம் கொடுத்து எதிர்ப்பு
தெரிவித்தார்களோ, அதேபோல நம்முடைய பசும்பொன்
மாவட்டத்திலே இருக்கிற அனைத்து விவசாயிகளும் ஒரிடத்
திலே கூடி சாத்வீகமான முறையிலே, கறுப்புக்கொடி
போராட்டம் என்ற முறையிலேதான் ஆர்ப்பாட்டம் நடத்
தினார்களே தவிர வன்முறை நடக்கவில்லை. அவர் மீது
வன்முறைத் தாக்குதலோ, கல்வீச்சோ, எந்தவிதமான வன்
முறையும் அன்றைக்கு காரைக்குடியிலே நடக்கவில்லை.
அவர் சென்று விட்டதற்குப் பின்னாலே, பின்னாடி வந்த



1992 மார்ச் 18] [திரு. எஸ். கண்ணப்பன்]

பிரச்சினையிலே போலீசுக்கும் அங்கேயிருந்த ஆண்டி
சோஷியல் எலிமெண்ட்ஸ் என்று சொல்லப்படுகின்ற சிலருக்கும்
நடந்த தகராறேயொழிய திரு. சிதம்பரம் அவர்களுக்கும்
மற்றவர்களுக்கும் அந்தப் பிரச்சினையிலே எந்தவிதமான
பாதிப்பும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். அதேபோல, மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களும்
நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் டெல்லியிலே
கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே நானும் கூட இருந்தேன்.
மிகவும் ஆணித்தரமாக அன்றைக்குப் பிரதமர் முன்னாலே நம்
முடைய காவிரி நீர்ப் பிரச்சினை தீர, தமிழ்நாட்டிற்குள்ள
உரிமை பற்றி விவாதித்ததை நான் நேரிலேயே கண்டேன்.
ஆகவே, மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள், காவிரிப்
பிரச்சினையிலே தமிழக அரசோடு இன்றைக்கு முழுமையாக
ஒத்துழைத்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அதற்கு
இடையூராக இன்றைக்கு நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள்
இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே நடைபெற்ற
சம்பவத்திற்குப் பிறகு காவல்துறையினர் அனைத்திந்திய
அண்ணா தி.மு. கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே
மோதல் ஏற்படக்கூடாது என்பதற்காக அவர்களாக
காரைக்குடியில் ஒரு அசம்பாவிதம் நடைபெறாமல் தடுத்
தார்கள் என்பது சரியான தகவல் அல்ல, இப்படி மாண்புமிகு
உறுப்பினர் கூறியதால் சரியான விளக்கத்தைக் கூறுவது
என்னுடைய கடமையாகிறது.

முற்பகல் 10-55

திருச்சியில் அன்றையதினம் மாண்புமிகு மத்திய அமைச்சர்
சிதம்பரம் வந்தபோது ஒரு வன்முறைச் சம்பவம் நடை
பெற்றது. அதன் பிறகு அவர் செல்கின்ற பாதையில் ஒவ்
வொரு ஊரிலும் விவசாயிகள், இப்படிக் கூட்டமாக நிற்
கிறார்கள். கறுப்புக் கொடி காட்டுவதற்கு ஆயத்தமாக நிற்
கிறார்கள் என்ற தகவல் எனக்குத் தரப்பட்டது. அப்
பொழுது ஒரு ஓய்வு விடுதியில் அவர் தங்கியிருந்தார், அந்தச்
சமயத்தில் அந்த ரேஞ்ச் டி.ஐ.ஜி. யும், அந்த மாவட்ட ஆட்
சித் தலைவரும், மாவட்ட எஸ்.பி. யும் நான் பணித்ததன்
பேரில் திரு. சிதம்பரம் அவர்களைச் சந்தித்தார்கள். அன்றைய
தினம் விவசாய மக்கள்—விவசாயப் பெருங்குடி மக்கள் கொதிப்
படைந்திருக்கிறார்கள். எனவே, உங்களுடைய சுற்றுப் பயணத்தை
இத்துடன் ரத்து செய்து மீண்டும் சில நாட்கள் கழித்து
மக்களுடைய ஆவேசம் அடங்கிய பின்னர் தமிழ் நாட்டில்
சுற்றுப் பயணம் மேற்கொள்வது நல்லது என்று அவருக்கு
அறிவுறுத்தும்படி நான் கூறியிருந்தேன்.

ஆனால் காவல்துறை அதிகாரிகள் இப்படிக் கூறிய பின்
னரும் திரு. சிதம்பரம் அவர்கள் தனது சுற்றுப் பயணத்தை
ரத்து செய்ய ஒத்துக் கொள்ளவில்லை. தொடர்ந்து சுற்றுப்
பயணம் செல்வேன் என்று தெரிவித்தார். இந்தத் தகவலும்
எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு அவர் காரைக்குடி
செல்கின்ற வரையில், புதுக்கோட்டை போன்ற ஊர்களை
யெல்லாம் தாண்டித்தான் சென்றார்—அந்தப் பாதை முழு
வதும் எங்கெல்லாம் இப்படிக் கூட்டம் கூட்டமாக
விவசாயிகள், மக்கள் கூடி நிற்கிறார்களோ அந்த
இடங்களிலெல்லாம் பலத்த போலீஸ் பாதுகாப்பு போட
வேண்டுமென்று நான்தான் உத்தரவிட்டேன். போகின்ற
வழியில் இரண்டு ஊர்களில் அதிகமான கூட்டம் இருந்த
தால், நானே இட்ட உத்தரவின் பேரில், தடியடிப் பிர
யோகம் நடத்தப்பட்டு, திரு. சிதம்பரம் அந்த இடத்திற்கு
வந்தடையும் முன்பாகவே அந்தக் கூட்டம் கலைக்கப்பட்டது.
காரைக்குடியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்
பட்டிருந்தது. அங்கே பெரிய கூட்டம் கூடியிருந்தது உண்மை
தான். ஆனால் திரு. சிதம்பரம் அவர்கள் சென்ற பிறகு,
அவருக்குப் பின்னாலே வந்த வண்டியில் இருந்த சிலர்—
சில விஷமிகள் அங்கிருந்த கூட்டத்தினர் மீது செருப்பை
வீசினார்கள். இதனால் ஆத்திரமடைந்த அந்த மக்கள் அந்த
வண்டிகளைத் துரத்த முற்பட்டார்கள். அப்பொழுதுகூட
காவல் துறையினர் அப்படி வண்டிகளைத் துரத்த முற்பட்
டவர்களின்மீது தடியடிப் பிரயோகம் நடத்தினார்கள்; அவர்
களைக் கலைத்தார்கள் என்பதுதான் உண்மையாகும்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நான் இந்த விவரத்திற்குள்ளேயே போக
வில்லை. ஆனால் அந்த டி.ஐ.ஜி. யும். எஸ்.பி, யும்
அன்றைக்கே ஒயர்லெஸிலேயே மாற்றப் பட்டார்களே, அது ஏன்?
பாதுகாப்பு கொடுத்ததற்காகப் பரிசா? அல்லது அரசாங்கம்
இந்த உற்சாகமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை, இல்லை.
இந்த நிர்வாக மாறுதலுக்குள்ளே பொதுவாக பேரவையிலே
விவாதம் எடுத்துக் கொள்வதில்லை. மாறுதல் என்பது
எப்படி என்பதெல்லாம், அது நிர்வாக சம்பந்தப்பட்ட விஷ
யம். அதிலே ஒயர்லெஸிலே போயிற்றா, வேறு விதமாகப்
போயிற்றா என்பதைப்பற்றியெல்லாம் இப்பொழுது உங்
களுக்கு என்ன தகவல் இருக்கிறது? ஒயர்லெஸிலே போயிற்று
என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடு) ஆதாரம்
இருக்கிறதா? நீங்கள் சொல்கிறீர்கள், ஒயர்லெஸில் உத்தரவு
போயிற்று என்று. (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்கு நான்
ஆதாரம் கேட்கிறேன். ஒயர்லெஸிலே மாறுதல் உத்தரவு



சென்றது என்று சொல்கிறீர்களே ஆதாரம் இருக்கிறதா?
(குறுக்கீடு) ஆதாரம் இருக்கிறதா? உண்டு அல்லது இல்லை
என்று சொல்லுங்கள்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> ஆதாரம் இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஆதாரம் உண்டு
என்றால் கொடுங்கள். ஆதாரம் இருந்தால் என்னிடம் கொடுத்
திருக்க வேண்டும். நீங்கள் இதில் பேசுகின்றபொழுது ஆதாரம்
இருந்திருந்தால் என்னிடம் கொடுத்திருக்க வேண்டும். ஆதாரம்
இருந்தால் என்னிடம் கொடுத்துவிட்டு நீங்கள் பேசியிருக்க வேண்
டும். என்னிடம் கொடுத்து விட்டுச் சொல்லவேண்டுமென்று
விதி இருக்கிறது. (குறுக்கீடு) அது இல்லை சார், உட்காருங்கள்.
விதிகள் இருக்கின்றன. தெரிந்து கொண்டு பேசுங்கள். தெரியா
மல், ஏதோ எல்லாம் தெரிந்தவர்போல் பேசிக்கொண்டிருக்கக்
கூடாது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்பு
மிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு உயர் அதிகாரியை மாற்றி
யது குறித்துத் தன்னிடத்திலே ஆதாரமில்லாமல் பேசிக் கொண்
டிருப்பதும், அந்த ஆதாரத்தை உங்களிடத்திலே தெரிவிக்காமல்
நம்முடைய உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதும் சரிதானா
என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதி அமைச்
சர்.

*<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, அரசு அதிகாரிகளை மாறுதல்
செய்வதும், ஒரு இடத்திலேயிருந்து மற்றொரு இடத்திற்கு
மாற்றுவதும், அவர்கள் பார்த்த வேலையிலேயிருந்து வேறு
வேலைக்கு மாற்றுவதும் அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தைப்
பொறுத்து எடுக்கின்ற நிகழ்ச்சிகளே தவிர, அதற்கு உள்
நோக்கம் கற்பிப்பதோ, அதற்கு இன்ன காரணத்தினால் என்று
அவரவர்கள் யூகிப்பதோ எந்தவகையிலும் பொருந்தி வராது.
நான் இருபதாண்டுக் காலமாக எல்லா ஆட்சியிலேயும் இங்கே
இருந்திருக்கின்றேன். ஆகவே, எந்தெந்தக் காலத்திலே என்
னென்ன உத்தரவுகள் போடப்பட்டன என்று சொன்னால் இன்
றைக்கு ஆரம்பித்து நாளைக்குத்தான் நான் முடிக்க முடியும்.
ஆகவே, அந்த அளவோடு நிர்வாக சௌகரியத்திற்காக அரசு
சிலபல நடவடிக்கைகளை எடுக்கின்றபொழுது அதற்கு உள்
நோக்கமோ, அவரவர்களுக்குத் தோன்றுகின்ற நோக்கங்
களையோ சொல்வது சரியல்ல

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசி முடியுங்கள்; உங்
களுடைய நேரம் முடிந்து, நெடு நேரமாகிவிட்டது.

முற்பகல் 11—00

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனவே நான் சொல்ல வந்தது, அரசு நிர்வாகங்
களில், பொதுவாக, காவல்துறை, நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட
வற்றிலே 'டிலே'-யை அரசு தவிர்க்க வேண்டும். 'குண்டாஸ்'
ஆக்டில் 'அரெஸ்ட்' செய்வதற்காக, கோப்பு முதலமைச்சருக்குச்
சென்று வெளியாகி 8 நாட்களில்................... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது, சில ஆதார
மற்ற, இங்கே விளக்கம் அளிக்கப்பட்ட பிரச்சினைகள் மீது
விவாதங்கள் நீண்டு கொண்டிருப்பது நல்லதல்ல. உங்களுடைய
நேரம் முடிந்து விட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் முடிந்து
விட்டது. பொதுவான விஷயங்களைச் சொல்வதாக இருந்
தால் நீங்கள் ஒன்று அல்லது இரண்டு நிமிடத்திற்குள் முடித்துக்
கொள்ள வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன
விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். 8 நாட்கள் 'டிலே'
ஒன்றும் பெரிய 'டிலே' அல்ல. ஒரு நாளைக்கு ஆயிரம் கோப்பு
கள் வருகின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். 8 வாரம்
கூட சில கோப்புகள், முதலமைச்சர் அலுவலகத்திலே தேங்கி
யிருக்கலாம். அதிலே தவறு இல்லை. ஆனால், எந்தக்
கோப்பை தேங்க வைத்துக் கொள்வது, எந்தக் கோப்பை
உடனுக்குடன் கையெழுத்துப் போடுவது என்பதில் காலதாம
தம் இல்லாமல் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது, அதைத்தான்
நான் சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத்துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அண்மையில் உயர்நீதிமன்றத்தில்
குண்டர்கள் சட்டத்தில் 8 நாட்கள் கடந்து, போற்றுதற்குரிய
டாக்டர் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டார்கள் என்றும்
அது சிறைவாசிக்கு அளிக்கிற ஆர்டிகிள் 22, கிளாஸ் (5)
'இல்லீகல் டிடென்ஷன்' என்ற வகையில் ஏற்றதல்ல என்றும்
உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதன் மீது இன்றைக்கு
நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறோம். ஆனால்,
'குண்டாஸ் ஆக்ட் 14, 1980'—அதன்படி, தண்டனை விதிக்
கப்பெற்ற கைதி, முதலமைச்சருக்கு 'ரெப்ரசென்டேஷன்' செய்



கிறபோது, விரைவாக முடிக்க வேண்டுமென்று சட்ட விதி இருக்
கிறதே தவிர, 8 நாட்களா, 10 நாட்களா, 12 நாட்களா என்று
நாட்கள் குறிப்பிடாத காரணத்தினால், அதுதான் 'ரீசனபிள்
டைம்'; 'எக்ஸ்பீடிஷியஸ்லி' விரைவாக, துரிதமாக. ஆனால், 12
நாட்களுக்குள்ளாக கைது செய்தால், கைது செய்தபிறகு, அவர்
கள் கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. முதலமைச்சர் போட்டிருக்கிறார்கள். பிறகு, அட்வைசரி
போர்டு—3 உயர்நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட அந்த
அட்வைசரி போர்டுக்கு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்துப்
போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களும் உறுதி செய்திருக்
கிறார்கள். பிறகு, இந்தக் கைதி நம்முடைய முதலமைச்சருக்குக்
கருணை காட்டுங்கள் என்று ஒரு 'ரெப்ரசென்டேஷன்'—
அந்த ரெப்ரசென்டேஷனை இத்தனை நாட்களுக்குள்தான்
முடிக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே இடமில்லை. அதற்கு
சுப்ரீம் கோர்ட்டிலே ஆதாரம் இருக்கிறது. அந்த ஆதாரம்
என்னிடத்திலும் இருக்கிறது. நாங்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச்
சென்றிருக்கிறோம். நீதியைப் பெறுவோம்; பெறுவோம் என்
பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திடுவதிலே தாமதம்
கிடையாது. இன்னும் சொல்லப்போனால், அந்த நீதிமன்றத்
தீர்ப்பை நான் குறை கூறுவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்கள் கருதக் கூடாது. ஏனென்றால், ஏற்கெனவே தீர்ப்பு
கூறிவிட்டதைபற்றி கருத்து சொல்லலாம் என்ற ஒரு நியதி
இருக்கிறது. They have decided erroneously. அவர்கள்
குறையாகத் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். அந்தக்
குறையைப் போக்க நாங்கள் உச்ச நீதிமன்றம் சென்றிருக்
கிறோம். எங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு ஆதாரம்
இருக்கிறது. கேஸ் லா இருக்கிறது. எனவே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் காலதாமதமாகப் போடுவதே இல்லை
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உயர்நீதிமன்ற நீதிபதிகள் குறையான தீர்ப்பைச்
சொல்லியிருக்கிறார்கள் என்று சட்ட அமைச்சர் பேசி,
அது சட்டமன்றத்திலே இடம் பெறலாமா........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை; அப்
படி நாங்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம் என்று
தான் சொல்கிறார். உச்சநீதிமன்றத்திற்குக் கீழே இது தவ
றான தீர்ப்பு என்றுதான் உச்சநீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள்.
அதைச் சொல்வதிலே தவறு இல்லை. அது தவறான
தீர்ப்பு என்று நாங்கள் உச்சநீதிமன்றத்திற்குப் போய் முறையிடு
கிறோம் என்று சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை நாட்களுக்குள் ஒரு உத்தரவு போட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருந்தால்தான். அந்தக் காலக்கெடுவுக்குள் செய்யவில்லை என்றால், அதைக் காலதாமதம் என்று சொல்ல முடியும். எத்தனை நாட்கள் என்றே வரையறுக்கப்படாத ஒரு நிலையில், 8 நாட்கள் 'டைம்' எடுத்துக் கொண்டால், அது காலதாமதம் என்று எப்படிச் சொல்ல முடியும்? இதைச் சொல்லத்தான் நாம் சுப்ரீம்கோர்ட்டில் முறையீடு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி ஒரு கருத்தை ஒரே நிமிடத்தில் சொல்லி முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதிலே வேண்டாம்; நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மேல் முறையீட்டிற்குச் சென்றிருக்கிறோம் என்கிற அளவோடு இருப்பது சரி (குறுக்கீடு).

முற்பகல் 11-05

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> நான் ஒன்று சொல்கிறேன். அதற்கு இது உதவியாக இருக்கும். ஏனென்றால், நேற்றைக்கு ஒரு தவறான கருத்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனவே, அதை விளக்க, உதவ, சட்டத்திற்குட்பட்டு உங்களுக்கு உதவ, 1975 ஆம் ஆண்டு எஸ்.எம். துரைராஜ் என்ற பொருளாளர்மீது செங்கற்பட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கியது. அவர்மீது ஒரு வழக்கு போட்டார்கள். அந்த வழக்கின் தீர்ப்பு வெளியே வந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு வெளியே வந்த போது அந்த செசன்ஸ் கோர்ட் கருணாநிதி அவர்கள் மீது ''கண்டனத்தை'' அதாவது ''ஸ்டிச்சரை'' பாஸ் செய்தது. நான் அன்றைக்கு ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தேன். அந்தத் தீர்ப்பை வாசிக்கின்றபோது அங்கே இருந்த நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சொன்னார்கள் It is subjudice. வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அல்லது நீதி மன்றத் தீர்ப்பை நீங்கள் விமர்சிக்கின்றீர்கள் என்று சொன்ன நேரத்திலே, தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு அந்தத் தீர்ப்பை விமர்சிக்க உறுப்பினருக்கு உரிமை உண்டு என்று ராஜ்ய சபையிலே ஒரு ரூலிங் இருந்தது; இன்னும் இருக்கிறது. அந்த வகையிலேதான் ஹைகோர்ட்டில் தீர்ப்பு முடிவாகி வெளிவந்துவிட்டது. அதனுடைய தீர்ப்புகூட என்னிடத்திலே இருக்கிறது. அது ஒரு Public document அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்லலாம். நீதிபதியைப் பற்றி அல்ல. தீர்ப்பைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் 18 நாள் பிரச்சினைதான் இங்கே மையமாக இருக்கிறது. அதுபற்றித்தான் பேச வேண்டுமே



தவிர, நீதிபதியைப் பற்றி அல்ல. ராஜ்யசபையிலே ரூலிங் இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வேறு ஏதாவது மானியக் கோரிக்கைமீது பிரச்சினை இருந்தால் சொல்லி முடிக்கவும். நேரம் ஆகிவிட்டது.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> போலிச் சீட்டுக் கம்பெனிகள் மக்களை ஏமாற்றி வருகின்ற விதத்திலே பல இடங்களிலே நடத்தப்பட்டு, டி.வி. தருகிறோம், கார் தருகிறோம் என்றெல்லாம் விளம்பரங்களைச் செய்து, பிறகு அவர்கள் இருந்த இடத்தையும் மாற்றிக் கொண்டு, இலட்சக்கணக்கான பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு சில பேர் ஓடி விடுகிறார்கள். இதற்கு (குறுக்கீடு). **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து உறுப்பினருடைய பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். திரு. திருநாவுக்கரசு இத்தோடு பேசி முடித்து விட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ச. இராமச்சந்திரன், (குறுக்கீடு) இல்லை. உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டுப் பேசினால் அதற்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசினால் என்ன அர்த்தம்? குறுக்கீடு செய்வதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால், அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. நேரம் முடிந்துவிட்டது. தயவு செய்து உட்காருங்கள். ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வை குறித்து ஏற்கெனவே சட்ட மன்ற உறுப்பினர்கள் கூறியதுபோல், பீர் தொழிற்சாலைக்கு டெண்டர் வைத்திருக்கலாம். சரி, முன்பெல்லாம் இருந்த ஆட்சி காலத்திலே பறி வாங்கப்பட்டார், அதற்காக அதைத் திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதைப்போன்று எம்.ஜி.ஆர். பெயரிலே இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜை அரசு எடுத்தது. அதை ஏன் திருப்பி கொடுத்திருக்கக்கூடாது. எம்.ஜி.ஆர். பெயரிலே இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி என்று ஏற்படுத்தப்பட்ட மருத்துவக் கல்லூரி அல்லவா அது. பீர் தொழிற்சாலையைத் திருப்பிக் கொடுக்கிறபோது, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அவரால் நிறுவப்பட்ட அதை ஏன் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பீர் தொழிற்சாலை எந்தக்
காரணங்களினால் மீண்டும் அரசால் திருப்பிக் கொடுக்கப்பட்டது
என்பதைப் பற்றி விரிவான பதில் வைத்திருக்கிறேன். என்னு
டைய பதில் உரையை நான் நிகழ்த்தும்போது இதையெல்லாம்
விளக்கிக் கூறலாம் என்றிருக்கிறேன். இராமச்சந்திரா மருத்து
வக் கல்லூரியுடன் இந்தப் பிரச்சினையை ஒப்பிட்டுப் பேசுவது
எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. இராமச்சந்திரா
மெடிக்கல் கல்லூரியைப் பொறுத்த வரையில் நீதிமன்றத்தில்
ஒரு வழக்கு இருக்கிறது. இப்போது அந்தப் பிரச்சினை '' சப்-
ஜுடீஸ் '' ஆக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைய சூழ்
நிலையில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள் ஒரு
பெரிய போராட்டத்தையே தமிழகம் எங்கும் நடத்திக் கொண்
டிருக்கிறார்கள். தனியாருக்கு மருத்துவக் கல்லூரியை இனி
மேல் வழங்கக் கூடாது என்று அவர்கள் போராட்டம் நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற தனியார்
மருத்துவக் கல்லூரிகளையும் அரசாங்கமே கைப்பற்ற வேண்டும்
என்றும் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே,
இத்தகைய ஒரு சூழ்நிலையில் இராமச்சந்திரா மருத்துவக் கல்
லூரிப் பிரச்சினையையும், இந்த டிஸ்டிலரி பிரச்சினையையும்
ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்
களே, மதுவிலக்கு என்கிறபோது உண்மையான மதுவிலக்கு எப்
போது அமல்படுத்தப்படும் என்று சொன்னால், பூரண மது
விலக்கு அமலில் இருந்தால்தான் முடியும். ஆனால், ஐ.எம்.
எப்.எல்.-ஐப் பொறுத்த வரைக்கும் யாருமே ஐ.எம்.எப்.எல்.-ஐ
வைத்துக் கொள்கிறார்கள். கடந்த ஆட்சியிலும் சரி, இந்த
ஆட்சியிலும் சரி, 56 இலட்சம் பெட்டிகள் ஐ.எம்.எப்.எல்.-இல்
உற்பத்தி ஆகிறது. இந்தப் பெட்டிகளில்தான் சூட்சுமமே இருக்
கிறது. இப்படி உற்பத்தி ஆகிற காரணத்தாலே, இந்த ஐ.எம்.
எஃப்.எல். என்பதை மட்டும் பணக்காரர்கள் குடிக்கிறார்கள்.
அதன் மூலமாக பலன் கிடைக்கிறது ....................

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.
முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்
களே, உள்நாட்டில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு வகை மது
வகைகளையும் ரத்து செய்தால்தான் உண்மையிலேயே பூரண



1992 மார்ச் 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மதுவிலக்கு ஏற்பட்டு அதனால் ஏழை, எளியவர்கள் பலன் அடை
கிற நிலையும் தமிழகத்தில் உண்டாகும் என்ற காரணத்தால்
பூரண மதுவிலக்கை அமல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துவிடுங்கள்.
அடுத்து திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.கே.எஸ்.எஸ்.
ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
திருநாவுக்கரசு அவர்கள் பேசிய நேரத்தில் '' எல்லோரும்
சேர்ந்துவிட்டார்கள், நான் மட்டும் சேரவில்லை '' என்று
சொன்னார்கள். அதாவது '' நான் ஒருவர் மட்டும் சேர
வில்லை '' என்று.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் பிரச்சினை
பற்றிப் பேசி அதன் உள்ளே போக வேண்டாம். அவர் சொல்லி
யிருக்கிறார் என்று சொல்லி அதற்காகப் பதில் சொல்ல வேண்
டாம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு இதய
தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்குச் செய்த கொடுமைக்கு
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரே இருந்தாலும் கூட கட்சியில்
சேர்த்திருக்க மாட்டார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்
களுக்குத் தாயுள்ளம் இருந்த காரணத்தால் சேர்த்திருக்கிறார்
கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே நாம் நடப்பதைப்
பொறுத்துத்தான் அவர்களுடைய உள்ளம் இரங்கும். ஆகவே
அந்த முயற்சிதான் இருக்கவேண்டுமே தவிர எதிர்த்துப் பேசுவது
சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ச. இராமச்
சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,

'' தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.''

என்றார் திருவள்ளுவர். நடுநிலையோடு குற்றத்தினை
ஆராய்ந்து மீண்டும் அந்தக் குற்றம் நிகழாவண்ணம் ஒருதலை
யாகச் செல்லாது குற்றத்திற்கேற்ப பிறிதோர் காரணத்திற்காக
அன்றி உலகு ஒப்ப தண்டிப்பதே அரசுக்கு இலக்கணம் என்று
திருவள்ளுவர் அழகாக எடுத்துக் குறிப்பிட்டார்.

வீட்டிலே பத்திரமாக இருக்க வேண்டுமானாலும், வெளி
யிலே பாதுகாப்பாக உலவ வேண்டுமானாலும் அமைதி தேவை.
காவல் துறையின் பொறுப்பு அது. அரசு நிறைவேற்றுகிற சட்டங்
களை அமல்படுத்துவதும், நல்லவர்களைக் காப்பாற்றி அல்லவர்
களைக் கடிவதும் காவல் துறையினுடைய பொறுப்பும் கடமை
யுமாகும். அவ்வகையில் தமிழ்நாடு அரசு காவல் துறை சிறப்பான
இடத்தை வகிக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன்.
வீணையும் நன்றாக இருக்கவேண்டும். வாசிப்பவரும் நன்றாக
இருக்க வேண்டும். அப்போதுதான் கேட்பதற்கு இனிமையாக
இருக்கும். காவல் துறை வீணை என்றால்— அவர்களுடைய
வேலை நிலைகள், வாழ்க்கை நிலைகள் மேம்படுத்தப்பட
வேண்டும். வேலை நிலைகள் என்று சொல்கிறபோது ''ஒர்க்கிங்
கண்டிஷன்ஸ்'' ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வேலை செய்து
ஒரு வாரத்தில் 7 நாட்களும் பணியாற்றுவார்களேயானால்
அவர்களால் எப்படி அந்த வேலைப் பளுவைத் தாக்குப் பிடிக்க
முடியும் என்பதை நாம் கட்டாயம் சிந்திக்கவேண்டியவர்களாக
இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல. வளர்ந்து வருகிற ஒரு நாட்டில் பல
பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடிய நேரத்தில் மனித கண்
ணோட்டத்தோடு அணுகவேண்டிய சூழ்நிலையை நாடு காவல்
துறையிடம் எதிர்பார்க்கிறது. ஆகவே அவர்களது வேலை
நிலைகளைச் சீராக்குவது அரசாங்கத்தின் தலையாய கடமை
யாகும். குறிப்பிட்ட நேரத்தில் வேலை, குறிப்பிட்ட நேரத்தில்
ஓய்வு, அவர்களுக்குரிய பதவி உயர்வு போன்ற நிலைகளை
எல்லாம் ஆய்ந்து பார்த்துச் செப்பனிட வேண்டியதும் மிக, மிக
முக்கியமான, முதலாவதாக கவனிக்கப்பட வேண்டியதும்
ஆகும். அதேபோல் அவர்களுடைய வாழ்க்கை நிலையில் பலரிடம்
கையேந்தாமல், தங்களது வாழ்க்கையைத் தாங்களே நடத்திக்
கொள்ளக்கூடிய, குறிப்பாகச் சொல்லப்போனால் நாணய
மாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிற
அலுவலர்கள் அவ்வாறு நடந்துகொள்ளத்தக்க அளவுக்கு
'லிவ்விங் கண்டிஷன்ஸ்' அதாவது அவர்களுடைய வாழ்க்கை
நிலை அமைய வேண்டும். அதற்கு அரசு எந்த
நடவடிக்கை எடுத்தாலும் அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்
போம். அதேபோல் கடமையிலும் கண்ணும் கருத்துமாக இருந்து
நேர்மையோடு பணியாற்றுகிற காவலர்களுக்கு அங்கீகாரம்
வழங்குகிற வகையில் அவர்களை பாராட்டுவதும், பரிசு
வழங்குவதும் ஒரு அரசு செய்யவேண்டிய, ஊக்கப்படுத்தப்பட
வேண்டிய கடமையாகும். அந்த வகையிலேயும் காவல்துறை
ஊக்கப்படுத்தப்படவேண்டும் என்று நான் கோடிட்டுக் காட்ட
விரும்புகிறேன்.



முற்பகல் 11–15

காவல்துறை தன் கடமைகளை அமல் படுத்துகின்றபோது என்னைப் பொறுத்தவரையில் காவல் துறையைப் பற்றி உள்ள சிலபலவற்றை நான் எடுத்துச் சொல்வதனாலேயே அந்த காவல் துறையிலே உள்ள அத்தனை பேர்களும் அப்படி நடக்கிறார்கள் என்பது பொருள் அல்ல. பொதுவாக காவல்துறையில், 4 வகையான நோய்கள் இருக்கின்றன.

முதலாவதாக காவல்துறை என்பது வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்திலேயிருந்து தொடர்ந்து வருவது. வெள்ளைக்காரர்களுடைய ஆட்சிக்காலத்தில் அரசியல் எதிர்ப்பை அடக்கியும், விடுதலை வீரர்களை வாட்டியும், அப்படியே பழக்கப்பட்ட காவல் துறையினருடைய மிச்ச சொச்சம் தொடர்கிறது. ஆகவே அந்த 'லெகசி' என்று சொல்வார்களே, அதைப் போல, அந்த உணர்வு என்பது முதலாவது நோய் ஆகும்.

இரண்டாவது நோய், தான் சேர்ந்திருக்கின்ற சமுதாயத்தைப் பொறுத்தது. சமுதாயத்திலே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், சாதி சமயங்கள், பணக்காரர்கள், ஏழைகள் என்ற பாகுபாடு காரணமாக வேறுபடுத்தப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும், ஒதுக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும், அதைப் பார்த்து பார்த்து பழக்கப்பட்டவர்கள்தான் காவல் துறைக்கு வருகிறார்கள். ஆகையினால் அவர்களது கண்ணோட்டத்திலே ஏழைகளோ அல்லது பாதிக்கப்படுகின்றவர்களோ துன்புறுகிறபோது அதை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. ஏனென்றால் தினந்தோறும் அவர்கள் சந்தித்தவையாகவே அவைகள் அவர்களுக்குத் தெரிவதனால், எத்தகைய மனித நேயத்தோடு அவர்களை அணுக வேண்டுமோ அந்த மனித நேயத்தோடு இருப்பதில்லை. இது காவல் துறையைப் பற்றியுள்ள இரண்டாவது நோய்.

மூன்றாவது நோய், பலரும் இங்கே எடுத்துக் காட்டியது போல, காவல் துறையை அரசியலுக்குப் பயன்படுத்துவது. நான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியாக இருக்கின்றபோது அவர்கள் பயன்படுத்தினார்கள். எதிர்க்கட்சியாக இருக்கிறபோது பயன்படுத்தினார்கள் என்ற விவாதத்தை விட, அவர்களை அரசியல் மயமாக்குவதில், அரசியல்வாதிகள் அனைவருமே தவறு இழைக்கின்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். காவல் துறையினர் தாங்கள் மேற்கொண்டிருக்கின்ற பணியில் அரசியல் சட்டத்திற்கும் இதர சட்டத்திற்கும் விசுவாசமாக இருக்கவேண்டுமே தவிர, அரசியல்வாதிகளுக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்ற போக்கு வளருமானால் அதைவிட சீரழிவு காவல்துறைக்கு வேறு எதுவும் இருக்காது. காவல் துறையிலே ஒரு சிலர், சமுதாயத்திலே இருந்து வருகின்ற காரணத்தினாலே, தவறு செய்கின்றவர்கள் கூட காவல்துறைக்கு வந்து சேர்ந்துவிடலாம். அதே போல அரசியலிலே நல்லவர்களும்

இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். அரசிய
லிலே இருக்கின்ற கெட்டவர்களும் காவல்துறையிலே இருக்
கின்ற கெட்டவர்களும் ஒன்று சேர்கிறபோதுதான் ஆட்சியை
அவர்கள் சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆகை
யால், எந்த அளவுக்கு காவல்துறை சட்டத்திற்கு ஒப்ப 'ரூல்
ஆப் லா' என்று சொல்வோமே, 'ஈவன் அண்டர் ட்ரையிங்
சர்கம்ஸ்டான்சஸ்', அதாவது மோசமான, கடுமையான 'சூழ்நிலை
யிலேகூட, சட்டப்படி நடத்துவதற்கான சுதந்திரத்தை அரசியல்
வாதிகள் தரவேண்டும். ஆனால் நடைமுறையில் அது தரப்
படுவதில்லை. இது காவல்துறையைப் பற்றியுள்ள மூன்றாவது
நோய்.

நான்காவது நோய். காவல் துறையிலே இன்னும் ஒரு சிலரிடத்
திலே ஒரு கருத்து இருக்கிறது. அதாவது மிகப் பெரிய மோச
மான குற்றவாளிகள் அல்லது சரியான சாட்சி கிடைக்காத குற்ற
வாளி என்றால், சித்திரவதை செய்தால்தான் ஒப்புக்கொள்
வார்கள். அது தேவை; அது நியாயம்; என்று கருதுகிறார்கள்.
அது தவறான போக்காகும். ஒரு வளர்ந்து வருகிற நாகரீச
சமுதாயத்தில், அத்தகைய நம்பிக்கையை காவல்துறை நிச்சய
மாக பெற்று இருக்கக்கூடாது. ஆக இந்த 4 வகையான நோய்
களையும் நீக்கி காவல் துறை என்றால், அதிலே பாதிக்கப்பட்ட
வர்களிடம் அன்போடு அணுகவும், காவல்துறை அவர்களுக்கு
உற்ற துணையாக இருக்கவும் பாடுபடவேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையை, நவீனப்படுத்தவேண்டும் என்று தமிழ்நாடு
அரசின் சார்பில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.
காவல் துறையை நவீனப்படுத்துகிறபோது, அவர்கள் நவீன
கண்ணோட்டத்தைப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. சிலந்திக் கூடு இருக்
கிறதே, அந்த சிலந்திக்கூடு பெரிய மிருகங்கள் செல்கிறபோது
பிய்ந்து விழுந்துவிடுகிறது. சிறு பூச்சிகள் அதிலே சிக்கிக்கொள்
கின்றன. அதே போல சட்டம் என்பது பணக்காரர்கள் அல்லது
பதவியிலே இருக்கின்றவர்கள் விஷயத்தில் அது வளைந்து
கொடுக்கிறது.

முற்பகல் 11-20

ஆனால் ஏழைகளை அந்தச் சட்டம், சிக்கவைத்து
விடுகிறது என்று சொல்வார்கள். காவல் துறையினுடைய
கண்ணோட்டத்தில் ஏழையெளிய மக்கள்பால் அவர்கள்
இரக்கத்துடனும், அருள் உள்ளத்தோடும் நடந்துகொள்ள
வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒரு சீமான்
வீட்டில் ஒரு 'டிரான்சிஸ்டர்' காணாமல் போய் விட்டால்கூட.
உடனே அந்த வீட்டு வேலைக்காரனைப் பிடித்து அடிக்கிறார்கள்.



ஆனால் அதே சீமான் அந்த வேலைககாரனை ஆத்தி
ரத்திலே அடித்து நொறுக்கினால்கூட அதைப்பற்றி
யாரும் கவலைப்படுவதில்லை, ஆகவே, ஏழையெளிய மக்கள்பால்
காவல்துறை அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.
அவர்கள் தருகின்ற புகார்களை பதிவு செய்வது கூட இல்லை
சில இடங்களில். சில இடங்களில் வேண்டுமென்றே பொய்
வழக்கு போட்டுவிடுகிறார்கள், இன்னும் சில இடங்களில் பணக்
காரர்கள் மற்றும் ஆதிக்க வர்க்கத்தினர்களின் தூண்டுதலின்
காரணமாக அவர்கள் பல பொய் வழக்குகளிலே கூட சேர்க்கப்
படுகிறார்கள். ஆகவே, தமிழ்நாடு காவல்துறை சிறப்பாக
இயங்க வேண்டுமானால் அவர்கள் உழைக்கிற, சாதாரண,
குடிசைவாழ் ஏழையெளிய மக்கள் ஒரு புகார் கொண்டு வருகிற
போது இவர்களைப் பார்த்து அஞ்சத் தக்க விதத்திலே காவல்
நிலையங்களோ, காவல் துறையோ செயல்படக்கூடாது.

இன்னும் சில இடங்களில் ஏழைகளின் வீடுகள் என்றால்
சாதாரணமாக நுழைந்துகொண்டு, அங்கே இருக்கின்ற
சாமான்களை உடைத்துப் போடுவது, அவர்களை அடிப்பது,
வாயில் வந்தபடி ஏசுவது இவைகள் எல்லாம் கூட நடைபெறு
கிறது. அண்மையில்கூட பாட்டாளி மக்கள் கட்சியின் நிறு
வனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் சேத்தியாதோப்பு காவல்
நிலையத்திலே போய் அங்கே ஏழைகள் பட்ட கஷ்டங்களாலே
உட்கார வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காரணம் என்ன
வென்றால் மக்கள் வளர்த்த ஆடுகளை எல்லாம் கொண்டுபோய்
ஆங்காங்கே சந்தையிலே விற்றுவிட்டார்கள் என்றெல்லாம்
அப்போது சொன்னார்கள்.

இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால் அணுகுமுறை,
வசதிபடைத்தவர்கள் என்கிறபோது அவர்கள் கொஞ்சம்
செல்வாக்கோடுதான் இருப்பார்கள். அவர்கள் அதிகாரிகளை
மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக கூட
இருப்பார்கள். ஆனால் வறியவர்களுக்கு துணை செய்கின்ற
அமைப்பாக இது எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும். நான்
இப்படிச் சொல்வதனால் காவல்துறை முழுவதும் அப்படியே
இருக்கிறது என்று அர்த்தம் அல்ல, ஓரிரு இடங்களில் அப்படி
இருக்கிறது. ஆகையினாலே, அவர்களும் அந்தக் குறைகளைப்
போக்குவார்களேயானால், எப்படி உலகத்தில் உள்ள பல
நாடுகளில் காவல்துறையை நம்பிக்கையோடு, பாசத்தோடு
மக்கள் அணுகுகிறார்களோ அதுபோல அணுகுவதற்குரிய
வாய்ப்பினை அது உருவாக்கும்,

என்னென்ன குற்றங்கள் மற்றவைகள் எல்லாம் நடை
பெற்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். அதிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது
என்னவென்றால், குறை, குற்றம் என்று சொன்னால், அதை
பதியச் செய்ய வேண்டும், பதியச் செய்ததை நன்றாக ஆராய்ந்து,

'இன்வெஸ்டிகேட்' செய்து அதன்மீது வழக்கு தொடர வேண்டும். குற்றம் புரிந்தவர் எவ்வளவு பெரிய சக்திவாய்ந்தவராக இருந்தாலும் அவருக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும். அதற்கான சூழ்நிலையை காவல்துறை நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், பணக்காரர்களுக்கும். பதவி வகிப்பவர்களுக்கும்—அவர்கள் தவறு செய்து அல்லது குற்றங்கள் செய்து அது ஏழையெளியவர்களுக்குத் தெரிகிறது—ஆனால் எந்தத் தண்டனையும் அவர்களுக்கு இல்லையென்று நினைக்கின்றபோது அந்த மக்களுக்கு ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்படுவது இயற்கை. ஆகவே என்ன நிலையை மேற்கொள்கிறார்கள் என்றால் இந்த அமைப்பையே மாற்றவேண்டும். ''The very System must be changed', என்று எண்ணுகிறார்கள். ஆகையினால் இந்த அமைப்பையே அவர்கள் மாற்ற வேண்டுமென்று முயற்சிக்கின்றபோது அதனால் ஏற்படுகின்ற சச்சரவுகள், அதனால் ஏற்படுகின்ற சண்டைகள் கணக்கில் அடங்கா. முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென்று எடுத்துச்சொல்வார்களே, அதைப் போல எவ்வளவு பெரிய இடத்திலேயிருந்தாலும், எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் தவறு செய்தால், குற்றம் செய்தால், அநீதி இழைத்தால் உடனுக்குடன் தண்டிக்ககூடிய சக்தியை காவல்துறை பெற வேண்டும். அதற்கு ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களானாலும் சரி, அல்லது காவல்துறையிலே மேலே இருக்கின்ற அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் எந்த ஆணை பிறப்பித்தாலும் அந்த ஆணைகள் சட்டப்படியாக, முறையாக இருக்கின்ற வகையிலே பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காவல்துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், காவல் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளை வேறு இடங்களுக்குப் போடுவது சரியல்ல என்று நான் கருதுகிறேன், போக்குவரத்துக் கழகங்கள், இன்னும் மற்ற மற்ற இடங்களிலே எல்லாம் அவர்களைப் போடுவதை விட அனுபவம் பெற்றவர்கள், அறிவாற்றல் வாய்ந்தவர்கள், இப்படிப்பட்டவர்களை எல்லாம் காவல் துறையிலேயே வைத்து பயன்படுத்துவது நல்லது. மற்ற இடங்களிலே போடுகிறபோது என்ன உணர்வு ஏற்படுகிறதென்றால் ஒருவேளை நம்மை வேண்டாமென்ற காரணத்தாலேதான் இந்த இடங்களிலே போடுகிறார்களோ என்ற உணர்வு வருகிறபோது, அது நிர்வாகத்தில் டீமாரலைசிங் எபக்ட் என்று சொல்லுவார்களே, அந்த முறையில் அந்த நிர்வாகத்தை சீர்கேடு அடையச் செய்யக்கூடிய நிலையை உருவாக்கும். அதைப்போல காவல் துறைக்கு எடுக்க வேண்டியவர்களைக்கூட அரசுகள்தான் நேரடியாக எடுக்கின்றன. ஆனால் கடந்த கால அனுபவங்களைப் பார்க்கின்றபோது, புரட்சித் தலைவர் அரசாலே எடுக்கப்பட்டார்கள் என்றால், அதை உடனே அடுத்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு மாறாகக் கருதுகிறது. அந்த அரசு



எடுக்கிறதென்றால் அடுத்து வருகிற இன்னொரு அரசு அதை
மாறாகக் கருதுகிறது. ஆகவே அரசுகள் நேராக வேலைக்கு
எடுக்கிறபோது, அதனுடைய விளைவாக அந்த அலுவலர்கள்
மீது ஒரு களங்கம் முன்னாலேயே உண்டாகிறது. அந்த அலு
வலர்களேகூட நினைக்கலாம். ''நம்முடைய தகுதியால் கிடைத்
தது என்பதைவிட இந்த ஆட்சிக் கட்சியால்தான் கிடைத்தது''
என்று. அதுவும் நிர்வாகத்திற்கு நல்லதல்ல. ஆகையினால்
இந்த அரசு காவல் துறையைப் பொறுத்தவரையில் அதிலே
உள்ள அலுவலாளர்களை எல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்
மூலமாக ஏன் எடுக்கக் கூடாது? அதன் மூலம் எந்த அரசு
எடுத்தாலும், அவர்களுக்கு உறுதியான உத்தரவாதம் இருக்
கும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குதான் தங்க
ளுடைய தகுதியாலும், திறமையாலும் வந்தோமென்ற
உணர்வு ஏற்படும். ஆகவே அதை இந்த அரசு பரிசீலிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

அடுத்து சட்டத்தை நிறைவேற்றும் கடமை மட்டுமல்ல,
இன்று உலகம் முழுவதும் பேசப்படுவது மனித உரிமைகள் பற்றி.
ஒரு மனிதனை மனிதனாக நினைத்து மதிக்க வேண்டும். காவல்
துறை அந்த மனிதப் பற்றோடு நடந்துகொள்ள வேண்டுமென்பது
இன்று உலகம் முழுவதும் பேசப்படக்கூடிய ஒன்று. நேற்றைய
தினம்கூட இந்திய நாட்டினுடைய உள்துறை அமைச்சர
வர்கள் அதற்காக தனியாக ஒரு குழுவை உருவாக்க வேண்டு
மென்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால்,
தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொன்று
தொட்டு மனித உணர்வோடு இருந்தவர்கள் என்பதற்கு ஏராள
மான எடுத்துக்காட்டுகள் உண்டு. தமிழகத்தைப் பொறுத்த
வரையில், அவர்கள் எங்கே பிறந்தார்கள், என்ன மொழி
பேசுகிறார்கள் என்று எப்போதுமே பார்ப்பது இல்லை. நம்
முடைய காலத்திலேயே நாம் பார்த்திருக்கிறோம். கன்ன
டத்தைத் தாய்மொழியாகக் கொண்ட தந்தை பெரியார்
அவர்களைப் போற்றிய மக்கள் தமிழ் மக்கள். அதோடு
மட்டுமல்லாமல், கேரளத்திலே பிறந்தாலும், தமிழரோடு
தமிழராக . தலைசிறந்து விளங்கிய புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களை முதல்வர் ஆக்கிய மனித உணர்வு
பெற்றவர்கள் தமிழ் மக்கள். ஆகவே மனித நேயம் அல்லது
மனித உணர்வு என்று பார்க்கிறபோது, யார் எங்கே பிறந்
தார்கள், என்ன மொழி பேசுகிறார்கள் என்று பார்ப்பதைவிட,
இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், இன உணர்வைவிட,
அற உணர்வைப் பெரியதாகப் போற்றியவர்கள் தமிழ் மக்கள்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஒன்றை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். அத்தகைய அற உணர்வுக்கு சோதனை
மேல் சோதனை வந்து கொண்டிருக்கிறது. ஒரு புறத்திலே

கர்நாடகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மொழி வெறி அந்த மக்களைத் தாக்குகிறது. இன்னொரு புறத்திலே இலங்கையிலே இருக்கிற சிங்கள இன வெறி அந்த மக்களை சோதனைக்கு உள்ளாக்குகிறது. நான் இதைப் பேசுகின்றபோது பேரன்புக் குரிய காங்கிரஸ் கட்சியின் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப் பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்றால் அவர் களுக்கு என்மீது ஒரு சந்தேகம். நான் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி அவர் களோடு நெருங்கிப்பழகியவர்களில் நானும் ஒருவன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மறைந்த முன்னாள் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களோடு நெருங்கிப் பழகியவர் என்பதால்தான் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் கொலைக்குக் காரணமாக இருந்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தை இன்றும் ஆதரிக்கிறேன் என்று சொல்லுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–30

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களோடு நெருங்கிப் பழகியவன் என்பதற்கு சாட்சி நான் கேட்கவில்லை. ஆனால் அவர் மறைந்த பின் இரண்டு நாட்கள் நான் எப்படியிருந்தேன் என்பது எனக்குத் தான் தெரியும். அந்த உள்ளுணர்வுக்கு நான் கேட்க .... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் தனியாக இருக்கும்போது எப்படி வருத்தப்பட்டார் என்பதைப் பற்றி இந்த அவை உறுப்பினர்களுக்கோ பொதுமக்களுக்கோ கவலையில்லை. அவர் பொதுவாக பொதுமக்கள் மத்தியில், வெளியில் என்ன பேசுகிறார் ? இதைப்பற்றித்தான் நாங்கள் கேட்கிறோம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் சொல்கிறேன். மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கொலை வழக்கில் யார் யார்



சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் மீது என்னென்ன நட வடிக்கை எடுக்கவேண்டுமோ அதை இந்திய அரசு எடுக்கட்டும். அதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது..........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சில முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார் என்று கருது கிறேன். அவர் இப்போது சொல்கிறார். மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் கொலையில் யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்கள் மீது இந்திய அர சாங்கம் நடவடிக்கை எடுக்கட்டும், அதை நாங்கள் தடுக்கப் போவதில்லை, எதிர்க்கப்போவதில்லை என்று கூறுகிறார். ஆனால் இவரே பல பொதுக்கூட்ட மேடைகளில் ''நான் இன்றும் எல்.டி.டி.ஈ.யை ஆதரிக்கிறேன் ; தொடர்ந்து ஆதரிப் பேன் '' என்று பேசி வருகிறார், அதுமட்டுமல்ல, இவர் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள், வெளிப்படையாகவே, பேசு கின்ற கூட்டங்களில் எல்லாம் ''நான் எல்.டி.டி.ஈ.-யை ஆதரித்தே தீருவேன். இனியும் தொடர்ந்து ஆதரிப்பேன் '' என்று பேசி வருகிறார். அப்படியானால், இவர் சொல்வதற்கும், இங்கே இப்போது இந்த அவையில் சொல்கிற கருத்துக்கும் வெளியே பொதுக்கூட்ட மேடைகளில்,பேசுவதற்கும் முரண்பாடு இல்லையா? அது மட்டுமின்றி, இவர் சார்ந்துள்ள கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள், எல்.டி.டி ஈ. இயக் கத்தின் தலைவர் பிரபாகரனையே பெயர் சொல்லிக் குறிப் பிட்டு, பிரபாகரனை ஆதரிப்பதில் என்ன தவறு, நான் விடுதலைப் புலிகளை ஆதரித்தே தீருவேன், என்னை வேண்டு மானால் கைது செய்யட்டும். எந்தச் சட்டம் வேண்டுமானாலும் என்மீது பாயட்டும், ' தடா ' சட்டம் கூட என் மீது பாயட்டும், ஆனால் நான் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பேன் என்று பேசி வருகிறார்.

அண்மையில்தான் மத்திய அரசாங்கத்தின் மத்திய புல னாய்வுத்துறை அமைப்பு (S.I.T.) ராஜீவ் காந்தி அவர்களின் 'கொலையில் பிரபாகரனையும், பொட்டு அம்மனையும் (Proclaimed -Offenders) குற்றவாளிகள் என்று அறிவித் திருக்கிறார்கள். அறிவித்த பின்னரும் இவருடைய கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் மாண்புமிகு உறுப்பினரும் எல்.டி.டி.ஈ.யை ஆதரிப்போம் என்று பேசி வருகிறார்களே ? எனவே டாக்டர் ராமதாஸ் சொன்னதற்கும் இவருக்கும் உடன்பாடு இல்லையா ? டாக்டர் ராமதாஸ் அவர்கள் நான் பிரபாகரனை ஆதரித்தே தீருவேன். எல்.டி.டி.ஈ. யை ஆதரித்தே தீருவேன் என்று பேசி வருகிறார்கள். ஆனால்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 18

அவருடைய கட்சியின் சட்டமன்ற
அவையில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினராக இந்த
இராமச்சந்திரன் அவர்களோ ராஜீவ் உறுப்பினர் பண்ருட்டி
கொலை சம்பந்தப்பட்ட யார் மீதும் காந்தி அவர்களின்
எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் மத்திய அரசாங்கம்
நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் எடுக்கட்டும், அதற்கு
அப்படியானால் மாண்புமிகு சட்டமன்ற என்று கூறுகிறாரே,
என்ன ? ராஜீவ்காந்தி அவர்கள் கொலை உறுப்பினரின் நிலை
நிலை என்ன ? எல். டி.டி.ஈ.யை இவர்கள் வழக்கில் இவருடைய
இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த ஆதரிக்கிறார்களா,
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). வேண்டுமென்று கோரு

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர்
கேள்விகளுக்கு என்னுடைய நன்றியைத் அவர்கள் கேட்ட
கிறேன். ஏனென்றால், அதன்மூலம் நான் தெரிவித்துக்கொள்
தரமுடியும். முன்னாள் பிரதமர் சில விளக்கத்தைத்
கொலைக்கு ஆளான குற்றம் ராஜீவ் காந்தி அவர்கள்
குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது ஒன்று. அந்தக்
அவர்கள் மீது நடவடிக்கை எந்த உலகத்தில் இருந்தாலும்
தண்டனை பெற்றுத் எடுத்து நீதிமன்றத்திலே நிறுத்தி
நாங்கள், பாட்டாளி தரவேண்டும் என்பது ஒன்று. அதிலே
அல்லது அந்தக் மக்கள் கட்சித் தலைவரானாலும்,
நானாலும் எந்தவித கட்சியைச் சார்ந்த உறுப்பினராகிய
நான் சொல்ல கருத்துவேறுபாடும் இல்லை. ஆனால்
தீர்க்க வேண்டியது விரும்புவது, நீதிமன்றத்திலே விசாரித்து
சில பிரச்சினைகள் அது. ஆனால் தமிழ்நாட்டுக்கு என்று
பேசும்போது குறிப்பிட்டேன். இருக்கின்றன. அதைத்தான் நான்
நடந்துகொள்கிறோம். நாம் மனிதாபிமானத்தோடு
என்றாலோ, தமிழ்நாட்டு ஆனால் இன்றைக்கு தமிழ் இனம்
சும்மா இருக்க முடியுமா ? மக்கள் என்றாலோ தமிழ்நாடு

முற்பகல் 11-35

இன்று காலைச் செய்தியில், இலங்கை அரசு முப்படையைக்
கொண்டு நவீன டாங்குகளைக் கொண்டு, விமானத்தைக்
கொண்டு, ஊரடங்கு உத்தரவு போட்டு இரவு முழுவதும்
அங்கே கொன்று குவிக்கிறார்கள், 100 பேர் இறந்துவிட்டார்கள்.
நாம் பேசாமல் இருக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
பிரச்சினையை திசை திருப்ப முயலுகிறார், இலங்கைத்
தமிழர் பிரச்சினைப் பற்றி இங்கே பேசப்படவில்லை,
இங்கே கேட்கப்பட்ட கேள்வியே, முன்னாள் பிரதமர் ராஜீவ்
காந்தி கொலை வழக்கில் எல்.டி.டி.ஈ. தலைவர் பிரபாகரனும்,



1992 மார்ச் 18] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அவருடைய புலனாய்வுத் துறைத் தலைவர் பொட்டு அம்மனும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் (Proclaimed offenders) குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள், எனவே இப்போது மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரனும், அவர் சார்ந்துள்ள கட்சியின் தலைவரும் தொடர்ந்து விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்களா இல்லையா ? பிரபாகரனை ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 3 அம்சங்கள், ஒன்று........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஒரு அம்சத்திற்கு பதில் சொன்னாலே போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சருடைய கேள்வி—இந்த எல்.டி.டி.ஈ.யைப் பற்றியது மட்டும்தான், அங்கே இருக்கிற தமிழ் மக்களுக்கு கொடுக்கிற பாதுகாப்பைப் பொறுத்த மட்டில் அவர்கள் எந்தக் கேள்வியையும் உங்களைக் கேட்கவில்லை. அங்கேயிருக்கிற தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் அவர்கள் மற்ற எல்லாத் தலைவர்களையும் விட, உங்களைவிட மிக வேகமாகவும், ஆர்வமாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கேட்பது—எல்.டி.டி.ஈ. மற்றும் அதன் தலைவர் பிரபாகரன் பற்றியது. அந்தக் குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருக்க வேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் மட்டுமல்லாமல் இந்த அவையில் வீற்றிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், இலங்கையில் உள்ள தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே இரண்டாவது கருத்து இல்லை, அதை எல்லோருமே ஆதரிக்கிறோம், அதற்காக நாங்கள் பாடுபடத் தயாராகவும் இருக்கிறோம், கேள்வியே முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுடைய கொலை வழக்கில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட பிரபாகரனை, அவர் சார்ந்துள்ள இயக்கத்தைச் சார்ந்த அவர்களுடைய கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, ஆதரிக்கிறதா ? இல்லையா ?

திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே. எனக்குப் பேசுவதற்கு கொஞ்சம் நீங்கள் அனுமதியைக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்கப்பட்டக் கேள்வியை விட்டுவிட்டு இன்னுமொரு கேள்விக்குப் போகிறீர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களது கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பது என்பது ஒன்று. ஆனால்..(குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். இரண்டாவது, விடுதலைப் புலிகள் இயக்கம். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். இப்போது நான் தவறு செய்கிறேன், என் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக பாட்டாளி மக்கள் கட்சியே கூடாது என்று சொல்ல முடியுமா? அது இயக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த இயக்கத்தின் சார்பிலேதான் அதன் தலைவர் இதிலே ஈடுபட்டார் என்பதுதான் வழக்கின் விவகாரமே. மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் இலண்டன் பி.பி.சி. நிறுவனத்திற்கு, இலண்டன் பத்திரிகைகளுக்கு, விடுதலைப் புலிகளுடைய தலைவர் பிரபாகரன் அவர்கள், 'எங்களுக்கும் இராஜீவ் காந்தியினுடைய படுகொலைக்கும் தொடர்பு உண்டு. Invclvement in the killirg cf Rajiv Gardhi என்று தெளிவாகவே உலகத்திற்கு அறிவித்திருக்கிறார். அது பத்திரிகைகளில் எல்லாம் வெளி வந்திருக்கிறது.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் 3 அம்சம் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) பேசவிடமாட்டேன் என்றால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுங்கள், பேசுங்கள். 3 அம்சத்திற்குப் பேச வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. ஆனால், முதல் அம்சத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று குற்றம் சாட்டப்பட்டவர்—அவர் பிரபாகரனோ அல்லது யாரோ—அதற்கு நீதி விசாரணை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரபாகரன் மீதே குற்றம் இருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டு தெளிவாகச் சொல்லுகிறேன். பிரபாகரன் அவர்களே ஒத்துக் கொண்டு "We are invclved in the killing of Rajiv Gandhi"



என்று சொல்லி பத்திரிகைகளில் வந்திருக்கிறது, விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் அவர்களுக்கும் தெரியும், அது பற்றி அவருடைய நிலை என்ன? தயவு செய்து விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவான ஒரே ஒரு கேள்வியை வைத்து இருக்கிறார்கள். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பிறகு அந்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்பதுதான். இதற்கு மூன்று அம்சமோ, ஒன்பது அம்சமோ தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஒரே ஒரு வார்த்தையிலே, 'எங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது; இந்தக் கொலைக்கும் எல்.டி.டி.ஈ.-க்கும் தொடர்பு இருக்கிறது'—இதைத்தான் இந்த அவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அவர்கள் பதில் அளிக்க வேண்டும், அதுமட்டுமல்ல, "புரொகிளைம்டு அஃபெண்டர்" என்று பிரபாகரனைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் நீதிமன்றம் ஒரு தாக்கீது தந்து, இவர்களைப் பிடிக்க முடியாமல், நம்முடைய அதிகாரிகளைக் கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு தாக்கீது கொடுத்து, பத்திரிகைகளிலே 'இவர்கள் தேவைப்படுகிறார்கள்' என்று சொன்ன பிறகும் கூட, எல்.டி.டி.ஈ. இயக்கத்தை பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிக்கிறது என்று சொன்னால், இந்த நாட்டிலே பெருந் தலைவராக விளங்கிக் கொண்டிருந்த ராஜீவ் காந்தி கொலையை இவர்கள் ஆதரிக்கிறார்களா என்பதை இந்த மன்றம் அறிய வேண்டும், இந்த நாட்டிலே இருந்து கொண்டு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பேசிய போது தலுக்குரிய மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களிடம் ஒரு தகவல் கேட்டேன் பிரபாகரன் அவர்களே, "Invclvement in the killirg of Rajiv Gardhi" என்று ஒப்புக் கொண்டு இருக்கிறாரே, அதுபற்றி 'அவரையா' இவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதனைத் தெரிந்துகொள்ள இந்தச் சபை விரும்புகிறது.

[1992 மார்ச் 18

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர், பேரன்புக்குரிய திரு. கே.
ஏ. கே. அவர்கள் சொன்ன தகவல், நான் பார்க்கவில்லை, அவர்
அதைப் பொறுப்பேற்றுக் கொண்டு இந்த மன்றத்தில் தரட்டும்.
நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நான் மிகத் தெளி
வாகச் சொல்கின்றேன். (குறுக்கீடு) நான் ஒரே கேள்வி கேட்
கிறேன். (குறுக்கீடு). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லையென்றால் இன்
றைக்கு இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அரசு என்ன பாது
காப்புக் கொடுக்கப் போகிறது? அதைச் சொல்லுங்கள், (குறுக்கீடு)
நிரூபிக்கப்பட்டால் நீங்கள், பிரபாகரனை தூக்கில் போடுங்கள்.
அது வேறு சமாச்சாரம், பிரபாகரன் மீது குற்றம் சொல்
லுங்கள், அது வேறு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் இயக்கத்தையும்
பிரபாகரனையும் பிரித்துப் பேச முடியாது. (மேசையைத் தட்டும்
ஒலி.) பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தலைவர்,
பிரபாகரன் இட்ட உத்தரவுகளின் பேரில்தான் எல்.டி.டி.ஈ.-
யினர் இந்தத் தமிழகத்தில் ஊடுருவல் செய்தார்கள்; இங்கே
சட்டம் ஒழுங்கைக் குலைத்தார்கள்; இங்கே பல சட்ட விரோத
நடவடிக்கைகளில், தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்
டார்கள்; இங்கே கள்ளக் கடத்தல் செய்தார்கள்; போதை
மருந்துகளை விற்றார்கள்; கடத்தல் செய்தார்கள்; ஆயுதக்
கிடங்குகளை இங்கே ஏற்படுத்தினார்கள்; இங்கே பல கொலை
களைச் செய்தார்கள், பத்மநாபா உட்பட மேலும் 15 பேர்களை
சுட்டுக் கொன்றார்கள்; இரண்டு காவல் துறையினரை சுட்டுக்
கொன்றார்கள்; சம்பந்தமே இல்லாத சில அப்பாவி பொது
மக்களையும் சுட்டுக் கொன்றார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி).
தமிழகத்தின் அமைதி வாழ்க்கையையே குலைத்தார்கள்; எல்லா
வற்றிற்கும் மேலாக மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ்
காந்தியையும் அவருடன் சேர்ந்து இன்னும் 16 பேர்களையும்
அவர்கள் இங்கே வெடிகுண்டு வைத்துக் கொன்று விட்டார்கள்.
இத்தனைக்குப் பிறகும் 'எல்.டி.டி.ஈ.-யை ஆதரிக்கிறோம்' என்
றால், இத்தனை சட்டவிரோத நடவடிக்கைகலை, தேச
விரோத நடவடிக்கைகளை இவருடைய கட்சி ஆதரிக்கிறது
என்று சொல்லுகிறாரா? இதை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ள
முடியுமா? அல்லது இந்திய அரசாங்கம்தான் இதை ஏற்றுக்
கொள்ள முடியுமா?

திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே.....



1992 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்
கள், திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே. நான் அடுத்தபடியாகப் பேச இருக்கின்ற காரணத்
தினாலேதான் நான் அவருடைய பேச்சிலே குறுக்கிடவே
இல்லை, ஆனால். இப்போது நேரிடையாக அவர் ஒரு கேள்வி
கேட்கிறார், 'அங்கே இருக்கிற தமிழர்களுக்கு யார் பாதுகாப்பு?'
என்று, அங்கே இருக்கிற தமிழர்களைப் பாதுகாப்பதற்காகத்
தான் இங்கிருந்து இந்திய அமைதி காக்கும் படையை நாம்
அனுப்பி வைத்தோம், அந்த இந்திய அமைதி காக்கும் படையை
திரும்பப் பெற வேண்டுமென்று திரும்பத் திரும்ப இங்கே குரல்
எழுப்பியவர்கள், இப்போது நண்பர் இராமச்சந்திரன் அவர்
களுக்குத் துணையாக நின்றவர்கள், அவர்கள்தான், 'அவர்கள்
படு, பாதகங்கள் செய்தவர்கள்' என்று சொல்லி திரும்பப்
பெற்றுக் கொண்டார்கள், அந்த இராணுவம் இன்றைய தினம்,
அங்கே இருந்து இருக்குமேயானால் தமிழர்கள் நிச்சயமாக படு
கொலை செய்யப்பட்டு இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. (குறுக்கீடு) இப்போது என்னைப் பேச விடுங்கள்,
இந்திய இராணுவம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் கோடிட்டுக்
காட்டிய குற்றங்களைச் செய்ததோடு மட்டுமல்லாமல்,
பிரபாகரனும், விடுதலைப்புலி இயக்கத்தினரும் தமிழ்நாட்
டையே இந்தியாவிலிருந்து பிரித்து ஒரு தனி நாடாக அறிவிக்க
வேண்டுமென்று கூறுகிறார்களே, இப்படி தேச விரோத
காரியங்களில், இந்திய நாட்டின் 'சாவரின்ட்டி'—இதையே
அவர்கள் தகர்க்கிற வகையில் செயல்படுகின்ற ஒரு இயக்கத்தை,
அவர் கட்சி ஆதரிக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிவிக்க
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர்.
பாலசுப்ரமணியன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு தகவல். இவர்,
இந்திய அமைதி காக்கும் படையைக் குறித்து ....(குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினை. உட்காருங்கள், உங்களுக்கு இதில் சம்பந்தம் இல்லை. திரு இளம்வழுதி உட்காரவும்; இதில் உங்களுக்குச் சம்பந்தம் இல்லை; உட்காருங்கள், உட்காருங்கள்; விவாதத்திற்குச் சம்பந்தம் இல்லை. (குறுக்கீடு). திரு. இளம்வழுதி, இதிலே உங்களுக்குச் சம்பந்தம் இடையாது. (குறுக்கீடு) உட்காருங்கள். உட்கார வேண்டும் என்று சொன்னதற்குப் பின்னால் எழுந்து நின்றால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) உட்காருங்கள். எதிர்க் கட்சித் தலைவர்.

முற்பகல் 11–45

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாரதகான சபாவில் பேசுகிறபோது இலங்கையில் இந்திய இராணுவம் இருந்தால் தான் தமிழர்களுக்கு பாதுகாப்பு. சிங்களவர்களால் கொல்லப் படுகிறவர்களைக் காட்டிலும் எல்.டி.டி.ஈ.யால்தான் தமிழர் கள் அதிகமாக கொலை செய்யப்படுகிறார்கள் என்று இதே இராமச்சந்திரன் அவர்கள் சோ அவர்களோடும், மற்றவர் களோடும் நின்று பேசியிருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாயிண்ட்டே அதுதான். அதாவது இந்திய இராணுவம் அங்கேயிருந்தபோது நமக்கு பாதுகாப்பு. (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். அவர் பேசட்டும். இந்திய இராணு வம் அங்கே இருந்தது, அது நமக்கு பாதுகாப்பு. ஆகவே, நாங்கள் எல்.டி.டி.ஈ. என்றோ, அந்த இயக்கம் என்றோ ஆதரிக்கவில்லை. அங்கேயுள்ள மக்களுக்கு பாதுகாப்புதான் நமக்கு முக்கியம். அங்கே இந்திய இராணுவம் இருக்கிறது. ஆகவே, அதைத் திரும்பப் பெறக்கூடாது என்று நாங்கள் வாதாடினோம். நானே வாதாடினேன். அமிலத்தோடு சேர்ந்த முட்டையை, ஆசிட் முட்டையை என்மீது வீசினார்கள் அது வேறு, அதேமாதிரி நான் இன்றைக்கும் சொல்கிறேன். இந்திய இராணுவத்தை இன்றைக்கு நாம் அனுப்ப முடியாது. அங்கே 15 ஆயிரம் பேர்கள் இன்னும் 30 நாட்களில் சாவார் கள் என்று அங்கேயுள்ள பத்திரிகை சொல்கிறது. அங்கேயுள்ள ஜாப்னா கலெக்டரே பிரசிடெண்ட்டை போய்ப் பார்த்து இருக்கிறார். நாம் பேசாமல் இருக்கப் போகிறோமா ? (குறுக்கீடுகள்) என்ன .செய்யப் போகிறீர்கள் ? (கூச்சல்-குழப்பம்).



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும் என்பதில் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு இரண்டாவது கருத்து இல்லை. இருந்தபோதிலும், அங்குள்ள, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற் காக இங்கே தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் செய்ய முடியுமா ? அப்படிச் செய்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தை ஆதரிக்க முடியுமா ? தமிழ்நாட்டையே இந்தியா விலிருந்து பிரித்துச் சென்று தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்கிறார்களே அவர்களுக்கு இங்கே நாம் ஆதரவு கொடுக்க முடியுமா ? அவர்கள் தேச விரோத, சட்ட விரோத நட வடிக்கைகளில் இங்கே ஈடுபடுவதற்கு அவர்களுக்கு சுதந்திரம் தரமுடியுமா என்பது தான் நம் கேள்வி (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேரடியாக இந்தக் கேள்விகளுக்கு பதில் சொன்னாலே போதும் (குறுக் கீடுகள்) உட்காருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் போய்க் கொண்டே இருக்கிறது. ஒரு முடிவு மட்டும் தெளிவாகத் தெரிகிறது. பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்த வரையிலும் எல்.டி.டி.ஈ.யை ஆதரிக்கிறார்கள். அவ்வளவுதான் (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்ற இயக்கத்தின் தலைவர் பிரபாகரனையும், அவர்களுடைய கொலைக்குக் காரணமாக இருந்த இயக்கத்தினரையும், பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் நிறுவனத் தலைவரும், அதன் சட்டமன்ற உறுப்பினரும் ஆதரிக்கிறார்கள் என்பதுதான் இங்கே நிரூபணம் ஆகிறது (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளோ அல்லது எந்த இயக்கமோ அதன்மீது நீங்கள் சட்டப்படி எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுங்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேறு ஒரு ஏற்பாடு.... (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர்கள் கேட்கிற கேள்வி, அதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்பது தான். 'அதை நான் ஆதரிக்கிறேன்' என்பதோடு விட்டு விடுங்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : தலைவர் அவர்களே, சட்டரீதியாக நடவடிக்கைகளை நாங்கள் எடுப் பதோ, மத்திய அரசாங்கம் எடுப்பதோ ஒருபுறம் இருக்கட்டும். அந்தப் பிரச்சினையில் இவர்களுடைய நிலை என்ன? இவர் கட்சியின் நிலை என்ன? இவர் கட்சியின் நிறுவனத் தலைவரின் நிலை என்ன என்பதைத் தான் இங்கே கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விவாதத்தை வேறு எங்கோ இழுத்துக் கொண்டு போகக் கூடாது. (குறுக்கீடு) இப்போது அரை மணி நேரமாக நீங்கள் விடுதலைப்புலி இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் ஆதரிக்கி றீர்களா என்ற அந்த அடிப்படையில் தான் குற்றச்சாட்டே வருகிறது. அதற்கு உண்டு அல்லது இல்லையென்று சொல்லி விட்டால் பிரச்சினை இல்லை. அதை விட்டுவிட்டு வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிற காரணத்தால்தான் விவாதமும் போய்க் கொண்டிருக்கின்றது.

<u>திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே...... (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்,

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். பிரபாகரனுடைய திட்டம் இல்லாமல் இந்தக் கொலை நடந்திருக்க முடியாது. எனவே யாரோ சில பேர், பாட்டாளி மக்கள் கட்சி இருக்கிறது என்று சொன்னால், உங்களுக்குத் தெரியாமல் சில பேர் ஈடு பட்டால், அதிலே பாட்டாளி மக்கள் கட்சியை இணைக்க முடியாது. ஆனால் தலைவரே திட்டம் போட்டு, ஒரு காரியத்தைச் செய்தால், அந்த இயக்கமே ஈடுபட்டதாக அர்த்தம். எனவே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அதுவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், அது மிகக் கட்டுப்பாடானது என்று உலகத்திற்கே தெரியும், அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, அப்படி ஒரு கட்டுப்பாடான இயக்கத்தில் திட்டம் தீட்டி, அவர்கள் முழுமையாக, இதற்காக பல மாத



காலமாக இதை எதிர்பார்த்து, திட்டம் போட்டு, மேலே யிருந்து, கீழே வரை, அனைவரும் இதிலே ஈடுபட்டுத்தான் இதைச் செய்து இருக்கிறார்கள். எனவே அந்த இயக்கமே ஈடுபட்டு இருக்கிறதே ஒழிய சில பேர் ஈடுபட்டார்கள், எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் : இயக்கத்தை விட்டுவிடலாம் என்பது அல்ல. அந்த இயக்கமே முழுமையாக ஈடுபட்டு இருக்கிறது. எனவே அந்த இயக்கத்தின் மீது முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11-50

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரையோ, அல்லது சிலரையோ, எஸ்.ஐ.டி., புரக்ளெயிம்ட் அஃபெண்டர் என்று அறிவித்திருந்தால், சரி, தலைவருக்கும் இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை, அவர்களாகவே ஏதோ செய்து விட்டார் கள், என்று கூட எண்ணுவதற்கு வாய்ப்பு உண்டு, ஆனால் அந்த இயக்கத்தின் தலைவரையே, புரக்ளெயிம்ட் அஃபெண்டர் குற்றவாளி என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அந்த இயக்கத்திற்கும், இந்தக் குற்றத் திற்கும் சம்பந்தம் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த இயக்கத்தின் தலைவர் இட்ட கட்டளைகளின் பேரில் தான் இத்தனை குற்றங்களும் நடந்திருக்கின்றன. (மேசை யைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பேச இருக்கிறார். (குறுக்கீடு). அதைத்தான் நானே கேட்டுக் கொண்டு இருக்கிறேனே. உட்காருங்கள். (குறுக்கீடுகள்). திரு. ச. இராமச்சந்திரன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு நிமிடங்களைத் தொடர்ந்தாற்போல கொடுத்தால் நல்லது. இரண்டு நிமிடங்கள் . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நான் உங்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறேன். 42 நிமிடங்கள் அளித்து இருக்கிறேன். 2 நிமிடங்கள் அல்ல.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்கள் என்ன, நீங்கள்
எத்தனையோ நிமிடங்களைக் கொடுத்து விட்டீர்கள்.
(குறுக்கீடு). 42 நிமிடங்களை இதுவரை கொடுத்து இருக்கி
றீர்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,
திரும்பத் திரும்ப, 2 அம்சங்கள், 3 அம்சங்கள், 4 அம்சங்கள்
என்று பிரச்சினையைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிறாரே
தவிர, முதல் அம்சத்திற்கு, மையக் கருத்திற்கு வரமாட்டேன்
என்கிறார். எனவே, நாம் இப்படி எடுத்துக் கொள்வோம்.
அதற்கு மாண்புமிகு உறுப்பினரும் ஒப்புக் கொள்வார் என்றால்,
இப்படியே வைத்துக் கொள்வோம். அதாவது, மாண்புமிகு
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை
செய்தது சரிதான் என்று பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்
கிறது, அதனை ஆதரிக்கிறது. அந்தக் குற்றத்தில் சம்பந்தப்
பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை பாட்டாளி மக்கள்
கட்சி ஆதரிக்கிறது. அந்தக் கொலைக்குக் காரணமாக
இருந்த பிரபாகரனையும், அந்த இயக்கத்தைச் சார்ந்த
மற்றவர்களையும் பாட்டாளி மக்கள் கட்சி பாதுகாக்கிறது
என்பது இதிலிருந்து புலப்படுகிறது. இவற்றை எல்லாம்
இந்த மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக் கொண்டதாகத்தான் இந்த
அவை கருத வேண்டும். எனவே அவர் ஒப்புக்
கொண்டு விட்டார் என்பதால், இதனை இப்படியே விட்டு
விட்டு, நீங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்
களைப் பேச அழைக்கலாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்
கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்
சொன்னதைப் போல, உங்களுக்குத் திரும்பத் திரும்ப
நானும் சொன்னேன். உறுப்பினர்களும் சொன்னார்கள்.
மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் கேட்டுக் கொண்டார்
கள். எல்லா உறுப்பினர்களும் கேட்டது அதுவேதான்.
அந்த மையக் கருத்திற்கு உங்களுடைய கருத்தை (குறுக்கீடு,)
சொல்லி வருவதுகூட, அது சரிதான் என்பதைப் போலத்தான்
வந்தீர்கள். அங்கே இருக்கிற தமிழர்களைப் பாதுகாக்க
வேண்டும், எனவே, நாங்கள் எல்.டி.டி.ஈ.யை ஆதரிக்கிறோம்
என்பதைப் போலத்தான், ஆதரிக்கிறோம் என்பதுதான்
உங்களுடைய கருத்து. (குறுக்கீடு). நான் இதற்கு மேலே
வேறு என்ன செய்வது. நான் என்ன செய்வது. உங்களுக்கு
வாய்ப்பு கொடுத்துப் பார்த்தேன். வாய்ப்பு கொடுத்ததை
நீங்கள் வேறு விதமாகப் பயன்படுத்திக் கொண்டே போகிற
போது, அது உண்மை என்றுதானே வருகிறது. வேறு
வழியில்லை. எனவே, நீங்கள் பேசி முடித்ததாகக் கருதப்
படுகிறது. அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள், (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் பேசட்டும். அவரைப் பேச விடுங்கள். (குறுக்
கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவரைப் பேச விடுங்கள்,



நான் உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்
படுத்திக் கொள்ளவில்லை. 42 நிமிடங்கள் எடுத்து இருக்கி
றீர்கள். 42 நிமிடங்களை எடுத்துக் கடைசியில் உங்களுடைய
கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு). இப்
போது நீங்கள் சொன்ன கருத்து என்பது 'நாங்கள் எல்.டி.டி.ஈ.
யையும், பிரபாகரனையும் ஆதரிக்கிறோம்' என்றுதான்
முடிந்திருக்கிறது. இதற்கும் மேலே நேரத்தை நீட்டிக்
கொண்டு போவதற்கு நான் விரும்பவில்லை. எனவே
உங்களுடைய கருத்தை முடித்து விட்டீர்கள்.

முற்பகல் 11.55

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் தன்னுடைய நிலையை
தெளிவாக விளக்கி விட்டார் என்பதையும் இந்த அவை ஏற்றுக்
கொள்ளலாம், நாமும் தெளிவாகப் புரிந்துகொண்டு விட்டோம்
என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள், (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும்.
நான் அவரை அழைத்ததற்குப் பிறகு நீங்கள் பேசிக் கொண்
டிருப்பது சரியல்ல. எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும்.
அவர் பேசியதற்குப் பிறகு உங்களுடைய கருத்து வேறு
எதுவாக இருந்தாலும், பிறகு நீங்கள் சொல்லலாம். எதிர்க்
கட்சித் தலைவர்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நீங்கள் எது வேண்டு
மானாலும் செய்யுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரைப் பேச
விடாமல் தடுப்பது இந்த அவையின் மரபு அல்ல. அதுவும்
குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச
விடாமல் இவ்வாறு மறிப்பது இந்த அவையினுடைய மரபு
அல்ல.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைககு மானியமாக
ரூ. 2,72,38,75,000 கோரப்பட்டிருக்கிறது. மானியமாக
கோரப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருந்தாலும் இந்த
மானியக் கோரிக்கைக்கு எப்போதும் ஒரு தனிச் சிறப்பு உண்டு.
ஆனால் நீங்கள் காவல்துறையில் கேள்வி நேரத்தை எல்லாம்
ரத்து செய்துவிட்டு ஆரம்பித்தும்கூட 2½ மணி நேரத்திற்
கும் அதிகமாக இன்றையதினம் காலம் எடுத்துக் கொள்ளப்பட்
டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்,

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : காவல் துறையில், தலைமை இயக்குநர் நிலையிலிருந்து காவலர்கள் வரை 68,987 பணியாளர்கள் பணியாற்றுவதாகக் கூறப்பட்டிருக்கிறது, புதி தாக 166 அமைச்சுப் பணிப் பதவிகளும். 24 பிற பதவிகளும். 40 மிகையான பதவிகளும் புதிதாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது, இருந்தாலும் நம்முடைய மக்கட் தொகையின் அடிப்படையில் இவை அதிகமான பதவிகள் என்று கூறிவிட முடியாது, பெருகி வரும் பல்வேறு பிரச்சினைகளைத் திறமையாக சமாளித்து தீர்க் கும் பொருட்டு, காவலர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்து வது அவசியமானதாகும். காவல் படையை ரூ, 80·45 கோடி செலவில் நவீனப்படுத்துவதற்குரிய செயற் குறிப்பினை தயா ரித்து. மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், மத்திய அரசு சென்ற ஆண்டு ரூ, 10 கோடியை மானியமாக வழங்கி இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் இதே போன்று மானியம் வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் கூறியிருக்கிறார். அத்துடன் 1988-89, 1990-91 ஆம் ஆண்டுகளில் செலவிடப்படாமல் உள்ள ரூ, 77·85 இலட்சத்தை 1991-92-ல் பயன்படுத்தும் வகையில் மத்திய அரசு அதனை செய்திறன் ஆக்கியுள்ளது.

அத்துடன் 1991-92 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ. 131·17 இலட்சத்தை மானியமாக வழங்கியுள்ளது. இந்த நிலையில் தமிழ்நாடு காவல்துறை எல்லா வகையிலும் நிறைவு பெற்ற ஒரு புதிய காவல் படையாக மாறும் வகையில் வேகமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது வரவேற்கத் தக்கதாகும். ஒரு புறம் போதிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமும் மறுபுறம் படையின் செயல்திறனை ஊக்கு விப்பதன் மூலமும் மாநிலத்தின் காவல்துறை மிகுந்த திறனுடன் செயல்படுவதற்கான உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே இந்த அரசின நோக்கம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். சமுதாயம் வெகு விரைவாக மாறி வரும் சூழ்நிலையில் மக்களின் எதிர் பார்ப்புகளும், விளைவுகளும் அதிகரித்து வருவதை உணர்ந்து அத்தகைய தேவையை நிறைவு செய்யவும், அந்தக் குறிக்கோளை அடையும் வகையிலே காவல்படை சீரமைக்கப்பட்டு மாற்றி யமைக்கப்பட வேண்டுமென்பதை முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகளுடைய எண்ணிக்கை 180 ஆக இருந்தும், 1—4—1991 ஆம் நாள் நிலவரப்படி 143 பேர் மட்டுமே இருக்கிறார்கள் என்று கூறப்



பட்டு இருக்கிறது. அதிலும் 4 பேர் இந்த ஆண்டு ஓய்வு பெறப் போவதாகவும் 2 பேர் காலமாகிவிட்டார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. காலியான இடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காவல் துறை, சிறைத் துறை, தீ அணைப்புத் துறை உட்பட சீருடைத் துறைப் பணியாளர் களை தேர்ந்தெடுக்கும் நோக்குடன் காவல் துறை தலைமை இயக்குநா பதவி தரத்திலான காவல் துறை அதிகாரியின் தலைமையில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. நியாயமாகவும் உரிய வாறும் ஆள் சேர்க்கும் நோக்குடன் இந்த வாரியம் அமைக்கப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அதேபோல் பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றுவதற்கான ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும் வாரியம் ஒன்றும அமைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மாநிலத் தொகுப்பைச் சேர்ந்த ஒரு ஐ. ஏ. எஸ் அதிகாரி தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த இரண்டு வாரியங்களும் சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உருப்பெற்றவையாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் தங்கள் சொற்படி இயங்கவில்லை என்பதற்காக சென்ற ஆட்சிக் காலத்தினபோது அதனுடைய எண்ணிக்கை வேண்டுமென்றே உயர்த்தப்பட்டு 6 பேர் புதியதாக நியமனம் செய்யப்பட்டார்கள். நேர்மைக்கும் கண்டிப்புக்கும் பெயர் போனவரும், மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவருமான தேர்வு ஆணைக்குழுத் தலைவர் மிகவும் சிறந்த முறையில் அரசுப் பணியாளர்களை தேர்வு செய்யும் நடவடிக்கைகளை செயல்படுத்தி வந்தார். அவருடைய பொறுப் பிலிருந்து ஆசிரியர்கள் காவலர்கள் போன்றவர்களை தனியாகப் பிரித்து அவர்கள் தன் விருப்பம் போல் நியமிக்க தி.மு.க அரசு திட்டம் தீட்டியது. தனிப்பட்ட ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தியது. இடைநிலை ஆசிரியர் களை தேர்வு செய்வதற்கான பேட்டிகளையும நடத்தி முடித்தன. அதிலே ஏராளமான லஞ்ச ஊழல்கள், முறைகேடுகள் நடந்த தைப் பற்றி பொது நிறுவனங்கள் அம்பலப்படுத்தின. அதே போன்று கல்வி அமைச்சரின் கண்காணிப்பில் நடைபெற்ற அந்த தேர்வு முழுவதையும் ரத்து செய்வதாகவும், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த மூப்பின் அடிப்படையில் ஆசிரியர் கள நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. அதே போன்று காவலர்கள் தேர்விலும் பல குளறுபடிகளும் முறைகேடுகளும் நடைபெற்றன. இவற்றிற்கு எல்லாம் முற்றுப் புள்ளி வைக்கிற வகையில், சுதந்திரமாகவும சிறப்பாகவும் இயங்கி வரும் அரசுப் பணியாளர்கள் தேர்வு ஆணைக் குழுவின் கையில் இதை விட்டு விடவேண்டும். நீதி வழங்கினால் மாத் திரம் போதாது. அது வழங்கப்படுவது போன்ற தோற்றமும் இருக்க வேண்டும. ஆங்கிலத்திலே "Jus ice sh uld not nly be rendered, but it should upper to be rendered" என்று சொல்லு வார்கள். பனை மரத்தின் கீழே நின்று பாலையே அருந் தினாலும் பார்ப்பவர்களுக்கு அது வேறு விதமாகத்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 18

தான் காட்சி அளிக்கும். எனவே நேர்மையும் கண்டிப்பும் நிறைந்த நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கும் காவல் துறை அதிகாரிகள் மிகவும் சிறந்த முறையில தான் பணியாற்றுவார்கள் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. மேலும் அவர்களுடைய நடவடிக்கை களுக்கு அரசியல் சாயம் பூசி தவறான விமர்சனங்களுக்குக் கொஞ்சமும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பதற்காக முதலமைச்சரின் பரிசீலனைக்கு இந்த வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

1982-83 ஆண்டுகளில் டி. எஸ். பி. தேர்வுக்கு 40 இடங்கள் காலியாக இருந்தன. அதற்காக 91 இன்ஸ்பெகடாகளை அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதற்காக அன்றையதினம் தேர்வு செய்தார்கள். எதிர்காலத்திலே வருகிற காலி இடங் களுக்கும் அவர்களை டி. எஸ். பி-க்களாக போட வேண்டும் என்றும் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. ஜீலை நெம்பர் 860. 8—4—1985-ல் 12 டி.எஸ்.பி க்கள் நேரிடையாக தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால் கடந்த காலஆட்சியில் 2—5—1990 ஆம் நாளன்று ஒரு புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த 12 டி.எஸ்.பி.-க்கள் மற்றும் அவர்களோடு துறையிலே சேர்ந்தவர்களுக்கு முன்பே தேர்வு செய்யப்பட்ட 1982-83 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப் பட்ட டி.எஸ்.பி-க்களை காட்டிலும் சீனியர்களாக விளங்குவார்கள் என்று அன்றைய தினம் திடீர் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. இதனால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக முன்பு தேர்வு செய்ய பட்ட டி.எஸ்.பி. க்கள் கருதினார்கள். கருதியதோடு மட்டுமல்ல அவர்கள் டிரிப்யூனலுக்கும் சென்று இருக்கிறார்கள். டிரிப்யூனலிலே இந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இம்ரெகுலர் இன்றையதினம் என்று சொல்லி நிறுத்தி வைக்கப்பட்டருக் கிறது. எனவே அதற்கு பரிகாரம் காணும் வகையில் அவர்களுடைய அந்த நியமன தகுதிகளை பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முந்தைய அரசின் அந்த ஆணையை ரத்து செய்வதோடு முன்பே தேர்வு செய்யப்பட்ட அந்த டி.எஸ்.பி.க்களுக்கு பதவி உயர்வுகள் கொடுத்தும் உரிய நியமன பிரமோஷன் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல 1987-ல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நேரடியாக சப்—இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். 3 வகையிலே அவர்கள் இடம் பெற்றார்கள். நேரடியாக காவல் துறைக்கு சப்-இன்ஸ்பெக்டர்கள். ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள். தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் அமைப்புக்கு சப்-இன்ஸ்பெக்டர்கள். 3 பேரும் ஒரே காலத்தில் தேர்வு செய்யப்பட்டார்கள். 3 பேருக்கும் நிர்ணயிக்கப்பட்ட குவாலிபிகேஷன் ஒன்றுதான். அதிலே வித்தியாசம் கிடையாது.



1992 மார்ச்18] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதிலே சம்பளத்திலேயும் வித்தியாசம் கிடையாது. அவர்கள் அன்றைய தினம் 3 விதமாக தேர்வு செய்யப்பட்டு லா அண்டு ஆர்டருக்கு என்று சிலரும், ஸ்பெஷல் போலீஸ் சப்-இன்ஸ்பெக் டர்களாக சிலரும், தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் என்கிற பெய ரால் சிலரும் இன்றைய தினம் அவர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இதே போல எம்.ஜி.ஆர். ஆட்சியிலே இருந்த நேரத்தில் 1979-ல் டைரக்ட் ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டவர். அவர்கள் அன்றையதினம் எம்.ஜி.ஆர். இடத்திலே, மாண்புமிகு முதல்வரிடத்திலே முறையீடு செய்தார் கள். அவர்கள் தங்களையும் காவல்துறையிலே, சட்டம் ஒழுங்கு துறையிலே பணியாற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும், எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முறையீடு செய்தபோது, அவர்களுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைய தினம் ஆணை பிறப்பித்திருக் கிறார். இரண்டு மாதம் சட்டம்-ஒழுங்கு பயிற்சி அளித்து அவர் கள் லா அண்டு ஆர்டர் காவல் துறைக்கு அன்றையதினம் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05.

அதேபோல தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸுக்கு தேர்வு செய்யப்படுகின்ற கான்ஸ்டபிள்கள் 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு காவல்துறக்குச் செல்லலாம். லா அண்டு ஆர்டருக்குச் செல்லலாம் என்ற ஆணையும் இருக்கிறது. அதேபோல டி.எஸ்.பி.க்கு தேர்வு செய்யப்படுகிற டி.எஸ்.பி.க்கள், துணை காவல் சூப்பரிண்டெண்டுகள் அவர்களும் காவல் துறைக்கு சட்டம் ஒழுங்கு துறைக்குச் செல்லலாம் என்ற ஆணை இருக்கிறது. ஆனால் இந்த சப்-இன்ஸ் பெக்டர்கள் மட்டும் பரிதாபகரமாக. அவர்கள் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் என்றால், தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸில் தான் இருக்க வேண்டும், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் என் றால், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களாகத் தான் இருக்க வேண்டும் என்று இன்னும் அந்த ஆணை அப்படியே இருக்கிறது. அவர் களும் முதலமைச்சர் அவர்களிடத்திலே இன்றையதினம் ஒரு கருணையான உத்திரவினை எதிர்பார்க்கிறார்கள். அவர் களுடைய கோரிக்கையையும் நீங்கள் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது போலீஸ் கமிஷனிலேயும் இன்றைய தினம் பரிந்துரை செய்யப் பட்டு இருப்பதாக கூறுகிறார்கள்.

அதேபோலஅடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீதத்திற்கும் மேலே பயணப்படி, ஒரு மாவட்டத்திற்குள்ளேயே வாங்கக் கூடாது என்ற ஒரு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு வெளியே அவர்கள் போனால் அதிகமாக வாங்க லாம் என்று இருந்தாலும் கூட மாவட்டத்திற்கு வெளியிலே போனாலும் அது அமல்படுத்தப்படவில்லை. அப்பொழுதும் 40 சதவீதத்திற்கும்மேலே அவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை,

[திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன்] [1992 மார்ச் 18

இதேபோல தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே துப்பு துலக்கும் பணிக்கு அவர்களை அனுமதிக்கிறார்கள். இதே காவல்துறையிலே இருப்பவர்கள் அங்கே செல்கிறார்கள். முன்பு எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், எம்.ஜி.ஆர், ஆட்சிக் காலத்தில் அவர்கள் எங்கே வேண்டுமானாலும் போய், எந்தக் கடையாக இருந்தாலும், எந்த கோடவுனாக இருந்தாலும் உள்ளே போய், அவர்களாலே சோதனைகளை நடத்த முடியும், ஆனால் இடையிலே வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு, சோதனை நடத்துகின்ற அந்த அதிகாரத்தை அவர்களிடத்திலே இருந்து பறித்து விட்டார்கள். இன்றையதினம், அவர்களாலே சோதனை போட முடியாது. எனவே, அவர்கள் மீண்டும் அங்கே சோதனை போடுகின்ற தன்மையிலே அரசு ஆணை பிறப்பிக்குமானால், நேர்கின்ற, நிகழ்கின்ற பல தவறுகள் நடக்காமல் இருக்க உதவியாக இருக்கும் என்பதையும் இந்தக் கட்டத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது காவல்துறையின் சிறப்பு உலகறிந்த ஒன்று. சர்வதேச போலீஸ் அமைப்பில் இண்டர்போல் துணைத் தலைவராகப் பணியாற்றிய எப். வி. அருள் மற்றும் ஸ்ட்ரேஸி. லட்சுமி நாராயணன் போன்றவர்கள் எல்லாம் நமது காவல்துறையின் கௌரவத்தைக் கட்டிக் காத்தவர்கள், நாம் முன்பு சந்தித்திராத பல சவால்களையும் சந்தித்து. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி. சாதனைகளைக் குவித்து வரும் இன்றைய காவல்துறை அதிகாரிகளையும். அவர்களுடைய கடமைதவறாத நடவடிக்கைகளையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது,

நமது நாட்டின் பாதுகாப்பிற்கே சவாலாக விளங்கிய தீவிரவாத. பிரிவினைவாத அபாயங்களும், அந்நிய சக்திகளின் ஊடுருவல்களும் கட்டுப்படுத்தப்பட்டு, புதிய உத்திகளைக் கொண்டும் நவீன ஆயுதங்களையும், பயிற்சிகளையும் பெற்றும், உள்நாட்டில் பாதை தவறிய பல இளைஞர்கள் மற்றும் அமைப்புகளின் ஆதரவைக் கொண்டும். நமது கட்டமைப்பை சீர்குலைத்து வந்த சக்திகளை எதிர்த்து முறியடிக்கும் வகையில், நமது காவல் துறையை நவீனப்படுத்தவும் செயல்திறன் உள்ளதாக ஆக்கவும். சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது, மத்திய அரசும் இயன்ற வரையில் ஒத்துழைப்பு நல்கி வருகிறது, இந்தியாவில் தெற்கு எல்லையைக் காக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் மாநிலமாகக் கருதி அதற்கு சிறப்பு நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற புதிய சிந்தனையையும் அணுகுமுறையையும் உருவாக்கி. இந்திய அரசை உதவிக்கரம் நீட்ட வற்புறுத்தியவர் நமது முதலமைச்சர். நேர்மாறாக, திறந்து கிடக்கும் தெற்கு எல்லையை தன் தேசவிரோத செயல்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட தீய சக்திகளிடம் சிக்கி நம்முடைய காவல்துறையே முன்பு களங்கப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று அந்த நிலை மாறி சரியான நிலை



1992 மார்ச் 18] [திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நோக்கி நமது மாநிலம் பயணம் ஆகிக் கொண்டிருக்கிறது. அந்தப் பயணத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உறு துணையாக இதய சுத்தியோடு ஈடுபட்டுள்ள அதிகாரிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். குறிப்பாக நம்முடைய டி.ஜி.பி. போன்றவர்கள், எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அவர்களைப் போன்றவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

(பிற்பகல் 12-10).

சென்னை மாநகர காவல்துறையைப் பொறுத்தவரையில் சென்ற 15 நாட்களுக்குள் 66 இலட்ச ரூபாய் பெருமானமுள்ள களவாடப்பட்டப் பொருட்களை மீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்ததில் சாதனைப் படைத்து இருக்கிறது,

குற்றங்களைத் துப்பு துலக்குவதைப் பொறுத்தவரையில் 1990-ல் 65 சதவீதமாக இருந்தது. 1991-ல் 70.4 சதவீத அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. அதேபோல் வழிப்பறிக் கொலை, கொள்ளைப் போன்ற கடுமையான குற்றங்களை துப்பு துலக்கிய அளவு 1991-ல் 70 சதவீதம் ஆகும். தற்போது இந்த 3 மாதக் காலத்தில் 1992-ல் 71 சதவீதமாக அது உயர்ந்து இருப்பது பாராட்டுக்குரியதாகும். பொருட்கள் மீட்கப்பட்டதைப் பொறுத்தவரையில் 1990-ல் 74 சதவீதமாக இருந்தது, 1991-ல் 78·4 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

படித்துவிட்டு வேலையில்லாமல் உள்ள பட்டதாரிகளால் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பயங்கரவாதம் தலை தூக்கி இருக்கிறது. தமிழகத்திலும் பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாத தொடர்புகளால் நம்முடைய இளைஞர்கள் பாதை மாறிச் செல்லும் அபாயம் தோன்றியிருக்கிறது. அவர்களை தீய வழியிலிருந்து திருப்பவும் குற்றங்களை துப்பு துலக்கி மக்களுடைய உயிருக்கும், உடமைக்கும் உத்திரவாதம் அளிக்கவும் நம்முடைய காவல்துறையினர் மேற்கொண்டு வரும் பணி சிறப்பானது ஆகும். இருப்பினும் ஒரு சில இடங்களில் நடைபெறும் அத்துமீறலால் மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்கின்றன.

அண்மையில் சென்னையில் மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியினரை பொது இடத்தில் வைத்து போக்குவரத்து அதிகாரிகள் தாக்கியதாகவும், அதற்கு பொது மக்களே எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் வந்திருக்கும் செய்தி விரும்பத்தகாதது ஆகும்.

அதேபோல் சென்னை புளியந்தோப்பில் போலீஸ் பொது மக்கள் மோதலால் ஏற்பட்ட சேதங்களும், வேதனை அளிக்கும் சம்பவங்கள் ஆகும்,

[திரு எஸ். ஆர், பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 18

இரயில்வே சீசன் கட்டணம் உயர்த்தப்பட்டதைக் கண்டித்து
திருவள்ளூரில் சிலர் நடத்திய போராட்டத்தின் போது மறியல்
செய்வதர்கள் ஓடிவிட்டார்கள். ஆனால் அங்கேயிருந்த அப்பாவி
மக்களை இரயிலில் ஏறுவதற்கு என்று காத்து இருந்த ஒன்றும்
அறியாத அப்பாவி மக்களை போலீஸ் கைது செய்து அவர்கள்
மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்குப் போட்டு
இருப்பது பெரிதும் விரும்பத்தகாதது ஆகும். அவ்வாறு
பாதிக்கப்பட்டவர்கள் என்னிடத்தில் நேரடியாக பலர் வந்து
முறையிட்டார்கள். சென்னையில் ஐ.என்.டி.யூ.சி. தலைமை
யகத்தில் பணிபுரியும் ஒரு ஊழியரும் அடங்கி இருக்கிறார். அவர்
எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்காமல் காவல்துறையினர்.
அவரை கைது செய்து சிறையில் அடைத்து இருக்கிறார்கள்.
இப்படி நிரபராதிகளை தண்டிக்கும் நிலை மாற வேண்டும்.
தகுந்த விசாரணைக்குப் பிறகு போலீஸ் மேல் அதிகாரிகள்
அவர்கள் மீது போட்டிருக்கும் வழக்கை திரும்பப் பெற வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

சென்னை நகரில் இன்றையதினம் பல புகார்களை
எம்.எல்.ஏ.க்கள்கூட என்னிடத்திலே எழுதிக் கொடுத்திருக்
கிறார்கள். பல தவறுகள் நடைபெறுவதாக, சமூக விரோதச்
செயல்கள் நடைபெற்று வருவதாக கூட எழுதிக் கொடுத்திருக்
கிறார்கள். பிராந்தி ஷாப்பில் பார் நடத்தப்படுவதாக புகார்கள்
வந்திருக்கின்றன. அதேபோல் ரேஸ் பெட்டிங் பக்கெட் ஷாப்
நடைபெறுவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. நியூயார்க்
காட்டன் மார்க்கெட், நான் இதையெல்லாம் இருக்கிறதா?
இல்லையா? என்று தெரியாது—முடிந்து போய்விட்டது என்று
நினைத்துக்கொண்டு இருந்தேன்; அதுபோன்ற பெட்டிங் நடை
பெறுவதாகவும் செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. இதில்
எல்லாம் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் சைதாப்பேட்டைப் பகுதியில் அராஜகக்கும்பல்
ஒன்று அங்கே இயங்கிக்கொண்டு இருப்பதாக சொல்லுகிறார்
கள். மார்வாடியிடம் கடன் வாங்கிச் செல்பவர்களிடம் அவர்
களை மடக்கி வழிப்பறி செய்யப்படுவதாக புகார்கள் வந்திருக்
கின்றன. ஒரு நபர் 50 ஆயிரம் ரூபாய் வழிப்பறி செய்து கையும்
களவுமாக பிடிக்கப்பட்டு போலீசில் கேஸ் பதிவாகியிருக்கிறது.
அவர் இன்றையதினம் வெளியில் நடமாடிக்கொண்டிருக்கிறார்.
இந்த கும்பல் செல்வாக்கு படைத்தது என்ற காரணத்தால்
அங்கே கேஸ் பதிவு செய்த சைதாப்பேட்டை இன்ஸ்பெக்டர்
மாறுதல் செய்யப்பட்டு இன்றையதினம் அவர்கள் ஜாமீனில்
இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதே கும்பல் கோவையில் பஸ் நிலையத்தில் இதுபோன்று
செய்து வருவதாகவும் இன்றையதினம் செய்திகள் வந்து



1992 மார்ச் 18] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கொண்டிருக்கின்றன. கோவை நகரிலும் மாவட்டத்திலுள்ள
பிற பகுதிகளிலும் அண்மைக் காலத்தில் கொலை, கொள்ளை
அதிகரித்து வருகின்றன.

பிற்பகல் 12-15.

முகமூடிக் கொள்ளை கோவை நகரத்தைச் சுற்றி மேட்டுப்
பாளையம் தாலுக்கா, காரைமடைப்பகுதி, உடுமலைப்பேட்டை
பகுதி என்று ஏராளமான இடங்களில் நடைபெற்று
வருகின்றன. மக்கள் மத்தியில் ஒருவிதமான பீதி நிலவிக்கொண்
டிருக்கிறது. ஒரு டி.எஸ்.பி.-யின் வீட்டிலே திருட்டு நடை
பெற்றிருக்கிறது. பெரிய தொகை அங்கே திருடப்பட்டதாகச்
செய்திகள் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பொது இடங்
களிலே, கடை வீதிகளிலே, வேறு இடங்களிலே கார்கள்
நிறுத்தப்பட்டால் உடனடியாக கார்கள் திருடப்படுவதாகச்
செய்திகள் வருகின்றன. கணவனும் மனைவியும் காரை நிறுத்தி
விட்டு, பெரிய கடை வீதியிலே உள்ள கடைக்குள்ளே போய்
விட்டுத் திரும்பி வெளியே வந்தால் அந்தக் காரைக்காணோம்.
வீட்டிற்குள்ளே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்
சைக்கிள், இரும்புக் கேட்டுக்குப் பின்னாலே நிறுத்தப்பட்டிருந்த
மோட்டார் சைக்கிள், தோல் இருக்க சுளை முழுங்கி என்பதைப்
போல அத்தனை கதவுகளும் மூடப்பட்டிருந்த நேரத்திலே அந்த
மோட்டார் சைக்கிளைத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்
அதேபோல ஒரு சாதாரண சிப்பந்தி, மொபட் மோட்டார்
சைக்கிளை வெளியே வைத்துவிட்டு காப்பி சாப்பிடப் போனார்.
வெளியே வந்தார். மோட்டார் சைக்கிளைக் காணோம். இது
மட்டுமல்ல, பல கொலைகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன.
கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்
குள்ளாகவே ஒரு இரட்டைக் கொலை நடைபெற்றது நம்
எல்லோருக்கும் தெரியும். அந்த இரட்டைக் கொலையில் இன்
னும் முனைப்புடன் காவல்துறை செயல்பட்டு இருக்கவேண்டும்.
இன்னும் செயல்பட வேண்டும். உண்மையான குற்றவாளிகள்
கண்டுபிடிக்கப்பட்டதாக இன்றுவரையில் அங்கேயிருக்கிற
பொதுமக்கள் நம்பத் தயாராக இல்லை. ஏதோ, போலீஸ்
பாலக்காட்டுக்குப் போயிற்று. யாரோ ஒருவனைப் பிடித்துக்
கொண்டு வந்தார்கள். அத்தோடு முடிந்து போய்விட்டது என்கிற
நிலைமை அங்கே இருக்கக்கூடாது. இன்றையதினம் பிடிக்கப்
பட்டவர்களிலே ஒரு செயின் ஸ்னாச்சர். அவர் வேண்டுமானால்
உண்மையான செயின் ஸ்னாச்சராக இருக்கலாமே தவிர மற்ற
படி இந்த கொலை வழக்கிலே இதுவரை நடைபெற்று இருக்கிற
துப்பு துலக்கும் விஷயத்திலே சரியாக நடைபெற்றதாக நிச்சய
மாக அங்கே இருக்கிற யாரும் கருதவில்லை. எனவே அதை
கவனித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். இதுதவிர பல கொலைகள் அண்மைக் காலத்
லே அங்கே நடைபெற்று விட்டன. பல பகுதிகளிலே நடை

பெற்று இருக்கின்றன. ஈச்சனாரியிலே ஒரு கொலை, ஒத்தக்கால் மண்டபத்திலே ஒரு கொலை, இன்னும் நிறைய கொலைகள் நடந்திருக்கின்றன.

இன்னொரு கொலை, மிகவும் வேடிக்கையானது. காவல் துறை மட்டும் கொஞ்சம் கவனம் செலுத்தி இருக்குமேயானால், கொஞ்சம் கண்டிப்புடன் நடந்திருக்குமேயானால் நிச்சயமாக அந்தக் கொலையை தவிர்த்து இருக்க முடியும் என்று நான் கருதுகிறேன். ஓர் நபர் வீட்டை விட்டு வெளியே வருகிறார். பிப்ரவரி 16-ஆம் தேதி வீட்டிலேயிருந்து வருகிறார். வீட்டிலே இருந்து வந்தவர் மறுபடியும் வீட்டுக்குத்திரும்பவில்லை. அவர் ஒரு வங்கி ஊழியர். ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். மாலையிலே வீட்டிலேயிருப்பவர்களுக்குச் சந்தேகம் வருகிறது. அவர்கள் காவல் நிலையத்திற்குப் போய் சொல்கிறார்கள். அதற்கு காவல்துறையினர் கேள்வி கேட்கிறார்கள். என்ன நீ. நினைத்துக் கொண்டு இருக்கிறாய், எங்கோ உன் மகன் போனதையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமா என்ற பதில் அவர்களிடமிருந்து வருகிறது. அவர்கள் விட்டுவிடுகிறார்கள். மறுநாள் காலையிலே அவர் சென்ற சில்வர் பிளஸ் மொபெட் மோட்டார் சைக்கிள் உக்கடம் பகுதியிலே, ஒரு பேக்கரிக்கு முன்னாலே கிடப்பதாகக் கேள்விப்பட்டு அவருடைய தந்தையும் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலரும் வந்து பார்த்து, அந்தப் போலீஸ் ஸ்டேசனிலே புகார் செய்யாமல்—அவர்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு அவ்வளவுதான் தெரியும்—அவர்கள் நேரடியாக போய் போத்தனூர் போலீஸ் ஸ்டேஷனிலே புகார் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொன்னது, சில்வர் பிளஸ் வண்டி உக்கடத்திலே இருந்தால் இங்கே ஏன் வருகிறாய்; உக்கடத்திற்குப் போய் புகார் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். இவர்களும் அதை நம்பி உக்கடத்திற்குப் போய் பி-1 போலீஸ் ஸ்டேஷனிலே புகார் செய்கிறார்கள். அதைப் புகாராக எடுத்துக் கொள்ள மறுத்து விடுகிறது அந்தக் காவல் நிலையம். பிறகு எங்கே போவார்கள்? 10 நாட்கள் படாதபாடுபட்டு எங்கேயெல்லாம் போக முடியுமோ அங்கேயெல்லாம் போய் தேடிப் பார்க்கிறார்கள். 10 நாட்கள் எந்தச் செய்தியும் இல்லை. 27-ஆம் தேதி காலையிலே பத்திரிகையிலே ஒரு படம் வருகிறது. 'தற்கொலையா' என்று போட்டு ஒரு படம் வருகிறது. படத்தைப் பார்த்தவுடனே தந்தைக்குப் புரிகிறது; அந்தப் படத்தில் உள்ளவன் தன் மகன் என்று தெரிகிறது. தெரிந்த மாத்திரத்திலேயே காவல்துறையை அணுகுகிறார். இங்கே வந்தால் எப்படி? இங்கே உனக்கு சம்பந்தம் இல்லை; இது இங்கே நடைபெற்ற சம்பவம் அல்ல, எங்கே பிணம் தொங்கிக் கொண்டு இருக்கிறதோ அங்கே போ என்று சொல்கிறார்கள். அங்கே போய்ப்பார்ப்பதற்கு முன்னாலேயே, வேக வேகமாக காரியங்கள் நடைபெற்றுவிட்டன என்றாலும் நல்ல காலம், அங்கேயிருந்த போட்டோகிராபர் அந்தப் பிணத்தையும் போட்டோ எடுத்து வைத்து இருக்கிறார்



அதையும் வாங்கிப் பார்த்துவிட்டு, இது அனாதைப் பிணம் அல்ல, இது என்னுடைய மகனின் பிணம், அவன் 10 நாட்களுக்கு முன்னாலே, வங்கியிலே வேலை பார்ப்பதற்காகப் போனான். அவன் வங்கியிலே வேலை பார்ப்பவன். வேலைக்குப் போனவன் திரும்பி வரவில்லை என்று சொல்லி, இந்த மரணத்திலே எனக்குச் சந்தேகம் இருக்கிறது. இது தற்கொலையாக இருக்க முடியாது. கொலையாக இருக்க வேண்டுமென்று பலரிடத்திலே முறையிடுகிறார். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. (குறுக்கீடு) கோயம்புத்தூரிலே, பிறகு நானே அந்தப் பிரச்சினையை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எழுப்பவேண்டிய நிலைமை வந்தது. அன்றுதான் நான் அங்கே போனேன். என்னிடத்திலே சொன்னார்கள். நான் பிரச்சினையை எழுப்பினேன். எழுப்பியதற்குப் பின்னாலே இன்றையதினம் ஓரளவிற்கு காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதற்குப் பின்னாலே நான் உயர் போலீஸ் அதிகாரியிடத்திலேயும் பேசினேன். புதிதாக, எங்கள் மாவட்டத்திற்கு இப்போது வந்திருக்கிற இணை இயக்குநர் இடத்திலேயும், துணை இயக்குநர் இடத்திலேயும் பேசினேன். அவர், நிச்சயமாக இதிலே நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். ஓரளவிற்கு இதிலே இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. The body has been exhumed. இதிலே என்ன வேடிக்கை என்றால் சாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னாலேயே செத்துப் போன அந்த நபர் ஒரு புகார் தாக்கல் செய்திருக்கிறார். காவல் நிலையத்திலே புகார் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 'வேலையிலேயிருந்து நான் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த நேரத்திலே தாக்கப்பட்டேன்; எனக்கு ரத்தக் காயங்கள் ஏற்பட்டன; தாக்கியவர்களை அடையாளம் தெரியும் என்றும் யார் யார் தாக்கினார்கள் என்றும், பெயர்களை எல்லாம் அதிலே எழுதிக் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகாரின் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்குமானால் நிச்சயமாக அந்தக் கொலை நடைபெற்று இருக்காது என்று உறுதியாக என்னாலே சொல்ல முடியும். ஆனால் அந்தப் புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல; ஆள் செத்ததற்குப் பின்னாலே புகார் செய்யப் போனால், பெரிய மேதையோ என்று அவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசியதற்குப் பின்னால், அந்தப் புகார் தாக்கல் செய்த நபர்களைக் கூப்பிட்டு, அந்தக் காவல் நிலையத்திலேயிருந்த அதிகாரிகள் அவர்களை மிரட்டியிருக்கிறார்கள். "நீ பெரிய இடத்திற்குப் போகிறாய், போய்ப் பார், என்ன நடக்கிறது என்று பார்" என்று மிரட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நிச்சயமாகத் தொடர்ந்து நடைபெறக்கூடாது. அப்படி நடைபெறுமேயானால் நம்முடைய காவல் துறைக்கு அவை சிறப்பு சேர்க்காது என்பதை மட்டும் நான் இந்த இடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரக்கர்களால் அத்தகைய கட்டாயம் ஏற்படலாம், இத்தகைய தேச விரோத சக்திகள் தங்களுக்குள் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டு வருவதைக் கண்காணிக்க வேண்டும். இன்றையதினம், செங்கற்பட்டிலே இருக்கிற தனி கிளைச் சிறைச்சலையிலே கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள், சதிக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், 17, 18 பேர் அங்கே வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. அதிலே ஒருவர் இன்றையதினம் ஜாமீனிலே வெளியே போய்விட்டார். மற்றவர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருகிறது. டிராவலர்ஸ் செக்குகளாக வருகின்றன. சிங்கப்பூர், இங்கிலாந்து, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து அவர்களுக்குப்பணம் வருவதாகவும் அந்தப் பணத்தை மிகவும் தாராளமாக அவர்கள் செலவழித்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி குடியரசு நாள். பொதுவாக, எந்த அரசு அலுவலகமாக இருந்தாலும், சிறையாக இருந்தாலும் வேறு எந்த இடமாக இருந்தாலும், அன்றையதினம் தேசியக் கொடியேற்றுவார்கள், ஆனால், இந்த ஆண்டு, செங்கற்பட்டு கிளைச் சிறைச்சலையிலே குடியரசு நாள் கொண்டாடப்படவில்லை. அதற்கு அவர்கள் சொன்ன காரணம், அங்கே, உள்ளே இருப்பவர்கள் குடியரசு நாளைக் கொண்டாடி கொடியேற்றி வைத்தால், உண்ணாவிரதம் இருக்கப் போவதாக மிரட்டுகிறார்கள்; எனவே, கொடியேற்றவில்லை என்று அந்த சிறை அதிகாரி சொல்கிறார். அந்த சிறை அதிகாரி யார் என்று கேட்டால், பிரபலமான இசையமைப்பாளர்கள் இரண்டு பேருக்கு டிரான்சிஸ்டரில் குண்டு வைத்துக் கொடுத்தாரே அவருடைய மருமகன்தான் இவர் என்றும் சொல்கிறார்கள். அந்தக் கைதிகளுக்கு பல சலுகைகள்; பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ' ஏ ' கிளாஸ் வசதிகள், அவர்களுடைய உணவுப் பழக்கம் என்னவென்று கேட்டால், நிறைய சொல்கிறார்கள்; அவர்களுடைய பணத்திலேயிருந்து அல்ல; அரசுச்செலவிலே அல்லது வேறு வகையிலே நல்ல உணவு அங்கே வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள், பத்திரிகைகள் அனைத்தும் அங்கே வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். கடிதங்கள், பத்திரிகைகள் சென்சார் செய்யப்படுவதில்லை என்றும் செய்திகள் வருகின்றன. கைதிகள் விஷயத்திலே இதற்கு முன்பு இருந்த அதிகாரி மிகவும் கண்டிப்பாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த அதிகாரி இன்றையதினம் நீண்ட தூரத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இவர்களையெல்லாம் அங்கே கண்காணிப்பதற்கு கவனிப்பதற்கு ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் இருக்கிறது, ' க்யூ ' பிராஞ்ச் போலீசின் நடமாட்டமும் அங்கே உண்டு, இவர்களெல்லாம் இருந்துதான் இத்தனையும் நடைபெற்றிருக்கிறது; நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



அதுமட்டுமல்ல; சேலத்தில் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாடு எப்படி நடைபெற்றது என்று நமக்கெல்லாம் தெரியும். அங்கேதான் இப்போது கோஷங்கள் எல்லாம் போட்டார்கள், அவர் வாழ்க ; இவர் வாழ்க ; இராஜீவ் காந்தியைப் பற்றி எவ்வளவு கேவலமாக கோஷம் போட வேண்டுமோ, முதலமைச்சரைப்பற்றி எவ்வளவு கேவலமாக கோஷம் போட வேண்டுமோ, அவ்வளவு கோஷங்களும் சேலத்திலே போடப்பட்டன, இந்தச் சிறைச்சாலைக்கு முன்னாலே. அதேபோல் முன்னாள் அமைச்சருடைய தலைமையிலே வந்து, சேலம் மாநாட்டிற்கு பிரச்சாரம் செய்கிறோம் என்ற பெயரிலே நீண்டநேரம் அங்கே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும், சிறைக்குள்ளே இருந்தவர்களை சிலாகித்து கோஷங்கள் போட்டதாகவும் இங்கே காலையிலே பேசினோமல்லவா, அந்த நபர்களுக்கெல்லாம் வாழ்க; வாழ்க என்ற கோஷங்கள் போட்டதாகவும், முதலமைச்சருக்கு எதிராகவும், இராஜீவ் காந்திக்கு எதிராகவும் கோஷங்கள் போட்டதாகவும் சொல்கிறார்கள், இதற்கெல்லாம் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? ஏதாவது கண்காணிக்கப்பட்டிருக்கிறதா என்றால் நான் அறிந்த வரையில் எந்த விதமான கண்காணிப்பும் இருந்ததாகத் தெரியவில்லை, சிறைச்சாலையிலே பலர் வந்து அவர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, திராவிடர் கழகத்தைச் சேர்ந்த வக்கீல்கள் சமீபத்தில் போய் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார்கள். நீண்ட நேரம் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள், அந்த வக்கீல்கள் எல்லாம் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்ததற்குப் பின்னாலேதான், இப்போது பத்திரிகையிலே தினசரி அறிக்கைகள் வருகின்றன அல்லவா? நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோம்; எங்களைக் கொடுமையாகத் தாக்கினார்கள்; எனவேதான் நாங்கள் ஸ்டேட்மென்ட் கொடுத்தோம் என்றெல்லாம் தினசரி—இன்றுகூட காலையிலே ஒரு பத்திரிகையிலே ஸ்டேட்மென்ட் வந்திருக்கிறது. இந்த ஸ்டேட்மென்டுகள் எல்லாம் எப்போது கொடுக்கப்பட்டன என்று சொன்னால், இவர்கள் அங்கேபோய்விட்டு வந்ததற்குப் பின்னாலே கொடுக்கப்பட்ட ஸ்டேட்மென்டுகள். தாராளமாக அவர்களை அனுமதித்திருக்கிறார்கள். அந்தத் தாராளத்தை அவர்கள் அதிகமாகவே பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் இவ்வாறு ஸ்டேட்மென்டுகள் கொடுப்பதற்கு சொல்லித் தரப்பட்டு, இந்த ஸ்டேட்மென்டுகள் வழங்கப்பட்டதாகவும், அந்த ஸ்டேட்மென்டுகள்தான் இன்றைக்கு பத்திரிகையிலே வந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; அங்கே உள்ளேயிருந்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட நபர்; அவர் பெயர் வேண்டாம். அவர் விடுதலையான பிறகு, அவருக்கு அங்கிருந்து எல்.டி.டி.இ-யினரால் 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 18
பிற்பகல் 12.30

இந்தச் செய்திகள் எல்லாம் மிகவும் கவலை தருகிற செய்தி
கள், இந்தச் செய்திகளுக்கு உச்சமாக, டெல்லியிலே இரண்டு
பேர் கைது செய்யப்பட்டார்கள். உங்களுக்கெல்லாம் நினை
விருக்கும் ; ஒரு பெயர் மறக்க முடியாத பெயர்—ஆதிரை,
இன்னொரு பெயர் கனகசபாபதி என்று நினைக்கிறேன்; இவர்கள்
இரண்டு பேரும் அங்கே கைது செய்யப்பட்டார்கள்,
இவர்கள். எல்.டி.டி.இ-யினுடைய தலைவருடைய ஆணைக்குக்
கட்டுப்பட்டு செயல்பட்டவர்கள் என்று அவர்கள் மீது குற்றம்
சுமத்தப்பட்டது, அதுமட்டுமல்லாமல், இராஜீவ் காந்தியை
கொலை செய்த குற்றவாளிகள் இந்த நாட்டிலேயிருந்து தப்பிச்
செல்வதற்காக, அவர்களுக்கு உதவுவதற்காக டெல்லியிலே
அவர்கள் செயல்பட்டவர்கள் என்றும் அவர்கள் மீது குற்றம்
சுமத்தப்பட்டது, நேரிடையாக எல்.டி.டி.இ-யினரோடு தொடர்பு
டையவர்கள் என்றும் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.
அந்த ஆதிரைக்கும் இன்னொரு நபருக்கும் உதவியதாக டில்லி
யில் ' தமிழ்நாடு இல்லத்தில் ' பணியாற்றிக் கொண்டிருந்த
மூன்று பேர்களில் இரண்டு பேர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்
கள், ஒருவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்,
அவர் நிரந்தர ஊழியர் என்பதால் அவர் தற்காலிக நீக்கம்
செய்யப்பட்டிருக்கிறார். இரண்டாம் நபர் தற்காலிக ஊழியர்
என்பதால் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார், அவர்
களுக்கு உதவியாகச் சொல்லப்படுகின்ற நபர் ஒருவர் இன்றும்
தாராளமாக ' தமிழ்நாடு ஹவுஸ்-க்கு ' வருகிறார். அங்கே
இருக்கிற அதிகாரிகளைச் சந்திக்கின்றார். ஏன் இதைச்
சொல்லுகிறேன் என்றால்—யாரோ ஒருவர் வந்தால் உங்களுக்கு
என்ன வலிக்கிறதா என்று கேட்கலாம். நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்றால்
தமிழ்நாடு ஹவுஸில்தான் தங்குகிறார்கள். அதேபோல் மற்ற
அமைச்சர்கள் சென்றாலும் அங்குதான் தங்குகிறார்கள்,
அதிகாரிகள் சென்றாலும் அங்கேதான் தங்குகிறார்கள், நம்
மைப் போல் எம்.எல்.ஏக்கள் சென்றாலும் அங்கேதான் தங்கு
கின்றோம். ஆகவே, பாதுகாப்பு எந்த அளவுக்கு அங்கே
இருக்க முடியும் என்று தான் நான் அறிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

நான் ஏற்கனவே இந்த விஷயத்தை சில மாதங்களுக்கு முன்பு
உரியவர்களிடத்திலே கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.
அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கக் கூடும், நான் இல்லை
என்று சொல்லவில்லை, ஆனால், அவர் சாதாரண நபர்களைப்
பார்க்க வரவில்லை, அங்கே இருக்கிற அதிகாரியைப் பார்க்க
வருகிறார். அந்த அதிகாரி கீழே இருப்பவர்களை எங்கே
வந்தாய் என்று விசாரித்தால் கோபித்துக் கொள்கிறார், காவ
லர்களாகப் பணியாற்றுகிறவர்கள் உள்ளே வருபவர்களை
விசாரித்தால்-விசாரித்துத்தான் அனுப்புவார்கள். அதுவும்



1992 மார்ச் 18] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

டில்லியிலே சுற்றிக்கொண்டிருக்கும் நபர்கள் என்றால் நிச்சய
மாகக் கேட்டு, எங்கே போகிறாய் ; யாரைப் பார்க்கப்
போகிறாய் ; என்ன காரியமாகப் போகிறாய்? என்று கேட்டுத்
தான் அனுப்புவார்கள், அதுமட்டுமல்லாமல் காவல் பணியிலே
ஈடுபட்டிருப்பவர்களுக்கு என்று ஒரு ரிஜிஸ்டர் இருக்கிறது,
அதிலே முடிந்தவரை கையெழுத்து வாங்குவார்கள். நம்மைப்
போன்று தெரிந்தவர்களாக இருந்தால் கையெழுத்து வாங்க
மாட்டார்கள், நம்மை அடையாளம் தெரியும். அதனால்
கையெழுத்து வாங்க மாட்டார்கள், சாதாரணமாக டில்லியிலே
சுற்றிக் கொண்டிருப்பவர்கள் திடீரென்று வருவார்கள் என்று
சொன்னால் அவர்களிடம் கையெழுத்துக் கேட்டு வாங்குவார்கள்.
அவ்வாறு கையெழுத்துக் கேட்டு வாங்கப்பட்டபோது
அந்த அதிகாரி ஒரு முறை அந்தக் காவலரை, காவலர் என்றால்
' வாட்ச்மேன் '—மிரட்டியிருக்கிறார். நான் உள்ளே வந்தால்
உனக்கு என்ன? உள்ளே போகிறேன் என்று சொன்னால் விட
வேண்டியதுதானே? நீ ஏன் இங்கே வந்தாய் என்றா கேட்
கிறாய் என்று மிரட்டி இருக்கிறார். இல்லை, இல்லை, இந்த
நபர் இங்கேயிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர் அதுமட்டு
மல்ல, சந்தேகத்திற்குரிய வகையிலே அடிக்கடி வந்து
போகிறார், சில நாட்களில் முதலமைச்சர் வருவதாகச் செய்தி
வந்திருக்கிறது, எனவே உள்ளே வரும்போது அவனை நான்
எப்படிக்கேட்காமல் அனுப்ப முடியும், எனவே தான் கேட்டு உள்ளே
அனுப்பி வைத்தேன், வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லி
யிருக்கிறார். பிறகு மீண்டும் ஒரு நாள் கையெழுத்துப் போட
கட்டாயப்படுத்தி, ரிஜிஸ்தரில் கையெழுத்து வாங்கியதற்காக
அந்த வாட்ச்மேன் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டார்.
காரணம் என்ன சொன்னார் என்பது வேறு. ஆனால், உண்மை
யான காரணம் என்ன என்பதற்கு என்னிடத்தில் ஆவணம்
இருக்கிறது. ரிஜிஸ்தரிலே அவர் கையெழுத்து இருக்கிறது.
உள்ளே வந்தவர் பெயர் சீனிவாசராஜ். அவர் பணி நீக்கம்
செய்யப்பட்டது எல்லோருக்கும் தெரியும். அந்த சீனிவாசராஜூ
உள்ளேவரும்போது அங்கேயிருந்த வாட்ச்மேன் கையெழுத்துப்.
போட்டுவிட்டு உள்ளே போ என்று சொல்லியிருக்கிறார்.
நீ பார்க்கப் போகும் அதிகாரி யார் என்றும் கேட்டிருக்
கிறார். அதற்கு அந்த அதிகாரி என்ன செய்திருக்கிறார்
என்று சொன்னால், ரிஜிஸ்டரைக் கிழித்து முகத்திலே
எறிந்து, நீயா அவனிடத்தில் கையெழுத்து வாங்கினாய்?
உன்னை டிஸ்மிஸ் செய்கிறேன் பார் என்று வெளியே அனுப்பி
விட்டார். அந்த நேரத்திலே பல அதிகாரிகளும் எங்களைப்
போன்றவர்களும் அங்கே போய்க் கொண்டிருந்த காரணத்
தினால் அந்த அதிகாரிக்குக் கொஞ்சம் பயம் வந்து, சில மா
தங்கள் கழித்து மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்
கிறார். அங்கு உள்ளவர்களும் அவரை அறிவுறுத்தி இருக்
கிறார்கள். நீங்கள் செய்தது மிகப் பெரிய தவறு. நீங்கள்
சொன்ன குற்றச்சாட்டே பொய். அன்றைய தினம் இரவிலே

தூங்கியதாகச் சொன்னீர்கள். அன்றைய தினம் அவன் பணியிலேயே இல்லை. அப்படி இல்லாதபோது, வேலை செய்யும் நேரத்தில் தூங்கியிருக்கிறார் என்றும் அதனால் பணி நீக்கம் செய்கிறேன் என்றும் சொன்னால் உங்களுக்கு ஆபத்து என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்காரணமாக இன்றைய தினம் மீண்டும் அவரை பணியில் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பணிக்கு எடுத்துக் கொண்டபோது அவர் சொல்லியிருக்கிறார். 'ஜாக்கிரதை. நான் வேறு ஒரு விஷயத்திலே உன்னை நிச்சயமாக வெளியேற்றிவிடுவேன். இங்கே வேலை செய்ய முடியாது' என்று சொல்லி மிரட்டி வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் அந்த அதிகாரியும் அங்கேதான் இருக்கிறார். அவருடைய விஷயத்தைப் பற்றி முதலமைச்சரிடம் தனியாகச் சொல்கிறேன். அதைப்பற்றி நிச்சயமாக நீங்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கையெழுத்து வாங்கிய காகிதம், அதையும் நான் தருகிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே பலரும் காலையிலே நீண்ட நேரம் விவாதிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயம் பிரபாகரனைப் பற்றியது. பிரபாகரன் குற்றவாளி என்று நிரூபணம் ஆகிவிட்டதா என்று ஆக்ரோஷமாக அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் கேட்டார்கள். குற்றவாளி என்று நிரூபணம் ஆவது எப்போது என்பது வேறு. ஆனால்

When a person is proclaimed as an offender, unless there is a prima facie case aganist him, the particular court would not declare him as a proclaimed offender.

போதிய சாட்சியங்கள் போதிய தடயங்கள் இருப்பதாகப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கான தடயங்கள், சாட்சியங்கள் இருக்கின்றன என்று அவர்களிடத்திலே ஆவணங்களைக் காட்டிய பின்னாலேதான், 'இத்தனை நாட்களுக்குள்ளாக விசாரணைக்கு நீ தேவைப்படுகிறாய். சரண் அடைய வேண்டும். என்று கோர்ட் தாக்கீது பிறப்பிக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நாளிலே அந்த குறிப்பிட்ட நபர், குற்றவாளி என்று கருதப்படுபவர் சரண் அடையவில்லை என்று சொன்னால், அவனை கோர்ட் ப்ரொகிளைம்டு அபண்டர் என்று சொல்கிறது. Proclaimed offender என்று சொன்னபோதே நிச்சயமாக அவர் மீது இருக்கிற குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம், போதிய தடயம் இருக்கிறது, ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று பொருள். பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்ற காரணத்தாலேதான் காலையில் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் எடுத்துக் கொண்ட



பிற்பகல் 12-35

அந்த பிரபாகரன், அந்த பொட்டு அம்மன் இரண்டு பேரும் நிச்சயமாக இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் போதுமான சாட்சியங்களும், தடயங்களும் துப்பு துலக்கும் இலாக்காவினால், ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீமினாலே காட்டப்பட்ட காரணத்தாலேதான் இன்றைய தினம் அவர்கள் இரண்டு பேரும் ப்ரொக்ளெய்ம்ட் அபண்டர்ஸ் ஆக கோர்ட் அறிவித்திருக்கிறது. எனவே அவர்கள் குற்றவாளிகள். இந்த நாட்டுப் பிரஜைகளும் அல்ல அவர்கள். அவர்கள் மேல் ஏன் உங்களுக்கு இவ்வளவு கரிசனம்? அவர்கள் மேல் ஏன் உங்களுக்கு இவ்வளவு பற்று, பாசம்? அவர்கள் தவறு செய்தவர்கள் என்று சொன்னால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இங்கே பலியான உயிர் சாதாரணமான உயிரா? ராஜீவ் காந்தி இன்றைய தினம் நம்மோடு இல்லை என்று சொன்னால் அதற்கு யார் காரணம்? அவர்களுக்கு உதவியவர் என்று இவரே குற்றம் சொல்கிறார். உண்மைதான். எல்.டி.டி.இ-க்கு நாம் உதவியதே இல்லை என்று நாம் ஒரு போதும் சொல்லவே இல்லை. எல்.டி.டி.இ.-க்கு மட்டுமல்ல, ஈழத்திலே இருக்கின்ற போராளிக் குழுக்கள் அத்தனைக்கும் உதவியிருக்கிறோம் ஒரு காலகட்டத்தில். 1983-ல் அவர்கள் விரட்டி அடிக்கப்பட்ட நேரத்தில் தஞ்சம், தஞ்சம் என்று அடைக்கலம் கோரி வந்தவர்களுக்கு நாம் தஞ்சம் கொடுத்தோம், ஆக்கம் கொடுத்தோம், ஊக்கம் கொடுத்தோம், மறுக்கவில்லை, நான். அன்றைய தினம் தேவைப்பட்டது, அங்கே இருப்பவர்கள் விரட்டி அடிக்கப்படுகிறார்கள்; மக்கள் விரட்டி அடிக்கப்படுகிறார்கள்; போராளிகள் குழுக்கள் விரட்டி அடிக்கப்படுகிறார்கள் என்றபோது நாம் ஆதரவு கொடுத்தோம். அவர்களால் பேச்சுவார்த்தைகளைக்கூட அன்றைய தினம் இலங்கை அரசோடு நடத்த முடியவில்லை. இது என்ன புதிய கோரிக்கையா? தமிழ்மாநிலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழ் மாநிலம் உதயமாக வேண்டும் என்பது புதிதாக வந்த கோரிக்கையா? செல்வநாயகம் காலத்தில் வந்த கோரிக்கை அந்தக் கோரிக்கை, 25 எம்.பி. க்கள். 30 எம். பி.-க்கள் ஜெயித்து போனாலும்கூட அந்த அரசாங்கம் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது கிடையாது.

அதிகபட்சமாக அவர்கள் ஏற்றுக்கொண்டது மாவட்ட கவுன்சில். ஒருபோதும் மாநில கவுன்சில் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலக் கவுன்சில் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டது கிடையாது. இந்தக் கோரிக்கைகளை வைத்து அங்கே போராட்டம் நடத்தினார்கள். தமிழர்கள் அடிக்கப்பட்டார்கள், உதைக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், யாரும் மறுக்கவில்லை. உதவிக்குப் போவது யார்? அந்தப் பிரச்சினை

எழுந்த நாளே அன்றைய தினம் இந்திரா காந்தி அவர்கள்
டெலிபோனில் பேசினார்கள். அன்றைய தினம் இருந்த
ஜூனியஸ் ஜெய்வர்த்தனா இடத்திலே டெலிபோனிலே
பேசினார்கள், சொன்னார்கள். அன்றைய தினம் எந்தச்
சலுகையை அவர் பயன்படுத்திக் கொண்டார்? அவர் அன்
றைய தினம் நான்—அலைன்ட் கன்ட்ரீஸ்—உடைய அதா
வது அணிசேரா நாடுகளினுடைய தலைவராக இருந்தார்
இந்திராகாந்தி அவர்கள். அதை நினைவுபடுத்தினார்.
அண்டை நாட்டிலே நடைபெறுகிறது என்று நான் வேடிக்கை
பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்களுக்கு கலாச்
சாரப் பிணைப்பு இருக்கிறது. சரித்திர வரலாற்றுப் பின்ன
ணிகள் இருக்கின்றன. அங்கே மக்கள் சாகும்போது நாங்கள்
வேடிக்கை பார்க்க முடியாது. எனவே அதை நான் உங்
களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன். நடவடிக்கை எடுக்க
வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது என்று
சொல்லி சுட்டிக்காட்டியபோது கொஞ்சம் மெத்தனம்
அடைந்தது. இருந்தாலும் இங்கே வந்த தமிழர்களுக்குப்
பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்
கிறது என்பதை உணர்ந்தோம். அன்று என்ன சொன்னார்கள்
ராணுவத்தைத் அனுப்பு, ராணுவத்தை அனுப்பு என்று
தினசரி ஊர்வலம் நடந்ததா? இல்லையா? தமிழகத்தில்.
அதற்கு யார் தலைமை தாங்கியவர்கள்? இன்றைய
தினம் ராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும், ராணுவத்தைத்
திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னவர்கள் யாரோ அவர்
கள்தான் அன்றைய தினம் ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலம்
நடத்தி ராணுவத்தை அனுப்பு, ராணுவத்தை விடு என்று சொன்
னார்கள். பேச்சுவார்த்தை நடைபெற்றது. ராஜீவ் காந்தியும்
ஜெயவர்த்தனாவும் வரலாறு காணாத ஒரு ஒப்பந்தத்தை ஏற்
படுத்திக் கொண்டார்கள். எந்தக் காலத்திலும், கனவில் கூட
பார்க்க முடியாத, நினைக்க முடியாத ஒப்பந்தம் அது. இலங்
கையில் தமிழ் மாநிலம். தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்.
வடக்கும், கிழக்கும் இணைந்த மாநிலம். கிழக்கு ஒப்புக் கொள்
கிறதா? முழுவதுமாக நாங்கள் வடக்கே இருப்பவர்களோடு
சேர்ந்து வாழ்கிறோம் என்று ஒப்புக் கொள்கிறார்களா? இல்லை.
அதைப் பின்னர் பார்ப்போம், இப்போது ஏற்றுக்கொள்ளுங்கள்
என்று சொன்னவர் ராஜிவ் காந்தி அவர்கள். ஒப்புக் கொள்
கிறார்களா, இல்லையா என்பதை நாம் பின்னால் பார்த்துக்
கொள்ளலாம் என்றார். எனவே வடக்கும், கிழக்கும் இணைந்த
மாநிலம். மாவட்டமல்ல; மாநிலம். அங்கே தேர்தல் நடை
பெற்றாகவேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட்டவர் அங்கே முதலமைச்
சராக இருக்க வேண்டும் என்று அன்றையதினம் அந்த ஒப்பந்தத்
தில் குறிப்பிடப்பட்டது.

தமிழ் ஆட்சிமொழி அந்தஸ்து பெறுகிறது. முதல் முறையாக
ஈழத்திலே தமிழுக்கு ஆட்சி மொழி அந்தஸ்து கிடைத்திருக்கிறது.
என்னென்ன கோரிக்கைகளுக்காகப் போராடினார்களோ அந்தக்





கோரிக்கைகள் வெற்றி பெறுகிற வகையில் அந்த உடன்படிக்கை
அமைந்தது. அந்த உடன்படிக்கை பற்றி இங்கே வந்து ராஜிவ்
காந்தி பேசி இருக்கிறார். இங்கே சென்னை கடற்கரையிலே
நம்முடைய மறைந்த தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வைத்துக்
கொண்டு அந்த உடன்படிக்கை பற்றிப் பேசி இருக்கிறார். இரண்டு
பேரும் ஒன்றாக இரண்டு கைகளையும் உயர்த்தி இந்த உடன்பாடு
வெற்றிகாண நாம் ஒத்துழைப்போம்; நாம் ஒன்றாக நிற்போம்
என்று இரண்டுபேரும் பேசி இருக்கிறார்கள். அன்றையதினம்
எம்.ஜி.ஆர்.-க்கு உடல்நலம் சரியில்லை என்பது உங்களுக்கெல்
லாம் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். அவர் அமெரிக்
காவிற்குச் சென்றிருக்கவேண்டியவர். என்றாலும் வரலாறு
காணாத ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த உடன்படிக்கையின்
சிறப்புகளை எடுத்து விளக்குவதற்கு ஒரு கூட்டம் நடத்தப்படு
கிறது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதுதான் சிறப்பு என்று
சொல்லி எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்கா போகாமல் நின்று
விட்டார். அங்கே அந்த உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னால்
அத்தனை போராளிக் குழுக்களும், தமிழ் மக்களும் அந்த உடன்
படிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது நல்ல உடன்
படிக்கை என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த உடன்
படிக்கைக்காக ராஜீவ் காந்தியின் உயிர் அன்றையதினம் போக
இருந்தது. அதை மறந்துவிட முடியாது. ராஜீவ் காந்தியினு
டைய உயிர் சில அங்குலங்களிலே தப்பி இருக்கிறது. என்னுடைய
உயிர் சில வினாடிகளில் தப்பி இருக்கிறது என்று அன்றைய
தினம் ஜெயவர்த்தனாவும் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு
எதிராகவும் ஒரு கொலை முயற்சி நடைபெற்றது. அந்த உடன்
படிக்கை முழுக்க, முழுக்க சிங்களவனுக்குச் சாதகமானது என்று
சொன்னால் ஜெயவர்த்தனாவுக்கு எதிராக அந்த இயக்கம் நடை
பெறவேண்டிய அவசியம் என்ன? எனவே முழுக்க, முழுக்க அவர்
களுக்குச் சாதாகமான உடன்படிக்கை அல்ல. இன்னும் சொல்
லப்போனால் நமக்குச் சாதகமான உடன்படிக்கை. முழுமை
யாக நாம் கேட்டதெல்லாம் கிடைத்தது. அவர்கள் கேட்ட
தெல்லாம் கொடுத்தார்கள். அதைப்பற்றியும் சொல்ல முடியும்
ஆனால் பேசுவதற்கு இடம் இருந்தது.

பிற்பகல் 12.40

அந்த உடன்பாட்டை அமல்படுத்துவது யார்? இங்கே கேட்
டார்களே, திரு. இராமச்சந்திரன் அவர்கள். அந்த உடன்
பாட்டை அமல்படுத்துவது யார்? அந்த உடன்பாடு முழுவதுமாக
அமல் ஆகின்ற வரையில் அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்குப் பாது
காப்பு கொடுப்பது யார்? அந்தப் பணியினை இந்திய அமைதி
காக்கும் படை ஏற்றுக் கொண்டது. திரும்பப் பெற வேண்டும்
என்று கோஷம் எழுப்பியவர்கள் யார்? இங்கே இருப்பவர்கள்.
திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அங்கே கோஷம் எழுப்
பியவர்கள் யார், சிங்கள வெறியர்கள். ஆக ஒரு பக்கத்திலே
சிங்களர் அங்கே கோஷம் எழுப்பினார்கள். அன்னிய ராணுவத்
திற்கு இந்த ஊரிலே என்ன வேலை என்று கேட்டார்கள். இங்கே

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 18

இருப்பவர்கள் திரும்பப் பெறவேண்டும் என்றார்கள். இங்கே நாங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்று ஒப்புக் கொண்டு உடன்படிக்கையை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு, இலங்கைக்குப் போனதற்குப் பின்னாலே, சிலகாலத்திற்குப் பின்னாலே, அவர்கள் விரும்பியது அத்தனையும் கொடுத்தும்கூட எதிராகத் திரும்பியவர்கள் யார்? இதே போராளிகள் தான். இதே எல்.டி.டி.ஈ. மறந்துவிட முடியுமா, நம்மாலே. அன்றையதினம் பிரபாகரன் அங்கே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே வந்து இங்கே விமான நிலையத்திலே பல பத்திரிகைக்காரர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே எல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்திய அரசாங்கம் எங்களை அங்கீகரித்து பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது. அதுவே போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே டெல்லி போய் ஒப்புக்கொண்டு வந்து இலங்கையிலே போய் அங்கே இருக்கிற நல்லூருக்குப் பக்கத்திலே பெரிய மைதானத்திலே விழாவாக நடத்தி, அதை ஏற்றுக்கொண்டு பேசி, நம்முடைய தொலைக் காட்சியிலே வந்திருக்கிறது. வேறு தொலைக்காட்சியிலேயும் வந்திருக்கிறது. ஆயுதங்களை ஒப்படைக்கிறேன் என்று சொன்னார்கள். ஆயுதங்களை ஒப்படைத்தார்கள். அது நாடகம் என்று பின்னால்தான் நமக்குத் தெரிய வந்தது. அது உண்மையல்ல. நாடகம் என்று பின்னர்தான் தெரிய வந்தது. வேண்டியது எல்லாம் நாம் கொடுத்தோம். என்னென்ன வேண்டுமென்று கேட்டார்களோ அத்தனையையும் கொடுத்தோம். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராக வரவேண்டும். சீப் எக்சிகியூடிவ் கவுன்சிலர். ஒப்புக்கொண்டோம். கமிட்டியில் 12 பேர் என்று சொன்னால், முதலிலே 6 பேர் வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு 7 பேர் வேண்டும் என்றார்கள். அவர் கேட்ட 7 பேர் கிடைக்கச் செய்தோம். அடுத்த நபர் நாங்கள் சொல்கின்ற நபராகத்தான் இருக்க வேண்டும். அதையும் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக அவர் சொன்னது என்ன? நான் சொல்கின்ற நபர் முதலமைச்சராக இருக்க வேண்டும். நீங்கள் ஒரு பேனலைப் போடுங்கள். ஒரு குழுவைப் போடுங்கள். 3 பேர்களைக் கொண்ட குழுவைப் போடுங்கள். அதிலே ஒருவரை நாங்கள் எடுக்கிறோம் என்று சொல்லி, அதிலே 3 பேர் கொண்ட குழுவைக் கொடுத்தார்கள். அதிலே ஒருவரை அவர்கள் போட்டார்கள். இவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. யாரை? தான் சொன்ன நபரை தானே ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். அதுதான் நாகரீகமா? ஏதோ ஒரு வகையிலே சண்டை வந்து ஆகவேண்டும். ஏதோ ஒரு வகையிலே இந்திய அமைதி காக்கும் படையோடு போராட வேண்டும். ஏதோ ஒரு வகையிலே அங்கே இருக்கின்ற இலங்கை ராணுவத்தோடு போராடவேண்டும். தன்னுடைய சமூக விரோதச்செயல்களுக்குத் துணையாக அது அமையும் என்ற காரணத்தினாலே தான், அன்றையதினம் அவர்கள் மறுத்தார்கள். அன்றையதினம் உண்ணாவிரதம், திலீபனுடைய உண்ணாவிரதம் நடந்தது. மற்ற சம்பவங்கள், அதனுடைய தொடர்ச்



1992 மார்ச் 18] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

சியாக நடைபெற்றன. பிறகு இந்திய ராணுவத்தோடு அவர்கள் போராடத் தொடங்கினார்கள். என்ன நடைபெற்றது? இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக யாழ்ப்பாணத்திற்கு வெளியிலே புலிகளைத் தூக்கி எறிந்து விட்டார்கள், அதற்குப் பின்னாலே அவர்கள் அங்கே போராட, இங்கே இருப்பவர்கள் தினசரி திரும்பப் பெறவேண்டும், அவர்கள் அவர்களாகவே கவனித்துக் கொள்வார்கள், நம்முடைய நாட்டு ராணுவத்திற்கு அந்த நாட்டு மண்ணிலே என்ன வேலை என்று கேட்டார்கள். அவர்களும் நம்முடைய ராணுவத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அங்கே ஒரு இயக்கம் நடைபெற்றது.

பிறகு விஸ்வநாத் பிரதாப் சிங், பிரதமர் ஆனபோது இராணுவம் முழுமையாக திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இன்றையதினம் தமிழர்கள் சாகிறார்கள், சாகிறார்கள் என்று கோஷம் போடுகிறார்களே, அந்தத் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்றால் அதை எப்படிச்செய்வது என்று பார்ப்போம். நமக்கு அந்தக்கடமை இருக்கிறது. யாரும் மறுக்கவில்லை. நமக்கு இருக்கிற கடமையை முழுமையாகப் புறக்கணித்து விடவேண்டும் என்று யாரும் இங்கே சொல்லவில்லை. நம்முடைய கடமைகளை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று நான் உறுதி கூறுகிறேன். இந்தக் கடமைகளுக்காக மற்ற தவறுகளைச் செய்யவேண்டும், தவறுகள் செய்பவர்களை நாம் அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். தவறு செய்பவர்களை இங்கே நடமாட விட வேண்டும் என்று வாதாடுவது எப்படிப்பட்ட வாதமாக இருக்கமுடியும் என்று இந்த அவையினுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன். அவர்கள் சொல்வது, கொலைகாரர்கள், குற்றவாளிகள், ராஜீவ் காந்தியைக் கொன்றவர்கள் இன்னும் தமிழகத்திலே, இந்தியாவிலே உலவிக்கொண்டு இருக்கின்ற பல தலைவர்களை கொன்று தீர்க்கவேண்டும் என்று, பழி வாங்கவேண்டும் என்ற உணர்வோடு நடமாடிக் கொண்டிருப்பவர்களை இந்த மண்ணிலே அனுமதிக்கவேண்டும், அதற்கு நாங்கள் துணையாக இருப்போம் என்கிறார்கள். யாராவது என்னைக் கைது செய்தால் பார்த்துவிடுகிறேன், ஒரு கை என்று சொன்னால் அது தேசத்துரோக குற்றம் ஆகுமா? ஆகாதா? அதற்குத்தான் நேரடியாக பதில் வேண்டும் என்று பல கட்டங்களிலே கேட்டுக் கொண்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்ல, ஊடுருவல்கள், எத்தனையோ வகை ஊடுருவல்கள் இருக்கின்றன. பல வகைகளிலே ஊடுருவல்கள் இருக்கின்றன. இன்றையதினம் நண்பர்கள் சொல்கிறார்கள். வேதாரண்யத்திலே திருக்கோயிலினுடைய அறங்காவலர் ஒருவர். அவருடைய பெயரைக்கூட கொடுத்திருக்கிறார்கள். சிவந்திநாத பண்டாரம். இவர் இலங்கைக் குடிமகன். தகுந்த பாஸ்போர்ட் விசா இல்லாமல் இங்கே தங்கி இருக்கிறார். இங்கே அவர் டிரஸ்ட்டி என்று சொல்லிக் கொண்டு, அறங்காவலர் என்று சொல்லிக்கொண்டு நடமாடிக் கொண்டிருக்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 18

கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். அதற்கான மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். முறையீட்டுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இலங்கைப் பிரஜையான அவர்கள் தமிழகத்திலே தங்கி அந்தக் கோயிலினுடைய அறங்காவலராக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலை உங்களுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். காலம் தாழ்த்தாமல் எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்கு தடை விதித்து, நாட்டிற்கு ஏற்பட இருக்கும் பெருங்கேட்டைத்தடுத்து நிறுத்தவேண்டும். ராஜீவ் காந்தியைப் போன்ற தலைவர்களை இனியும் இழக்கக் கூடிய எந்தச்செயலையும் விட்டு வைக்கக்கூடாது.

" செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் ''.

முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்யக் கூடாத செயல்களைச் செய்ததால் கெட்டுப்போனது. இந்த அரசு அப்படிச் செய்யவில்லை. இருந்தாலும், செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் கேடு வரும் என்று வள்ளுவர் கூறியதை ஏற்று சீர்குலைவு சக்திகளைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் ஒரு பகுதியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தும், குற்றவாளிகள், குற்றம் இழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அது இந்தியப்பிரஜையாக இருந்தாலும் சரி, ஈழத்துப் பிரஜையாக இருந்தாலும் சரி அல்லது நாடற்றவர்களாக இருந்தாலும் சரி, அந்தக் குற்றவாளிகளை கூண்டில் ஏற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, அமைதியான சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான் முதலீடு பெருகி, தொழில் வளம் காணவும் முன்னேற்றப் பாதையில் தமிழகத்தை இட்டுச்செல்லவும் முடியும் என்பதையும் முழுமையாக உணர்ந்து, செயல்பட்டுவரும் முதலமைச்சருக்கு எல்லா ஒத்துழைப்பையும் வழங்குமாறு எல்லாத் தரப்பினரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் ஆயத் தீர்வைத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக தன்னுடைய பதிலுரையைத் தெரிவிக்க வேண்டுமென்று கருதியிருக்கிறார்கள். எனவே, அந்த அளவுக்குக் கால அவகாசம் இப்போது இல்லாத காரணத்தினால் அவர்களின் பதிலுரை நாளை காலை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குப்பின் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

நாளை காலையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள், நாளை மாலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை, பேரவையின் முன் அனுமதி யோடு அறிவிக்கின்றேன். நாளை மாலையிலும் பேரவை கூடும். மாலை 4 மணிக்குக் கூடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19—3—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

23. 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—9—1991ஆம் நாளிட்ட 1202-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

24. திருச்சிராப்பள்ளி, நாகமங்கலம் திருவாளர்கள் ஜெரிகோ பார்வையற்றோர்/உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சி மையத்திற்குச் சொந்தமான டி.எ.கே. 2582 மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன பயிற்சி மையத்தினால் செலுத்தப்படவேண்டிய வரியை 16—7—1991 முதல் சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 16—71971-ஆம் நாளிட்ட 1139-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1992 மார்ச் 18

25, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் (இலங்கை நிவாரணக் குழு) சொந்தமான ஏழு மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தப்படாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன் படுத்தும் வரை மேற்சொன்ன சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய வரியை 16–7–1991 முதல் சாதாரண வரி விதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 16–7–1991–ஆம் நாளிட்ட 1141-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள் அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

26. மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991–92.

V211.31 N92
N92·18-3
600 008
162125

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

©